
வெளிவருகின்றது
ஓகஸ்ட் 22ல்
இசைமுரசு 99
ஒளிநாடா



Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 5 19 — 25 ஒகஸ்ட் 1999 முழக்கம்: 240




வெளிவருகின்றது
ஓகஸ்ட் 22ல்
இசைமுரசு 99
ஒளிநாடா


# புல்மோட்டைக் கடலில் கருப்புலித் தாக்குதல்

## * டோரா மூழ்கடிப்பு * இரு டோராக்கள் சேதம்

(16.09.99)

புல்மோட்டைக் கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும் சிறீலங்கா கடற்படையினருக்கும் இடையில் கடும்சமர் இடம் பெற்றது. திருமலைக்கு வடக்கே 52 கி.மீ. தொலைவில் இன்று அதிகாலை இடம்பெற்ற இச் சமரில் கடற்கரும்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு டோரா பீரங்கிப் படகு மூழ் கடிக்கப்பட்டது. இதன்போது 10 சிறீலங்கா கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இரு பீரங்கிப் படகுகள் சேதப் படுத்தப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை புல் மோட்டைப் பகுதியில் கூட்ட மாக நகர்ந்து கொண்டிருந்த சிறீலங்கா பீரங்கிப் படகுகளை கடற்புலிகள் இடைமறித்து தாக் குதலை ஆரம்பித்தனர். அதி காலை 3.15 மணியளவில் கடற் கரும்புலிகள் டோரா பீரங்கிப் படகை இலக்குவைத்து தாக்கு தலை நடாத்தினர். இத் தாக்கு

(☞ 2ம் பக்கம்)

## இரு கரும்புலிகள் வீரச்சாவு

(16.08.99)

இன்று அதிகாலை நடை பெற்ற கடற்சமரில் டோரா பீரங்கிப் படகு மீதான தாக்குத லில் ஈடுபட்ட கரும்புலி லெப். கேணல். நித்தியப்பனும், மேஜர் அந்தமானும் வீரச்சாவை அடைந்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்

(☞ 2ம் பக்கம்)

## புலிகள் திருப்பி அடித்தனர்

### - கடற்படை அறிக்கை -

(16.08.99)

புல்மோட்டை கடற்பரப்பில் கடற்புலிகளுடன் சமர் இடம் பெற்றபோது தமது கனரக ஆயுதத் தாக்குதலை எதிர்த்து நின்று புலிகள் கடும் பதிலடித் தாக்குதலை நடாத்தியதாக கடற்படை வட்டாரங்களை ஆதாரம் காட்டி சர்வதேச செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன; இதனால் கடும் சமர் ஏற்பட்டதாகவும் தாக்குதல்கள் தொடர்ந்தபோது மேலும் பல கடற்புலி படகுகள் சமரில் பங்கேற்றதாகவும் கூறி யுள்ள கடற்படையினர் நாலு மணிநேரம் கடற்புலிகள் சமரை நடாத்தியதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடற்சமரில் அகப்பட்டுள்ள தமது சகாக் களை மீட்பதற்காக அனுப்பப் பட்ட கடற்படையினர் கரை யோரப் பகுதிகள் மீது சரமாரி யான பீரங்கி தாக்குதலை நடாத்தினர். இதில் அகப்பட்டு

(☞ 2ம் பக்கம்)

## வன்னிப்பாதை போக்குவரத்திற்கு கட்டுப்பாடு இராணுவத்தினர் புதிய நடைமுறை

(17.08.99)

வன்னி மக்கள் எதிர்பார்த் தது போலவே மாங்குளம் ஊடாக திறக்கப்பட்ட புதிய பாதையூடான போக்குவரத் திற்கு இராணுவத்தினர் சனி, ஞாயிறு தினங்களில் தடை விதித்துள்ளனர். இன்றிலிருந்து இதற்கான புதிய நடைமுறை யினை சிறீலங்காப் படையினர் நடைமுறைப்படுத்தியுள்ளனர். புதிய நடைமுறையின்படி, வாரத் தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களில் முப் பது உணவு வண்டிகளையே வன்னிக்கு இராணுவம் அனும திக்கும். அத்துடன் வவுனியாவி லிருந்து வன்னிக்கான பயணிகள் போக்குவரத்தும் மட்டுப்படுத் தப்பட்டுள்ளது.

சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் நோய ளர்களை கொண்டுசெல்லும் அம்புலன்ஸ் வண்டிகளைத் தவிர எக்காரணம் கொண்டும் வேறு வாகனங்கள் புதிய பாதை யினூடாகச செல்வதற்கு அனு மதிக்கப்படமாட்டாது எனவும் வன்னி இராணுவ தலைமைய

(☞ 2ம் பக்கம்)

## பொதுமக்கள் மீது புளொட் குழுவினர் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி இருவர் படுகாயம்

(15.08.99)

மட்டு. செங்கலடி பகுதியில் புளொட் குழுவினர் மேற் கொண்ட துப்பாக்கி சூட்டில் ஒரு பொதுமகன் கொல்லப்பட் டதுடன் இருவர் படுகாயம டைந்துள்ளனர். இச்சம்பவம் இன்று நண்பகல் இடம்பெற் றுள்ளது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்து இராணுவக் கட்டுப் பாட்டு பிரதேசத்திற்கு வந்த மக்கள் மீது துப்பாக்கி பிரயோ கத்தினை மேற்கொண்டனர். இதன்போது பரமசிவன் சிவ யோகன் (24) என்பவர் பலியா னதுடன், எஸ். தனுசன் (12),

(☞ 2ம் பக்கம்)



மாங்குளம் வீதி திறந்துவிடப்பட்டதும் வவுனியாவில் இருந்து வன்னி திரும் பிய மக்களில் தனது மூன்று மாதக் குழந்தையுடன், மகிழ்வுடன் 'மாங்குளம் வீதியை கடந்து வன்னிக்குள் நுழைந்துகொண்டிருக்கும் தமிழ்ப்பெண் ஒருவர்.
நன்றி ஏ.எப்.பி


உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது
Kumars Shop
S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.
38, Rue Saint Quention
75010 Paris. M°: Gare du Nord
Tel: 01 48 74 48 21 / 01 44 53 96 87
Fax: 01 49 70 06 32

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:ccsydney@one.net.au


# கொல்லப்பட்ட கருணாநாயக்க பல இளைஞர்களின் மறைவிற்கு காரணமானவர்

கடந்தவாரம் வாகரைப் பகுதியில் விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட தற்கொடைத் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்ட சிறீலங்கா படையின் மேஜர் கருணாநாயக்க வாழைச்சேனைப் பகுதியில் பல இளைஞர்களின் மர்ம மறைவிற்கு காரணமானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. 90-ம் ஆண்டு ஆனி மாதம் 2-ம் ஈழப்போர் வெடித்த போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பலரைப் படுகொலை செய்த இராணுவ அணியில் கருணாநாயக்காவும் இடம்பெற்றிருந்தார். அதன்பின்னர் வாழைச்சேனைப் பகுதியில் பல இளைஞர்களின் மர்ம மறைவிற்கும் சித்திரவதைகளுக்கும் இவர் சூத்திரதாரியாக இருந்தவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பெருமளவு மாணவர்கள் மர்மமான முறையில் காணாமல் போனதிற்கும் இவரே பொறுப்பெனவும் தெரிவிக்கப்படுகின்றது. சரளமாக தமிழ் பேசும் கருணாநாயக்க விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களைத் தருமாறு கோரி மக்களைத் துன்புறுத்துவதுமுண்டு. இவர் மீது நடாத்தப்பட்ட தற்கொடைத் தாக்குதலின் மூலமாகவே இவரது இராணுவ முக்கியத்துவத்தினை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியுள்ளதாகவும் மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### விடுதலைப் புலிகள் உரிமைகோரினர்

வாகரை இராணுவ முகாமின் இரண்டாவது கட்டளை அதிகாரி மேஜர் கருணாநாயக்க மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொடைத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் உரிமைகோரியுள்ளனர். இவ்வுரிமை கோரலினை புலிகளின் குரல் வானொலி வெளியிட்டுள்ளது. கரும்புலி ரட்ணாகரன் (குமாரசிங்கம் ஆனந்தா மட்டக்களப்பு) என்ற போராளியே இத்தாக்குதலை நடாத்தியதாகவும் இத்தாக்குதலில் மேலும் ஒரு மேஜர் காயமடைந்ததாகவும் வானொலி மேலும் தெரிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### பொதுமக்கள்...

கே.சங்கர் (19) படுகாயமடைந்தனர்.

இன்று காலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் செல்லமுயன்ற புளொட் குழுவினர் விடுதலைப் புலிகளால் தாக்கி விரட்டியடிக்கப்பட்டனர். அதனையடுத்தே புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்துவந்த மக்கள் மீது புளொட் குழுவினர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### புல்மோட்டை...

தலினால் பீரங்கிப் படகு மூழ்கடிக்கப்பட்டது. 10 கடற்படையினர் இதன்போது கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதல்களின் போது கடற்படையினருக்கு துணையாக சிறீலங்கா விமானப் படையினர் தாக்குதலில் ஈடுபட்டனர். கிபீர் யுத்தவிமானங்கள் கடற்புலிகளின் படகுகளை தாக்க முயன்றன.

பல மணிநேரம் இடம்பெற்ற இத் தாக்குதலில் இரு கடற்படைக் கலங்களை கடற்புலிகள் சேதப்படுத்தினர்.

இத் தாக்குதல்கள் தொடர்பாக செய்தி வெளியிட்ட புலிகளின் குரல் வானொலி கடற்படைப் படகுகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டன என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

இத் தாக்குதல் விபரங்களை கொழும்பில் செய்தியாளர்களுக்கு வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சு, தமது பீரங்கிப் படகுகள் புலிகளின் படக்கள் மீது கனரக ஆயுதங்களைக்கொண்டு தாக்கியதாக அறிவித்துள்ளனர். கடற்சமர் பலமணி நேரம் இடம்பெற்றதை ஒப்புக்கொண்ட அமைச்சு இரு புலிகளின் போர்ப் படகுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். மேலும் தமது விமானப் படை புலிகளின் படகுகளை அழித்ததாகவும் அறிவித்துள்ளனர். தமது டோரா படகு சேதப்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்தாத அமைச்சு ஆறு புலிகள் கொல்லப்பட்டதாக கூறியுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### இரு கரும்புலிகள்...

ளது. திருமலையைச் சேர்ந்த நித்தியப்பனின் சொந்தப்பெயர் வீரப்பு சிவனேஸ்வரன் எனவும் மட்டக்களப்பைச் சேர்ந்த மேஜர் அந்தமானின் பெயர் வடிவேலு செந்தில்குமார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### வன்னிப்பாதை...

திகாரி தெரிவித்துள்ளார். பாதை திறக்கும் பொழுதே சகல தரப்பினரும் சந்தேகப்பட்டதைப் போலவே" இராணுவத்தினர் மாங்குளம் பாதையினூடான போக்குவரத்தை படிப்படியாக இறுக்கி வருகின்றனர். அதன் ஒரு கட்டம்தான் மேற்கண்ட புதிய நடைமுறையாகும்.

இதேவேளை அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்களுக்கும் புதிய கட்டுப்பாடு பொருந்தும் என இராணுவம் அறிவித்துள்ளது. பாதை திறந்துள்ள நாட்களில் பிற்பகல் ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் இடையில் மாத்திரமே அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் மாங்குளம் சோதனைச் சாவடி வீதி வழியாக வவுனியாவிற்கு செல்ல அனுமதிக்கப்படும் என இராணுவம் அறிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### புலிகள்...

ஒரு மீனவர் கொல்லப்பட்டும் மற்றுமொரு மீனவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுமுள்ளர்ர். கடந்த வாரமும் இக் கடற்பகுதியில் கடற்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி டோராப் படகு சேதமாகியது.

## கோயிலுக்கு சென்று திரும்பிய பக்தர்கள் மீது இராணுவத்தின் விசமத்தனம்

(15.08.99)

யாழ். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர விழாவுக்கு சென்று திரும்பிய மக்கள் மீது கடந்த வியாழக்கிழமை பண்ணைப்பாலத்திற்கும் மண்டைதீவுக்கும் இடையில் வைத்து வழிமறித்த சிறீலங்கா படையினர் அப் பக்தர்கள் மீது தண்ணீரையள்ளி ஊற்றியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மேற்படி ஆடிப்பூரவிழாவுக்குச் சென்றுவிட்டு பேருந்தில் திரும்பிக் கொண்டிருந்தவர்களுக்கு வீதியில் நின்ற படையினர் வாளிகளில் தண்ணீரை அள்ளி வந்து பேருந்துக்குள் வைத்தே அனைவரையும் நனைத்துள்ளனர். அதனால் பேருந்தில் இருந்த சிறு குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை தண்ணீரால் நனைந்தனர். இராணுவத்தினரின் இவ் அடாவடித்தனத்தால் கோயிலுக்கு சென்று திரும்பிய மக்கள் மனவருத்தத்துடனே திரும்பியதை காணமுடிந்தது.


## பரதநாட்டிய அரங்கேற்றம்



**செல்வி பாமினி பார்வதிதாசன்**

ஒஸ்லோ சிவாஞ்சலி நர்த்தனாலயா ஆசிரியை நாட்டிய கலைமாமணி திருமதி மாலதி யோகேந்திரம் அவர்களின் மாணவி செல்வி பாமினி பார்வதிதாசன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்.

எதிர்வரும் 21.08.99 சனிக்கிழமை பி.பகல் 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

விழா நடைபெறும் இடம்:
**Kongressenetret Folkets Hus**
**Yungsgate 11, N. 0181 oslo, Norway**

## ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
Mº: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# தீர்வுப்பொதிக்கும் ஆர்ப்பாட்டம் யுத்தத்தை நிறுத்தவும் போராட்டம்

(15.08.99)

கடந்த வியாழனன்று கொழும்பில் இரு இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் ஒன்று கூடல்களும் நடைபெற்றுள்ளன. ஒரு போராட்டம் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம்வகிக்கும் நான்கு இடதுசாரி கட்சிகளாலும் மற்றைய போராட்டம் எட்டு அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து 'எமது குரல்' என்ற அமைப்பினாலும் நடத்தப்பட்டது. இடதுசாரிகளின் போராட்டம் லிப்ரன் சுற்றுவட்டத்தில் இடம்பெற்றது. இலங்கை சமசமாசக்கட்சி, இலங்கை மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தேசவிமுகுக்தி ஜனதா கட்சி ஆகிய நான்கு கட்சிகளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தந்த வாக்குறுதிகளான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குதல்; இனப்பிரச்சினை தீர்வு திட்டத்தை உடனடியாக சமர்ப்பித்தல் ஆகியனவற்றை கோரின. அரசில் அங்கம் வகிக்கும் பட்டி வீரக்கோன், கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மென்டிஸ், வாசுதேவ நாணயக்கார ஆகியோர் அன்றைய போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இவர்களின் போராட்டம் நடந்த அதேவேளை, விகாரமா தேவி பூங்காவில் இருந்து எமது குரல் அமைப்பினரின் பேரணி ஆரம்பமாகியது. இப் பேரணி லிப்ரன் சுற்றுவட்டம்வரை சென்றது. இவ் ஊர்வலத்தில், 'எமது அப்பா எப்போது வீடு திரும்புவார்' என்ற பாரிய பதாகையை தாங்கியவாறு சிறுவர் சிறுமியரும் பங்கெடுத்துக் கொண்டனர். இவ்விரு அமைப்பினரின் ஊர்வலம் காரணமாக லிப்ரன் சுற்றுவட்டத்தில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. அத்துடன் அப்பகுதி எங்கும் பலத்த பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களே இப் போராட்டங்களை நடாத்தியதால் இவை வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக இருக்கலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தென்பகுதி கலைஞர்களுக்கு தட்சணாமருதமடுவில் கிடைத்த திடீர் அனுபவம்

(14.08.99)

'யுத்தத்திற்கு எதிராக குரலெழுப்பி இசை நிகழ்ச்சிகள் நடாத்தும் தென்பகுதி கலைஞர்கள் அண்மையில் மடுவிற்கு சென்ற வேளை, அங்குள்ள தட்சணாமருதமடு பகுதிக்கும் விஜயம் செய்திருக்கின்றனர். தட்சணா மருதமடுவில் இருந்து அவர்கள் மீண்டும் திரும்பி வந்தபோது அவர்களை வழிமறித்த விடுதலைப் புலிகள் அக்குழுவினருடன் உரையாடியபோது தமிழர் மீது பெரும் யுத்தத்தை நடத்திவரும் சந்திரிகா தான், சமாதானத்திற்கான வழியை ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியானது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்தபோதும் விடுதலைப் புலிகள் அங்கு தம்மை வழிமறித்தது அவர்களுக்கு அதிர்ச்சியை அளித்ததால், அதுபற்றி விடுதலைப் புலிகளிடம் வினாவியும் உள்ளனர். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் நீங்கள் திரிவது ஆபத்தானதல்லவா என கலைஞர்கள் புலிகளிடம் வினவ, அதற்கு விடுதலைப்புலிகள் இப் பிரதேசம் எமது பிரதேசம் என்பதால் அதனை பரிபாலனம் செய்வது எமது பொறுப்பாகும்.

எமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும்பொழுது இராணுவத்தைப் பற்றி எங்களுக்கு கவலை கிடையாது எனவும் அவர்கள் தெரிவித்துடன், நாம் இப்பகுதியில் உலாவுவதும் இராணுவத்திற்கு நன்றாகவே தெரியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அதன் பின்னர் இக்குழுவினரை விடுதலைப்புலிகள் வழியனுப்பி வைத்துள்ளனர்.

## வன்னி மக்களது நிலையால் தனக்கும் வேதனையாம்

**- டக்ளஸ் -**

(14.08.99)

யாழ். கத்தோலிக்க திருச்சபையின் குருமார் அண்மையில் தமிழ்க்குழுக்ளுக்கு எழுதிய கடிதமொன்றில் வன்னி மக்களது நிலைக்கு காரணமான இந்த அரசிற்கு, தமிழ்க்குழுக்கள் அளிக்கும் ஆதரவினை விலக்கிக்கொள்ளுமாறு கேட்டிருந்தது தெரிந்ததே. இக் கடிதத்திற்கு பதில் கடிதம் ஒன்றினை ஈ.பி.டி.பி டக்ளஸ் தேவானந்தா அனுப்பியிருக்கிறார். அக் கடிதத்தில் வன்னி மக்கள் எழுப்பும் அவலக்குரல் தம்மையும் பதற வைப்பதாகவும் அங்கே மக்கள் படும் துயரம் தமக்கு வேதனை அளிப்பதாகவும் குறிப்பிட்ட அவர், வன்னிக்கான பாதை தற்பொழுது திறக்கப் பட்டதை சுட்டிக்காட்டியதுடன், வன்னிக்கான பாதைத்தடைக்கு அரசினை மாத்திரம் குறை கூறும் போது புலிகளின் நடவடிக்கைகளையும் இங்கு கவனிக்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

வன்னி நிலை காரணமாகவே தமது கட்சி பாராளுமன்றத்தை புறக்கணித்து வருவதாகவும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## புலிகளைச் சந்திக்க வர்த்தக பிரமுகர் லலித் திட்டம்

சிறீலங்காவின் பிரபல வர்த்தகப் பிரமுகரான லலித் கொத்தலாவல, விடுதலைப் புலிகளை சந்திக்கவிருப்பதாக அரச அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள். இச் சந்திப்பானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறும் எனவும் அதற்கு முதல் ஐக்கியதேசியக் கட்சிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குமிடையே சந்திப்பொன்றினை ஏற்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் முடிவுகளையே இவர் வன்னிக்குக்கொண்டு செல்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இவ்வாறான சந்திப்புக் குறித்து விடுதலைப்புலிகள் தரப்பில் எதுவித செய்திகளும் வெளியாகவுமில்லை. இவ்வாறான சந்திப்பிற்கு அவர்கள் இணங்குவார்க்ளா என்பது குறித்தும் தெளிவாக அறிவிக்கப்படவில்லை. விடுதலைப்புலிகளின் அனுமதி கோரி லலித் கொத்தலாவலை வட்டாரங்கள் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கொழும்பு நகர விடுதிகளை மூட இராணுவம் நடவடிக்கை

கொழும்பு நகரில் உள்ள அனைத்து விடுதிகளையும் (லொஜ்) பாதுகாப்பின் நிமித்தம் மூடிவிட சிறீலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் அரசிற்கு அழுத்தம் கொடுத்துவருகின்றனர். பல தடவைகள் இவ்விடுதிகளை மூடி விடுவதற்கு தாம் விருப்பம் கொண்டிருந்தபோதிலும் தமக்குச் சாதகமான பதில் எதனையும் அரசு தராததால் கொழும்பு நகரின் பாதுகாப்புத் தொடர்பான சில சிக்கல்கள் தோன்றியுள்ளதாகவும் அவ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வகையான விடுதிகள் சில விடுதலைப்புலிகளுக்கு புகலிடமும், பாதுகாப்பினையும் வழங்கிவருவது தமக்குத் தெரியவந்துள்ளதாகவும் அவ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## வன்னியில் 30 சதவீதமான பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவில்லை

சிறீலங்கா அரசின் வன்னிக்கான பாதைத்தடையினால் தபாற்சேவைகள் சீர்குலைந்ததால் உரிய வேளையில் க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கான அடையாள அட்டைகள் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இதன் காரணமாக வன்னிப் பகுதியில் 30 சதவீதமான தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக தாம் கல்வி கற்றும் பலனில்லாமல் போய்விட்டது என்ற விரக்தியில் இம் மாணவர்கள் காணப்படுகின்றனர். வன்னிக்கான பாதை திறக்கப்படாத நிலையில் பரீட்சை ஆரம்பமாவதற்கு முதல்நாள் வரையும், தமக்கு அடையாள அட்டைகள் எவ் விதத்திலும் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இம் மாணவர்கள் இருந்தபோதிலும் அந்த நம்பிக்கை பலனளிக்கவில்லை.

## தமிழருக்கு எதிரான துண்டுப்பிரசுரங்கள் கொழும்பில் விநியோகம்

(14.08.99)

தமிழருக்கு எதிரான இனவாதக் கருத்துக்களை திட்டமிட்ட ரீதியில் பரப்பிவரும் சிங்கள இனவாத அமைப்பான 'பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம், நேற்று கொழும்பில் தமிழருக்கு எதி




தமிழாக்கம்:
இதற்கு நீங்கள் உடன்படுகின்றீர்களா?

ரான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளது. அரசாங்கத்தின் புதிய அரசியல் அமைப்பு திருத்தத்தினால் நாடு துண்டாடப்பட்டு தமிழீழம், முஸ்லீம் காலிஸ்தான், தமிழ் மலைநாடு ஆகிய நாடுகளாக உருவாக வழி பிறக்கும் எனவும், இது புலிப் பயங்கரவாதிகளின் எண்ணத்திற்கு உருவம் கொடுக்கும் எனவும் துண்டுப்பிரசுரத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மூன்றில் ஒரு பங்கு கடற்பகுதியும் நிலப்பகுதியில் மூன்றில் இரண்டு பங்கும் தனிய தமிழர்களிடம் சென்றுவிடும். தமிழ் பொலிஸ், தனித் தமிழ் நீதிமன்றம், தனித்தமிழ் பல்கலைக்கழகம், தனித்தமிழ் தொலைக்காட்சி என்பன ஏற்படுத்தப்பட தமிழர்களுக்கு உரிமை கிடைப்பதுடன் முழு நாடுமே பிரபாகரனுக்கு அடிமைப்பட்டு விடும் என்பதால், சிங்கள மக்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ளப் போகிறீர்களா என் கேள்வியும் எழுப்பபட்டுள்ளது.

இத் துண்டுபிரசுர விநியோகத்திலும் நிதி சேகரிப்பிலும் வயதான ஆண்களும் பெண்களுமே ஈடுபட்டிருந்தனர். பயங்கரவாத எதிர்ப்பு இயக்கமானது சந்திரிகா அரசின் பிரமுகர்களுக்கு இடையே நெருங்கிய தொடர்பினை கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆயினும் சந்திரிகா சர்வதேச ரீதியில் சமாதான வேடம் போடுவதால் இந்த அமைப்பினைக் கொண்டே சிங்கள மக்களை தீர்வுப் பொதிக்கு எதிராக திசை திருப்ப திட்டமும் போட்டுள்ளார்.

## கைதடி இளைஞர்கள் மூவரை காணவில்லை

(14.08.99)

யாழ். கைதடியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களை கடந்த சில நாட்களாக காணவில்லை என அவர்களின் உறவினர்கள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். தனிப்பட்ட அலுவல்களுக்காக வீட்டைவிட்டு கிளம்பிய இம் மூவரும், மீண்டும் வீடு திரும்பாததால் கவலையடைந்த இவர்களது உறவினர்கள் இவர்களின் நிலைகுறித்து அருகிலுள்ள முகாங்களில் விசாரித்தபோதும் வழமைபோலவே தமக்கு இவ் இளைஞர்களின் விபரம் எதுவும் தெரியாது என அவர்கள் மறுத்து விட்டனர்.

காணாமல் போன மூவரும் கைதடி கிழக்கு பகுதியைச் சேர்ந்த முருகதாஸ் ஜெயரூபன் (20), பரமானந்தன் சசீகரன் (20), சின்னதம்பி தர்மராசா (25) என அறிவிக்கப்பட்டுள்ளது.


### தமிழீழ தொலைதொடர்பு சேவை
### புதிய இலக்கங்கள்

தமிழீழ மக்களின் தொலைத் தொடர்பு சேவை மக்களுக்கான தனது சேவைகளை மேலும் அதிகரித்துள்ளது. உங்கள் தொடர்புகளை இவ் இலக்கங்களுடன் மேற்கொள்ளலாம் என அறியத் தருகின்றார்கள்.

புதுக்குடியிருப்பு தொலைபேசி இலக்கங்கள்:-
00-873-761-932-759
00-873-762-077-524
தொலைநகல் இலக்கம்:-
00-873-761-932-760
ஸ்கந்தபுரம் தொலைபேசி இலக்கம்:- 00-873-761-932-798
தொலைநகல் இலக்கம்:-
00-873-761-932-810

# 3 கோடி ரூபா செலவில் நாகவிகாரை புனரமைப்பு

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் யாழ். குடாவினை ஆக்கிரமித்த சிறீலங்காப் படையினர் யாழ்.குடாவில் சிங்களப் பேரினவாதத்தின் எச்சங்களை விதைத்துவருவது தெரிந்ததே. யாழ்.நகரில் சேதமாக்கப்பட்ட நாகவிகாரையை புனரமைப்பதற்காக இதுவரை 3 கோடி ரூபாவினை அரசு செலவிட்டுள்ளது. விகாரையில் பிரதிஷ்டை செய்வதற்கென ஆறடி உயரமான புத்தரின் வெண்கலச் சிலை ஒன்றும் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனைவிட விகாரையின் கீழ் தளத்திற்கு பதிப்பதற்காக வெண்கல தரையும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது மிகத் துரிதமாக நடைபெறும் கட்டட வேலைப்பாடுகளை பிரபல சிங்களக் கட்டடக் கலைஞர்கள் இருவர் மேற்பார்வை செய்துவருகின்றனர். விகாரையின் அடித்தளம் நிலத்திலிருந்து 9 அடி ஆழத்திலிருந்து போடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ்.குடாவில் இராணுவத்தினால் சேதமாக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்கு எவ்வித உதவிகளையும் வழங்காத சிறீலங்கா அரசு, நாகவிகாரைப் புனரமைப்பில் பெரும் அக்கறை காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## இது குசும்புங்கோ..!

★ வன்னி மக்கள் எழுப்பும் அவலக்குரல் என்னைப் பதற வைக்கின்றது. அங்கே மக்கள் படும் துயரம் எமக்கு வேதனை அளிக்கின்றது.

- ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தா

☺ ☺ ☺

★ நாட்டில் அமைதி, சமாதானத்தை ஏற்படுத்த அரசியல் தீர்வு ஒன்றை வழங்கவேண்டும் என்ற அரசின் நிலைப்பாட்டில் எள்ளளவும் மாற்றமில்லை. புலிகள் இணக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் மாற்றம் இல்லை. ஆனால் புலிகள் இயக்கம் சமரச முயற்சியில் அக்கறை காட்டவில்லை.

- சிறீலங்காவின் தொலைத்தொடர்புதுறை அமைச்சர் மங்கள சமரவீர

☺ ☺ ☺

# ஜேர்மனியப் பெண் விடுதியில் மர்ம மரணம்

சிறீலங்காவின் மாறவில பகுதியில் உள்ள உல்லாசப் பயண விடுதியொன்றில் தங்கியிருந்த ஜேர்மன் நாட்டுப் பெண் ஒருவர் அங்கு மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார். 27 வயதான இப்பெண் கடந்த ஒருமாத காலமாக இவ்விடுதியில் தங்கியிருந்ததாகவும் இவர் ஜேர்மன் இலங்கை சம்மேளனத்தைச் சேர்ந்த கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இப்பெண்ணுக்கு நேர்ந்த திடீர் மரணம் குறித்த விசாரணைகளை சிறீலங்கா பொலிசார் ஆரம்பித்துள்ளனர்.

# படையினரின் கவனத்தை திசைதிருப்பும் புதிய தாக்குதல்கள்

சிறீலங்காப் படையினர் மீதான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் யுக்தியினை நோக்கும்போது, திட்டமிட்ட சில பாரிய கெரில்லாப் போர் முறைகளை அவர்கள் நடாத்த எண்ணங்கொண்டுள்ளதையும், கிழக்கில் இதனைத் தீவிரப்படுத்தி வருவதையும் உணரக்கூடியதாக இருப்பதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அண்மையில் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட 3 தாக்குதல்களும் இராணுவத்தினர் நகர மையங்களில் நிலைகொண்டிருக்கும் பகுதிகளில் நடாத்தப்பட்டுள்ளன. இத்தாக்குதலானது இராணுவ வலயங்களை ஊடுருவி புலிகள் தீவிரமாக இயங்கத்தொடங்கியிருப்பதைக் காட்டுகின்றது. விடுதலைப்புலிகள் கிழக்கில் குறைந்த அளவில் இருந்தாலும் இராணுவத்தின் கவனத்தை கிழக்கின்மீதே திசைதிருப்பவே அவர்கள் முயற்சிப்பதாகவும் அவ் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகள் புதிய யுக்தி பற்றி முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரிகுணதிலக கருத்துத் தெரிவிக்கும்போது, சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது வாய்ப்பாக அமையும் இலக்குகளை புலிகள் ஒருபோதும் தவறவிடவில்லை என்பதை அண்மைய தாக்குதல் சம்பவங்கள் காட்டுகின்றன. போரில் ஒரு மந்த நிலை நிலவினாலும் வாய்ப்புக் கிடைக்கும்போது இலகுவாக தாக்கக்கூடிய இலக்குகளை அவர்கள் தாக்கிவிடுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் அதிகரிக்கும் தற்கொலைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலை செய்துகொள்வோர், தற்கொலைக்கு முயற்சிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தொண்டர் நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன. தற்கொலை செய்துகொள்பவர்களில் இளைஞர்களும் யுவதிகளுமே அதிகமாக இருப்பதாகவும் குடும்பப்பிரச்சினை, தொழில் இன்மை, காதல் தோல்வி ஆகிய காரணங்களினாலேயே இத் தற்கொலை முயற்சிகள் இடம்பெறுவதாகவும் அனேகமானோர் அலரி விதைகளை உட்கொள்ளுவதன் மூலம் தம்மைத் தாமே அழித்துக்கொள்வதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையில் தினசரி 23 பேர் தற்கொலை செய்துவருகின்றபோதிலும் ஆகக்கூடுதலான தற்கொலைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிகழ்வதாகவே ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக மண்முனை, தென்எருவில்பற்று செயலகப் பிரிவில் உள்ள கிராமங்களிலேயே அதிக எண்ணிக்கையான தற்கொலைகள் இடம்பெறுகின்றன. கடந்த வருடம் மட்டும் 3 மாத காலப்பகுதியில் 18 ஆண்களும், 13 பெண்களுமாக மொத்தம் 28 பேர் தற்கொலை செய்துள்ளதாகவும் 290 பேர் தற்கொலைக்கு முயற்சித்த்மையும் அவ் ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

# ஹற்றன் அதிர்ந்தது சிங்கமலைக் காடுகளில் புலிகள்?

ஹற்றன் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிகாலை 4.45 மணியளவில் பாரிய குண்டுச் சத்தம் ஒன்று எழுந்தது. மிகவும் அதிர்வுடன் கூடிய இச் சத்தத்தினால் பொதுமக்கள் ஹற்றன் நகரில் பாரிய குண்டுவெடிப்பு நடந்துவிட்டதாக பீதியடைந்தனர். ஹற்றனின் சுற்றாடல் பகுதிகளான டிக்கோயா, நோர்வூற், மஸ்கெலியா ஆகிய பகுதிகளிலும் இச் சத்தம் கேட்டுள்ளது. இச் சம்பவத்தினை அடுத்து ஹற்றன் பொலிசார் இதற்கான காரணம் என்ன என்பதை அறிவதற்காக சோதனைகளை நடாத்தினர்.

ஆயினும் குண்டு வெடிப்புகள் எதுவும் நிகழ்ந்ததற்கான தடையங்களை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. இறுதியாக சிங்கமலைக் காட்டுப்பகுதியில் இருந்தே இச் சத்தம் எழுந்ததை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். சிங்கமலைக் காட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகள் முகாம்களை அமைத்து பரீட்சார்த்த குண்டுவெடிப்புகள் எதனையும் மேற்கொண்டார்களா என்பது பற்றியும் பொலிசார் ஆராய்ந்து வருகின்றனர்.

# இரண்டாம் கட்ட செம்மணி விசாரணைக்கு யாழ். சென்ற பொலிஸ் குழு

செம்மணிப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்கென கடந்த 13-ம் திகதி அரச சட்டவாதி ஜசந்த கொதாகொட தலைமையில் சிறீலங்காவின் புலனாய்வு பொலிசார் யாழ். சென்றுள்ளனர். ஆயினும் ஏற்கனவே இப்பொலிஸ் குழுவுக்கு காணாமல் போனவர்களின் பெற்றோர் சாட்சியமளித்தபோதிலும், செம்மணிப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் எனவே விசாரணைகளை திசைதிருப்புவதற்கு இப் பொலிஸ் குழுவினர் பெரும் முயற்சி செய்து வருகின்றனர். எனவே இவ் விசாரணைகள் தொடர்பாக யாழ். மக்களுக்கு பெரும் அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இரண்டாம்கட்ட விசாரணைகளுக்கு பொதுமக்கள் போதியளவு ஒத்துழைப்பினை வழங்குவார்களா என்பது சந்தேகமாகவே உள்ளதாகத் தெரியவருகின்றது.

# திருமலைக் கடலில் 11 பேர் கைது

திருமலை மாவட்டத்தில் சிறீலங்காப் படையினரால் தடைசெய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்ட பவுல்முனை, ஹெலியால ஆகிய கடற்பகுதிகளில் 11 பேரை தாம் கைது செய்ததாக சிறீலங்கா கடற்படை தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் மீதான விசாரணைகள் தற்பொழுது நடைபெறுவதாகவும், திருமலைத் துறைமுகம் தொடர்பான விபரங்களைச் சேர்ப்பதற்காக வந்த விடுதலைப் புலிகளின் உளவாளிகள் இக்கூட்டத்தில் அடங்கியிருக்கலாம் எனத் தாம் நம்புவதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

# ஈ.பி.டி.பி.யிலிருந்து தப்பிவந்தவர் சரணடைந்தார்

ஊர்காவற்துறைப் பகுதியில் உள்ள ஈ.பி.டி.பி. முகாமிலிருந்து மட்டக்களப்பு இளைஞரான எல்.சற்குணம் என்பவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் சரணடைந்துள்ளார். தனது ஊருக்குப் போக தான் பலமுறை கேட்டபோதும் தனக்கு அந்த அனுமதி கிடைக்காததனால் அங்கிருந்து தப்பி வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். செஞ்சிலுவைச் சங்கத்தினர் இந்த இளைஞரை பொலிசார் மூலமாக நீதி மன்றத்தில் ஒப்படைத்தபோது நீதிபதி இவரைச் சொந்த இடத்திற்கு அனுப்புமாறு உத்தரவிட்டுள்ளார்.

# கொழும்பில் தேடுதல் வேட்டை 100 இற்கும் மேற்பட்டோர் கைது

கொழும்பு புறக்கோட்டை, செட்டியார்தெரு, மருதானை, கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் கடந்த 11-ம் திகதியன்று அதிகாலை 3.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை சிறீலங்காப் பொலிசார் தீவிர தேடுதல்வேட்டைகளை நடாத்தியுள்ளனர்.

இத் தேடுதல்களின்போது 100 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வட பகுதியைச் சேர்ந்தவர்களாவர். கைது செய்யப்பட்டவர்களுள் 8 பெண்களும் அடங்குகின்றனர். பொலிஸ் பதிவு அடையாள அட்டை போன்றவற்றை இவர்கள் வைத்திருந்தபோதிலும் இக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

# வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை?

அடுத்தவருடம் பெப்ரவரி மாதமளவில் ஜனாதிபதி தேர்தலையும் அதனைத் தொடர்ந்து பொதுத் தேர்தலையும் நடாத்த அரசு திட்டமிட்டுள்ளதால் இத் தேர்தல்களுக்கு வடக்குக் கிழக்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கத் திட்டமிட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நடவடிக்கைக்கு முன்னோடியாக வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் கடமைகள் அனைத்தும் வடக்குக் கிழக்கு மாகாணசபைக்கு கையளிக்கப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

(மக்கள் கடை அருகில்)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை

59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு! திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதல் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

# மட்டு பொலிஸ் நிலையம் அருகே தாக்குதல்

## 11 பொலிசார் பலி - 20 பேர் காயம்

(11.08.99)

மட்டக்களப்பு — திருமலை வீதியில் பொலிஸ் நிலையம் அமைந்திருக்கும் பகுதியில் நடாத்தப்பட்ட தாக்குதல் ஒன்று கிழக்கு பாதுகாப்பு வட்டாரங் களை மீண்டும் உலுக்கியுள்ளது. மேஜர் கருணாரட்ணா மீது வாக ரைப்பகுதியில் வைத்து நடாத்தப் பட்ட குண்டுத் தாக்குதலால் அதிர்ந்து போயிருக்கும் சிறீ லங்கா தரப்பிற்கு இத் தாக்கு தல் மேலும் அதிர்ச்சியை அளித்துள்ளது.

பொலநறுவை நோக்கி சென்று கொண்டிருந்த வாகனத்தொடர் மீது இக் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இதனால் 11 பொலிசார் பலியாகியதுடன் மேலும் 20 பேர் காயமடைந்துள் ளனர். பலியானவர்களில் அதி காரிகளும் அடங்குகின்றனர்.

கடந்த வருடம் யாழ். மாநக ரசபை கட்டடத்தில் வைக்கப் பட்ட கூரைக்குண்டினைப்போ லவே இக்குண்டுத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாக தெரிய வருகின்றது.

இத் தாக்குதல் பற்றிய விபரம் வருமாறு: மட்டக்களப்பு வெபர் மைதானத்திற்கு அருகே அமைந் துள்ள 233வது இராணுவப் படைப்பிரிவு தலையலுவலகத் தில் இருந்து நண்பகல் 12 மணி யளவில் இராணுவ வாகனத் தொடரணி ஒன்று திருமலை வீதி புகையிரத நிலைய சந்தியை நெருங்கியதும் இவ் வாகனத் தொடரணி மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. தாக்குதல் இடம்பெற்ற இடமானது மட்டு பிரதான பொலிஸ் நிலையத் தில் இருந்து சுமார் ஐநூறு மீற் றர் தூரத்தில் இருக்கும் பகுதி யாகும்.

'சைட் சாஜர்' எனக்கருதப்படும் குண்டுவகையே இத்தாக்குத லுக்கு பயன்படுத்தப்பட்டதாக தெரியவருகிறது. இத் தாக்குத லுக்கு இலக்கான பொலிஸ் வாக னம் சுமார் பதினைந்தடி தூரத் திற்குத் தூக்கியெறியப்பட்டது.

காயமடைந்தவர்கள் அவசர அவசரமாக அதே வாகனத் தொடரணியில் வந்த இராணு வத்தினரால் மீட்கப்பட்டு அவ சர சிகிச்சைக்கா கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இச் செய்தியை கேள்விப்பட்ட மட் டக்களப்பு படையினர் நகரில் நின்ற மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். கபொத பரீட்சைக்கு சென்ற மாணவர்கள் பலரும் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின் றனர். கடந்த ஒரு வருடமாக திருத்த வேலைகளுக்காக மூடப் பட்டுக்கிடந்த கடையொன்றின் முகப்புப்பகுதியிலேயே குண்டு பொருத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகித்த மட்டக்களப்பு இரா ணுவத்தினர், அக்கடை உரிமை யாளர்களை கைதுசெய்து கொண்டு சென்றுள்ளனர். தற் பொழுது மட்டக்களப்பில் இரு- ந்து கிடைக்கும் செய்திகளின் படி நகரில் என்றுமில்லாத அள விற்கு படையினரின் கெடுபிடி கள் அதிகரித்திருப்பதாக தெரி விக்கப்படுகின்றது.

# மீன்பிடிக்க போனவர்கள் பிணமான கோரம்

(14.08.99)

யாழ். சிறுத்தீவு கடற்பகுதியில் தமது அன்றாட ஜீபநோபாயத்திற் காக மீன்பிடிக்கச்சென்ற இரு ஏழை மீனவர்கள் படையின ரின் துப்பாக்கி பிரயோகத்தில் பலியாகியுள்ளார்கள். கடந்த 11ம் திகதி அதிகாலை இச்சம்ப வம் இடம்பெற்றுள்ளது. இவர் கள் மீனவர்கள் என தெரிந்திருந் தும் படையினர் இக் கொடு மையை புரிந்துள்ளனர். அத்து டன் பலியானவர்களது சடலங் களையும் படையினர் வைத்தி யசாலையில் ஒப்படைக்காமல் அவர்களை புலிகளாகக் காட்டும் தந்திரத்தினையும் கையாண்டுள் ளனர். துரைச்சாமி வில்சன் (45), அந்தோனி யயூடா (45) ஆகியோரே பலியான அப்பாவிகளாவார்கள்.

# புளொட் கொலையாளி கைது

(14.08.99)

கடந்த மார்ச் மாதம் உடுப் பிட்டிப் பகுதியைச் சேர்ந்த ரா.ராஜேஸ்வரன் என்ற இளம் குடும்பத்தவரை கொடூரமான முறையில் வெட்டிக்கொண்ட புளொட்டை கும்பலைச் சேர்ந்த ஜெயா மாஸ்ரர் என்றழைக்கப் படும் ஜெயச்சந்திரன் சிறீலங்கா பொலிசாரினால் கடந்த 9ம் திகதி கைது செய்யப்பட்டுள் ளார்.

இராஜேந்திரன் என்பவரின் கழுத்தினை துண்டித்த ஜெயாவின் கும்பல் அவரது தலையினை யாழ். நகரிலும், முண்டத்தினை நெல்லியடியிலுள்ள புளொட் அலுவலகக்கூடத்திலும் போட் டிருந்தது.

இப்படுகொலையானது யாழ். மக்களை பீதிக்கும், புளொட் மீது கடுமையான ஆத்திரத்திற்கும் உட்படுத்தியது. முண்டம் புளொட் அலுவலக மலக்குழியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பின்னரே ஜெயா கும்பலின் இக் கொடூ ரம் மக்களுக்கு வெளிப்பட்டது. தற்பொழுது கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட் டுள்ளவர் புளொட்டின் சிரேஷ்ட உறுப்பினராவார்.

# ராசிக் உறுப்பினர் சுட்டுக்கொலை

(14.08.99)

மட்டக்களப்பு கல்லடிப்பகுதி யில் வைத்து ராசீக்குழு உறுப்பி னர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். கல்லடி சிறீலங்கா படையினரின் முகாமிற்கு அரு கில் உள்ள தனது வீட்டிற்கு சென்றபோதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை மட்டு. அமிர்த களி மாமாங்கேஸ்வரர் ஆலைய தீர்த்த உற்சவத்தில் பொதுமக்க ளுக்கு தொல்லைகொடுக்கச் சென்ற ராசீக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. முன்னதாக ஆலைய உற்சவகாலத்தில் இரா ணுவமோ அல்லது தமிழ்க் குழுக்களோ ஆலைய பகுதியில் நடமாட மாட்டாகள் என மட் டக்களப்பு இராணுவ உயர் அதிகாரிகள் உறுதிஅளித்திருந்த போதிலும் அவ் உறுதிமொழி காப்பாற்றப்படவில்லை.


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?
கவலை வேண்டாம்
இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு



தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

**இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!**

இப்பொழுது ஜேர்மனி, பிரித்தானியாவிலுள்ள Naturina® முன்னணி மருந்தகங்களிலும் (Apotheke) கிடைக்கும்




எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
*நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.*

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
*நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.*

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
*இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.*

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 (நாம் தமிழும் கதைப்போம்)
Internet: http://www.intercare-naturina.com

பிரித்தானிய தொடர்புகளுக்கு:
Tel: 0171-5150550
Mobil: 07930-471356

கொழும்பு ஆய்வாளர் தாரகி

# இராணுவம் வடக்கில் சிக்குண்டுள்ளது

## சந்திரிகாவின் போர்த் தந்திரம் செலவீனமானது

மட்டக்களப்பு புறநகர் பகுதிகளான புதுநகர், திமிலைத்தீவு பகுதிகளை பொலிசார் சுற்றிவளைத்தனர். விருந்தினர்களை இரு மணி நேரத்திற்கு மேல் வைத்திருக்கவேண்டாம் என பொலிஸார் குடிமக்களைக் கேட்டுக்கொண்டனர். கறுப்பு ரீ சேட்டுக்களை அணிய வேண்டாம் எனக் கேட்கப்பட்டனர். ரேடியோக்களையும் தொலைக்காட்சிகளையும் சத்தமாக 'போட்வேண்டாம் எனச் சொல்லப்பட்டது. பிற்பகல் 7 மணிக்குப் பிற்பாடு வெளியே போக வேண்டாம் என உத்தரவிடப்பட்டது. நோயாளிகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல, ரோச்லைட்டுக்களிற்குப் பதிலாக அரிக்கன் விளக்குகளையும் ரக்டர்களுக்குப் பதிலாக துவிச்சக்கர வண்டிகளையும் பாவிக்குமாறு உத்தரவிடப்பட்டது. மட்டக்களப்பு நகரின் புறத்தே உள்ள நகர, கிராம மக்களுக்கு இது அறிவிக்கப்பட்டது. கிராம சேவகர்கள் ஊடாகவும் இது அறிவிக்கப்பட்டது.

இரு துவிச்சக்கர வண்டி குண்டுகளும் பள்ளமீன்மடுப் பகுதியில் இடம்பெற்ற பொலிசார் மீதான தாக்குதலும் மட்டக்களப்பு நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகளை படைகள் அதி



சந்திரிகா



ரணில்

கரிக்க தூண்டியது.

நிந்தாவூர் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரு முஸ்லீம் கிராமம். அங்கு ஒரு ஊர் காவல் படை வீரன் கொல்லப்பட்டான். மதிலிடப்பட்ட மின் மாற்றி மையமொன்றின் உள்ளே இருந்து நான்கு வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. வடமாராட்சியில் இராணுவத்துடன் கரையோரக் காவலில் ஈடுபடுமாறு இராணுவம் நிர்ப்பந்திப்பதாக மீனவர்கள் முறையிடுகின்றனர்.

தூய்மைப்படுத்தப்பட்ட உயர் பாதுகாப்பு வலயம் எனக் கருதப்படும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இராணுவம் மற்றும் பொலிஸார் மீது புலிகள் கொடுக்கும் அழுத்தத்தைப் பட்டியல் இடலாம்.

ஈழப் போரில் ஆதிக்கம் செலுத்துவதற்கான பொதுசன ஐக்கிய முன்னனி அரசின் மூல தந்திரோபாயத்தையே இங்கு நாம் ஆராய முயல்கின்றோம்.

ஐ.தே.க. கொள்கையானது, வடக்கில் அடக்கி கிழக்கை கட்டுப்படுத்துவதாகும். சந்திரிகா இதனை கண்டித்ததுடன் வடக்கை வெல்ல புறப்பட்டு அதன்மூலம் போரை வெல்வதாகும். பொருளாதார ரீதியாக இது மிகவும் அறிவுபூர்வமான அணுகுமுறையாகும்.

ஐ.தே.க.வின் தந்திரோபாயமானது அடிப்படையில் தவறானது. ஏனெனில் புலிகள் வடக்கில் ஆளுமை செய்கையில் நாட்டின் தேசிய வளத்தை நீண்ட காலத்திற்கு விரயமாக்கும் முயற்சி இது எனக் கூறப்பட்டது.

சந்திரிகாவின் தந்திரோபாயமானது நியாயபூர்வமானது என பாராட்டும் விற்பன்னர்களால் கூறப்பட்டது. எனெனில் புலிகளை முறியடிப்பதற்கான ஒரு வெற்று காசோலையை கொண்டதாக அமையும் எனச் சொல்லப்பட்டது,

பாதுகாப்புச் செலவீனம் மிகப் பெரிதாக அமையும். ஆனால் தேசிய பொருளாதாரத்திற்கு இச் செலவீனம் மிகக் குறைந்தது எனவும் ஐ.தே.க. போர் தந்திரோபாயத்தினால் ஏற்படும் நீண்டகாலப் பொருளாதாரச் சேதத்திலும் மிகக் குறைவானது எனவும் கருதப்பட்டது. ஏனெனில் 1997-ன் பிற்பகுதியில் புலிகள் ஒடுக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

புலிகள் வன்னிக் காடுகளின் சிறு பகுதியிலும் கிழக்கின் சில மூலைகளிலும் ஒதுக்கப்பட்ட பின் வடக்கு கிழக்கை சாந்தப்படுத்தும் முயற்சி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்பட்டது. படையினர் பகுதி பகுதியாக வெளியேறுவர். பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படும். பாதுகாப்பு செலவீனம் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவிற்கு குறையும். பொருளாதார செழுமை இதனைப் பின்தொடரும் என எதிர்பார்க்கப்பட்டது.

வன்னியில் இராணுவம் பாதை திறக்க செல்லும் வரை அனைத்தும் சரியாக இருந்தன. இராணுவம் அகப்பட்டுக்கொண்ட சகதியை மேலும் விபரிக்கத் தேவையில்லை.



தற்போது ஐ.தே.க. தந்திரோபாயம் பொருளாதார ரீதியாக புத்திசாலித்தனமானதும் சரியானதும் போன்றுள்ளது.

வடக்கை கட்டுப்படுத்துவதற்கான பலத்தின் சிறு பகுதியே கிழக்கிற்கு தேவைப்பட்டது. இராணுவம் ஆறு படைப் பிரிவுகளை வடக்கில் புலிகளுடன் மோதவும் கட்டுப்படுத்தவும் பாவிக்கின்றது. ஆனால் காட்சிப் பொருளென கருதப்படும் யாழ்ப்பாணத்தில், புலிகளால் தொடர்ந்தும் கிளைமோர் தாக்குதலை நடாத்த முடிகிறது. உள்ளூர் நிர்வாக உறுப்பினர்களை அழிக்க முடிகிறது. நிதி சேகரிக்க முடிகின்றது. அமைதிப்படுத்தல் என்பது சாத்தியமற்றதாகியுள்ளது.


**வடக்கை கட்டுப்படுத்துவதற்கான பலத்தின் சிறு பகுதியே கிழக்கிற்கு தேவைப்பட்டது. இராணுவம் ஆறு படைப் பிரிவுகளை வடக்கில் புலிகளுடன் மோதவும் கட்டுப்படுத்தவும் பாவிக்கின்றது. ஆனால் காட்சிப் பொருளென கருதப்படும் யாழ்ப்பாணத்தில், புலிகளால் தொடர்ந்தும் கிளைமோர் தாக்குதலை நடாத்த முடிகிறது. உள்ளூர் நிர்வாக உறுப்பினர்களை அழிக்க முடிகிறது. நிதி சேகரிக்க முடிகின்றது. அமைதிப்படுத்தல் என்பது சாத்தியமற்றதாகியுள்ளது.**

கைப்பற்றப்பட்ட பிரதேசத்துடன் நாட்டின் பிற பகுதிகளுக்கும் பிற நாடுகளுக்கும் தொலைத் தொடர்பை ஏற்படுத்துவது சகஜநிலையை ஏற்படுத்துவதற்கான தவிர்க்க முடியாத தேவையாகும். இதனடிப் படையில் அரசு யாழ் மக்களுக்கு தொலைபேசி தொடர்புகளை ஏற்படுத்தியது. ஆனால் இராணுவம் இவ் ஏற்பாட்டுடன் இப்போது உடன்படவில்லை.

தமது இலத்திரனியல் தொடர்புகளுக்கான 'மொடம்' மற்றும் தொலைத் தொடர்புகளுக்கு அனுமதி வழங்க பாதுகாப்பு அமைச்சு தாமதிப்பதாக யாழ். கல்வி அமைச்சு முறையீடு செய்கின்றது.

யாழ்ப்பாணத்திற்கு தொலைத் தொடர்பை ஏற்படுத்தி வசதி செய்வது இராணுவ நலன்களுக்கு ஏற்புடையதல்ல என இராணுவத்தின் ஒரு பகுதி கருதுகின்றது போன்று தெரிகிறது. படையினர் ஈடுபடும் மிகச்சிறிய விடயங்களை இது உடனடியாக புகலிடத் தமிழர்களுக்கு தெரியப்படுத்திவிடும் என்ற பிரச்சனை மட்டுமல்ல, புலிகள் வரி வசூலிப்பு மற்றும் நிழல் அரசாங்கம் என்பனவற்றை தொலைபேசியூடாக செய்கின்றார்கள் எனக் கருதப்பட்டது.

மேலும் வன்னியிலிருந்து நேரடியாக தொலைபேசி மூலம் தமது பிரதான தொடர்புகளை புலிகள் மேற்கொள்கின்றனர். குறைந்த மனித வலுவுடன் நல்ல விளைவை பெறும் புலிகளின் அணுகுமுறையே இது.



வடக்கை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது செலவீனமானது. சமர் புரிவதும் செலவீனமானது. பாதுகாப்பு செலவீனக் குறைப்பினால் பொருளாதாரம் உற்சாகம் பெறுவதற்கான அறிகுறி எங்கும் தென்படவில்லை. எனவே அனுபவமூடாக பெறப்பட்ட பார்வையில் ஐ.தே.க யின் போர் தந்திரோபாயம் நீண்டகாலத்திற்கு கூட மலிவானது. ஆனால் இன்று திரும்பிப் போக வழியில்லை.

*('மிட்வீக் மிரர்' என்ற இதழில் வெளிவந்த ஆங்கில மூலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது)*

# விடுதலைப்புலிகள் இல்லாமல் அரசியல் தீர்வு எப்படி சாத்தியமாகும்! - ரணில்

**கேள்வி:** மக்கள் கட்சி அரசு இந்த நாட்டின் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கென வெளியிட்ட தீர்வுத் திட்டத்திற்கு உங்களது ஆதரவு இல்லை. அப்படியானால் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தாங்கள் வைத்திருக்கும் திட்டம் என்ன?

**ரணில்:** இந்த தீர்வுத்திட்டத்தினால் அரசு எதை எதிர்பார்க்கிறது?

**கேள்வி:** அரசு என்ன எதிர்பார்க்கின்றது என்பது வேறு விடயம். நீங்கள் அதாவது ஐ.தே.க. என்ன வேலைத்திட்டத்தை வைத்தீர்கள்?

**ரணில்:** இல்லை, இல்லை அரசு தீர்வுத் திட்டத்தின் மூலம் எதனை அடைய முயல்கின்றது சொல்லுங்கள்?

**கேள்வி:** இனப் பிரச்சினையைத் தீர்க்கத்தான்!

**ரணில்:** இனப்பிரச்சினையை எப்படித் தீர்ப்பது? அரசியல் தீர்வுத்திட்டத்தின் முதலாவது திட்டம் விடுதலைப்புலிகளை ஓரம் கட்டுவது. அரசியல் ரீதியாக புலிகளை ஓரம்கட்ட இந்நாட்டில் சரியான வழிகள் கிடையாது. அரசு ஜயசிக்குறுவில் வெற்றி பெற்றிருந்தால், யாழ்.குடாவை கைப்பற்றியதில் வெற்றி கிடைத்திருக்குமர்னால், விடுதலைப் புலிகள் தாமாகவே ஓரம்கட்டப்பட்டிருப்பார்கள். இல்லை

*அரசு ஜயசிக்குறுவில் வெற்றி பெற்றிருந்தால், யாழ்.குடாவை கைப்பற்றியதில் வெற்றி கிடைத்திருக்குமானால், விடுதலைப் புலிகள் தாமாகவே ஓரம்கட்டப் பட்டிருப்பார்கள். இல்லையேல் தோல்வியடைந்திருப்பார்கள். அப்படி நடந்திருந்தால் அரசு அரசியல் ரீதியான வழி முறைகளைக் கையாள வழியேற்பட்டிருக்கும். ஆனால் புலிகள் இன்னமும் போரிட்டுக் கொண்டு தானிருக்கின்றார்கள். அரசு எப்படியாவது ஒரு தீர்வு ஏற்படும் என நம்பினாலும், அது சாத்தியமாகவில்லை. விடுதலைப் புலிகள் இல்லாமல் ஒரு தீர்வுக்கு வர அரசால் இயலவில்லை.*

யேல் தோல்வியடைந்திருப்பார்கள். அப்படி நடந்திருந்தால் அரசு அரசியல் ரீதியான வழி முறைகளைக் கையாள வழியேற்பட்டிருக்கும். ஆனால் புலிகள் இன்னமும் போரிட்டுக் கொண்டு தானிருக்கின்றார்கள். அரசு எப்படியாவது ஒரு தீர்வு ஏற்படும் என நம்பினாலும், அது சாத்தியமாகவில்லை. விடுதலைப் புலிகள் இல்லாமல் ஒரு தீர்வுக்கு வர அரசால் இயலவில்லை. இந்த அரசிற்கு யுத்தத்தின் மூலம் சரியான பலன் கிடைக்காவிடின் எப்படி விடுதலைப்புலிகள் இல்லாமல் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். இதற்கு சந்திரிகா பதில்கூற வேண்டும். இங்கு பொய்களைக் கூறிக்கொண்டு தொடர்ந்து இருக்க முடியுமா? எப்படி என நேரடியாக கூற வேண்டும். மக்களை ஏமாற்றிய காலம் போய்விட்டது.

**கேள்வி:** அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாக செயலாற்றிய பாராளுமன்ற தெரிவுக்கு தற்போது செயலிழந்துபோயுள்ளது. இருந்தும் வேறு வழிகளினூடாக மக்கள் கட்சியும் ஐ.தே.க.வும் இப்பிரச்சினைபற்றி கலந்துரையாடுகின்றன. இந்த கலந்துரையாடல்கள் குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்.

**ரணில்:** உண்மையில் இங்கு நடக்க வேண்டியது அரசு புலிகளுடன் பேசுவதே. அதற்காக எம்மிடம் ஒத்துழைப்புக்காகக் கலந்துரையாட வேண்டும். விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு முன் இத் தீர்வுத் திட்டத்தில் உள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்யவேண்டும் என்பதே இந்தக் கலந்துரையாடல்களின் நோக்கம். ஆனால் சிறு கட்சிகளின் ஆதரவுடன்தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதாகவும், ஐ.தே.க.வின் ஒத்துழைப்பு தேவையில்லை என்றும் சந்திரிகா கூறியுள்ளார்.

அந்த சிறு கட்சிகளை இறுகப்பிடித்துக் கொண்டு ஓடுவதே சிறந்தது என சந்திரிகாவிற்கு கூறுகிறேன். விடுதலைப்புலிகளும் சிறு கட்சிகளும் தமது பிரதேசங்களின் அபிவிருத்தியை வலியுறுத்துகின்றன. பொருளாதார அபிவிருத்தி இல்லையென்றால் இந்த சிறு கட்சிகளுக்கு அடுத்த தேர்தலில் போட்டியிடுவதென்பதை நினைத்துப்பார்க்க வேண்டியதில்லை. பொருளாதார அபிவிருத்தி பற்றி கேள்வி கேட்டால் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால் பொருளாதார அபிவிருத்தி தானாக ஏற்படும் என்கிறார்கள். அதை சிங்கப்பூர் போல் அபிவிருத்தி செய்ய முடியுமாம். அது நிறைவேறியதும் வடக்கு கிழக்கு மாத்திரமல்ல நாட்டின் ஏனைய பகுதிகள் கூட விருத்தியடையுமாம். ஆனால் அடுத்த ஐந்து வருடத்திற்கு கொழும்பு துறைமுகம் தவிர்ந்த எந்த ஒரு துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்பட முடியாது என்பது தான் உண்மை.

*- லக்பிம வார இதழுக்கு வழங்கிய பேட்டியொன்றிலிருந்து*

# சிங்களம் கூறும் சில...

## - மாந்தன் -

## மாங்குளம் பாதை திறப்பு புலிகளுக்கு கிடைத்த வெற்றி

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சில வாரகாலம் நடந்த கடிதப்போக்குவரத்தின் இறுதியில் அத்தியாவசிய போக்குவரத்துக்கென யாழ்-கண்டி வீதியில் தரைத்தொடர்பு ஒன்று கடந்தவாரம் ஏற்படுத்தப்பட்டது. இந்த பாதைத் திறப்பு நடவடிக்கையானது அரசியல் ரீதியாக அரசுக்கு எப்படியோ புலிகளைப் பொறுத்தவரை வெற்றியை பெற்றுக்கொடுத்த ஒரு நிகழ்வாகும்.

இந்த பாதைத் திறப்பின் மூலம் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொடர்பின் மூலம், அரசு கூறும் அத்தியாவசிய போக்குவரத்து என்பதனைவிட வேறு பல அரசியல் விடயங்களும் அடங்கியுள்ளன. பாதைதிறப்பு என்கின்ற பதத்துடன் தற்போது விடுதலைப்புலிகளும் இராணுவமும் அதாவது அரசும் கீழ்மட்ட தொடர்பை ஏற்படுத்திக்கொண்டுள்ளன. இது எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய உயர்மட்ட பேச்சிற்கு வழியேற்படுத்திக்கொடுக்கக்கூடிய ஒரு காரணியாகவும் அமையலாம். ஆனால் இவைகள் வன்னிப்பகுதியில் கரிகாலனோ அல்லது இராணுவத் தளபதிகளோ தன்னிச்சையாக அல்லாமல், இரு தரப்பு தலைமைகளின் உத்தரவுடன் மேற்கொண்ட செயற்பாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. இராணுவத்தைப் பொறுத்தவரை முப்படைத் தளபதி என்னும் பொறுப்பை வகிக்கும் ஜனாதிபதியின் உத்தரவின்படியும், விடுதலைப்புலிகள் அமைப்பைப் பொறுத்தவரை அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உத்தரவுப்படியுமே இவை நிகழ்ந்துள்ளன. அப்படியானால் இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட தயாராக இருப்பதைத்தானே இவை மறைமுகமாக காட்டி நிற்கின்றது.

இந்த தொடர்பின் மூலம் அரசு பின்னடைவினைச் சந்தித்துள்ளது என்று தான் கூறவேண்டும். அதேபோல் விடுதலைப்புலிகள் சில விடயங்களில் வெற்றிபெற்றுள்ளனர் என்பதையும் ஒத்துக்கொள்ளவேண்டும். எப்படியென்றால் தன்னால் தடைசெய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ள ஒரு அமைப்புடன் அரசு தொடர்பு ஏற்படுத்திக்கொண்டுள்ளது. அதேபோல் இன்னும் 20 விகிதமான மனோ பலமே புலிகளிடம் எஞ்சியுள்ளது எனக்கூறி அதனை விரைவிலேயே அழித்துவிட தம்மால் இயலும் எனப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் மக்களுக்கு வழங்கிய உறுதி இத்துடன் தகர்ந்துபோயுள்ளது என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இன்றைக்கு இரண்டு

அதேபோல் விடுதலைப்புலிகள் சில விடயங்களில் வெற்றிபெற்றுள்ளனர் என்பதையும் ஒத்துக்கொள்ளவேண்டும். எப்படியென்றால் தன்னால் தடைசெய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ள ஒரு அமைப்புடன் அரசு தொடர்பு ஏற்படுத்திக்கொண்டுள்ளது. அதேபோல் இன்னும் 20 விகிதமான மனோ பலமே புலிகளிடம் எஞ்சியுள்ளது எனக்கூறி அதனை விரைவிலேயே அழித்துவிட தம்மால் இயலும் எனப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் மக்களுக்கு வழங்கிய உறுதி இத்துடன் தகர்ந்துபோயுள்ளது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

வருடங்களுக்கு முன் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களது எண்ணிக்கை இப்போது இரண்டாயிரமாக குறைந்திருக்கின்றது என்றும், அதேவேளை பாதுகாப்புப் படைகளின் மனோதிடம் என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளது என்றும், இதனால் யாழ் -கண்டி வீதியில் பாதைத்திறப்பிற்கு புலிகளுடன் பேசுவதென்பது அவசியமேயில்லாத ஒன்று. புலிகளை அப்பிரதேசங்களில் இருந்து துரத்தியடித்துவிட்டு அரசு தனக்கு தேவையானதை நிறைவேற்றிக்கொள்ளும் என்றும் கூறினார். ஆனால் இரண்டு வருடங்களின் பின்பு நடந்திருப்பதோ வேறு!

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்கின்ற விடயத்தில் சமாதான தீர்வு ஏற்படுத்தும் அதி உயர் தேவை ஐ.தே.கட்சியை விட சுதந்திரக்கட்சிக்கே அதிகமாக உண்டு. காரணம் கடந்த ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் பல தடவைகள் பலவிதமான தீர்வுகள் கலந்தாலோசிக்கப்பட்டபோது அதற்கு எதிராகச் செயற்பட்டது சுதந்திரக்கட்சியே. சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் விஜயகுமாரணதுங்க இனப்பிரச்சினையில் தீர்வு காணும் விடயமாக யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்கும் பயணம் மேற்கொண்டபோது, அதற்கு எதிராக இனவாதிகளுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டது சுதந்திரக்கட்சிதான்.

இன்று ஐ.தே.கட்சியாகட்டும், மக்கள் முன்னணியாகட்டும், மக்களின் அபிலாசைகளையும் விருப்பு வெறுப்புக்களையும் 'மறந்து' இனி மேலும் நடவடிக்கை எடுக்கக்கூடாது. அதேபோல் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கும்வரை அவர்களுடன் பேச்சுவார்த்தை நடக்கமாட்டாது என்னும் பதத்திற்கும் இனிமேல் அர்த்தம் கிடையாது.

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

**யாழ் ரவல்ஸ்**

**YARL TRAVELS**

*Thomas Mann Str 21,53111 Bonn*

உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்

பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985


GE-Pub.

# இந்தியாவில் நிகழ்ந்த கோர இரயில் விபத்தின் காரணம் கண்டறியப்பட்டது

*(14-08-99)*

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலம் கெய்சாலில் நடந்த இரயில் விபத்துக்கு பிரமபுத்திரா மெயில் ஓட்டுநர்தான் காரணம் எனத் தெரியவந்துள்ளது. பொங்கைவாவன் இரயில் நிலையத்தில் இருந்து கிளம்பி 15 நிமிடத்திற்கு பிறகு ஷிவ் ஷியாம் என்ற இராணுவ வீரர் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்துள்ளார். தனது நண்பர் உட்பட பலர் இரயிலில் ஏறவில்லை என்பதால் இரயிலை பின்னோக்கி செலுத்துமாறு கூறியுள்ளார். ஒருமுறை நிலையத்தை விட்டு இரயில் கிளம்பிவிட்டால், மீண்டும் அந்த நிலையத்திற்கு இரயில் வரக் கூடாது. அப்படியே வரவேண்டி இருந்தாலும் சம்பந்தப்பட்ட நிலையப் பொறுப்பதிகாரியிடம் அனுமதி பெற்றபின்தான் வர வேண்டும். ஆனால் இதுபோன்ற விதிமுறைகள் அனைத்தும் இதில் மீறப்பட்டுள்ளன.

இந்திய இராணுவ்த்தின் கார்கில் சாதனை காரணமாக, இரயில் பயணிகளும் இராணுவ வீரருக்கு ஆதரவாக, 'இராணுவ வீரர்களுக்காக இதுகூடச் செய்யக் கூடாதா?' என்ற பாணியில் பேசியுள்ளனர். எனவே இரயில் ஓட்டுநரும் வேறு வழியில்லாததால் இரயிலை பின்னோக்கி செலுத்தியுள்ளார். மணிக்கு 3 முதல் 5 கி.மீ. வேகத்தில் இரயில் பொங்கை காவன் என்ற புறப்பட்ட நிலையத்திற்கு திரும்பி வந்தது. இதனால் இரண்டு மணி நேரத்திற்கு மேல் தாமதம் ஏற்பட்டது. இராணுவ வீரரின் நண்பர் உள்ளிட்ட வீரர்கள் ஏறிய பிறகு இரயில் புறப்பட்டது. பின்னர் அதே பாதையில் எதிரே வந்த அவத்—அசாம் இரயில் நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஏற்பட்டது. இரயில் நிறுத்தப்பட்டு பின்னோக்கி செல்வதற்கு காரணமாக இருந்த இராணுவ வீரரும் இந்த விபத்தில் பலியானார் என்பதுதான் சோகம்.




# தலித் எழில்மலை அ.தி.மு.கவில் இணைந்து கொள்கிறார்

*(14-08-99)*

பாட்டாளி மக்கள் கட்சிப் பொதுச் செயலரும் இந்திய மத்திய அரசின் அமைச்சருமான தலித் எழில்மலை அதிமுகவில் இணையப் போவதாக இன்று



அறிவித்தார். நடைபெற இருக்கும் மக்களவைத் தேர்தலில் போட்டியிட தலித் எழில்மலைக்கு பாட்டாளி மக்கள் கட்சியில் வாய்ப்பு மறுக்கப்பட்டதால் அக்கட்சியில் இருந்து வெளியேறியுள்ளதாக சென்னையில் இன்று பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

'ஒரு கட்சியின் பொதுச் செயலராக இருக்கிறவர், இந்திய அமைச்சர் பொறுப்பில் இருக்கிறவர், 13 மாத காலத்தில காலாவதியாகிப்போன மக்களவையின் உறுப்பினர் அவருக்கு மீண்டும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்க முடியாது என்று எடுக்கப்பட்ட நிலையை, வேறு எங்கும் பார்க்க முடியாது. என் ஊழியத்துக்கும் சுயமரியாதைக்கும் இது கேள்வியாக அமைந்துள்ளதால் அமைச்சர் பொறுப்பில் இருந்தும், பாட்டாளி மக்கள் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் விலகுகிறேன்' என்றார் அவர். தனது ஆதரவாளர்களுடன் விரைவில் ஜெயலலிதா தலைமையிலான அதிமுகவில் இணையப் போவதாகவும், தற்போதைய மக்களவைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் தலித் எழில்மலை அறிவித்துள்ளார்.

# சொந்தத் தொகுதியில் முதல்வர்கள் தேசியக் கொடியேற்றக் கூடாது

## - தேர்தல் ஆணையம் உத்தரவு!

*(14-08-99)*

நாடு முழுவதும் பாராளுமன்ற தேர்தல் நடைபெற இருப்பதால் வரும் சுதந்திரத் தினத்தன்று (15-ம் திகதி) மாநில முதல்வர்களும் மற்றும் அமைச்சர்களும் தங்கள் சொந்த மாவட்டங்களிலோ அல்லது தொகுதியிலோ தேசியக்கொடி ஏற்றக்கூடாது என்று இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் எம்.எஸ்.கில் செய்தி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டி அளிக்கையில் தெரிவித்தார். அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:

சுதந்திர தினத்தன்று முதல்வர்களும் அமைச்சர்களும்தான் கொடியேற்ற வேண்டும். ஆனால் அவர்கள் தங்கள் சொந்த மாவட்டங்களிலோ அல்லது சொந்த தொகுதிகளிலோ இந்த காரியத்தைச் செய்யக்கூடாது. சுதந்திர தின உரையை பொறுத்தவரையில் நாங்கள் ஏற்கனவே கூறியது போல் அந்த நாளில் தலைவர்கள் இந்தியாவுக்காகத்தான் பேச வேண்டும். தங்களுடைய அரசியல் கட்சிக்காகப் பேசக்கூடாது. சில மாநிலங்களில் முதலமைச்சர்கள் ஆற்றவிருக்கும் உரையின் நகல்கள் தலைமை தேர்தல் அதிகாரிகளின் ஒப்புதலுக்காக கோரப்பட்டுள்ளது. இருந்தாலும் இதை தணிக்கை என்று கருதக் கூடாது. விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்த புனிதமான நாளில் என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் முதல்வர்களும் அமைச்சர்களும் செய்ய வேண்டும் என்றார் அவர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரெஞ்சுக் கிளை
நடாத்தும்
தமிழர் விளையாட்டு விழா

பாரிசின் பிரபல வர்த்தக ஸ்தாபனங்களின் ஆதரவுடன் பிரான்சின் முன்னணிக் கழகங்கள் பங்கேற்கும் உதைபந்தாட்டப்போட்டி மென்பந்து துடுப்பெடுத்தாட்டப் போட்டி, கரப்பந்தாட்டப்போட்டி, வலைப்பந்தாட்டப்போட்டி, கூடைப்பந்தாட்டப் போட்டி

என்பவற்றுடன் எமது மண்ணின் பாரம்பரிய விளையாட்டுக்களான தாச்சிப்போட்டி, முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், தலையணைச் சண்டைப் போட்டிகளும் இடம்பெறும்.

காலம்: 22.08.1999
காலை 9 மணி
இடம்: Stains மைதானம்

அத்துடன் குழந்தைகள், பார்வையாளர்களுக்கான விளையாட்டுக்களும் இடம்பெற உள்ளன.

காலை முதல் மாலை வரை
உங்கள் பசியாற்ற
தமிழீழ உணவகம்
அப்பம், தோசை, கொத்துரொட்டி என்பவற்றுடன் தமிழீழ மணம் கமழும் ஒடியல் கூழ்.

பாரிசின் முன்னணி இசைக்குழு ஈழநிலா வழங்கும் இசை நிகழ்ச்சி, அவற்றுடன் பாரிசின் பிரபல நடனக்குழுக்களின் மேற்கத்தேய நடனங்களும் இடம்பெறவுள்ளன.




மாபெரும் நல்வாய்ப்பு சீட்டிழுப்பு
வெற்றிபெறும் இலக்கத்திற்கு
புத்தம்புதிய Citroen saxo கார்
பரிசாக வழங்கப்படும்.

Pub.Gra.

# காங்கிரசின் தேர்தல் அறிக்கை சோனியா காந்தி வெளியிட்டார்

(13-08-99)

இந்திய தேர்தலுக்கான கூட்டணி அமைக்கும் வேலைகள் முடிவடைந்த் நிலையில் கட்சிகள் வாக்குறுதிகளை அள்ளி வீசும் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. அதில் தற்போது காங்கிரஸ் கட்சி தனது



தேர்தல் அறிக்கையை வெளியிட்டு உள்ளது. ஆங்கிலம், இந்தி, உருது மொழிகளில் தயாரிக்கப்பட்ட தேர்தல் அறிக்கையை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, வெள்ளிக்கிழமை காலை காங்கிரஸ் தலைமையகத்தில் வெளியிட்டார். அதில் வாக்காளரைக் கவரும் வ்கையில் 'ஆண்டுக்கு குறைந்த பட்சம் ஒரு கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். அதில் குடும்பத்தில் ஒருவருக்கு நிரந்தரமான வேலை கிடைக்க உறுதி செய்யப்படும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அறுபது பக்கங்கள் கொண்டதான அத்தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

காஷ்மீர் சிக்கலில் இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்டு வெளிப்படையான பேச்சுவார்த்தையை காங்கிரஸ் அரசு நடத்தும்.

இந்திய பாதுகாப்பு துறையை பலப்படுத்த உயர்நிலைக் குழு அமைக்கப்படும்.

தெற்கு ஆசிய பாராளுமன்றம் அமைக்கவும், தெற்கு ஆசிய சுதந்திர வர்த்தக அமைப்பு உருவாக்கவும் முயற்சிக்கப்படும்.

ஆண்டுக்கு ஒரு கோடிப் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

மதச்சார்பற்ற நிலைப் பாதுகாப்புடன் சமூக நீதியை நிலை நாட்டுதல்.

சிறுபான்மை நிறுவனங்களுக்கான ஆணையம் அமைப்பது.

நாடாளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் அளித்தல் என்னும் அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

காங்கிரசின் தேர்தல் அறிக்கையை வெளியிட்ட அக்கட்சியின் தலைவர் சோனியா காந்தி, பின்னர் பத்திரிகையாளரிடம் பேசினார். காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்ற பிறகு பத்திரிகையாளர் கூட்டத்தில் அவர் பேசுவது இதுவே முதல் முறையாகும். மத்தியில் நிலையான அரசு அமைப்போம் என்பதே வரும் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் பிரதானமான கோஷமாக இருக்கும் என்று பத்திரிகையாளரிடம் தெரிவித்தார் சோனியா காந்தி. காங்கிரஸ் கட்சியில் பிரதமர் வேட்பாளர் யார் என்பதை ஏன் அறிவிக்கவில்லை என்று கேட்கிறார்கள். தேர்தலில் வெற்றி பெறும் காங்கிரஸ் எம்பிக்கள் பிரதமரை தேர்தெடுப்பார்கள் என்று ஏற்கனவே அறிவித்திருக்கிறேன். அந்த நிலையில் மாற்றம் இல்லை. தற்போதைய தேர்தல் தனி நபருக்கு முக்கியத்துவம் அளிக்கும் தேர்தல் இல்லை.

என மேலும் அவர் தெரிவித்தார்.

# நிறைந்த நம்பிக்கையுடன் புறப்படுகிறேன் தேர்தல் பிரச்சாரம் பற்றி கருணாநிதி

தி.மு.க. தொண்டர்களுக்கு முதல்வர் கருணாநிதி தனது தேர்தல் பிரச்சாரத்தின் ஆரம்பம் பற்றி குறிப்பிட்டதுடன் அவர்களுக்கு வேண்டுகோள் ஒன்றினையும் விடுத்துள்ளார். தனது பிரச்சாரத்தின்போது தன்க்குப் பின்னால் கார்களின் அணிவகுப்பு தேவையற்றதெனவும் வாண வேடிக்கை, ஆரத்தி எடுத்தல், சால்வை, மாலை அணிவித்தல் ஆகியவற்றை கண்டிப்பாகத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும் எனவும் நாம் ஆளும்கட்சியாக இருப்பதால் நமது பொறுப்பினை உணர்ந்து அடக்க ஒடுக்கமான வலிமையும், எளிமையும் கொண்ட நிகழ்ச்சிகளை நடாத்திக்காட்டவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். ஜெயலலிதாவின் பிரச்சாரப் பாணியினை மறைமுகமாகச் சாடிய கருணாநிதி, தனது ஆசையினை நிறைவேற்றித் தருமாறு கழகத் தொண்டர்களை வேண்டியுள்ளார்.

# தேசிய விருது பெற்ற திரைப்படம் சர்ச்சையை கிளப்புகின்றது

(14-08-99)

பாபாசாகிப் அம்பேத்கர் என்ற பெயரில் டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் இந்திய அளவில் அறிவிக்கப்பட்ட தேசிய விருதில் சிறந்த ஆங்கிலப் படம் என்ற விருதையும், சிறந்த நடிகர் என்ற விருதையும் இப்படம் பெற்றுள்ளது. இதில் அம்பேத்கராக நடித்துள்ள மம்முட்டி சிறந்த நடிகராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மூன்று மணி நேரம் ஓடும் இப்படத்தை தயாரிப்பதற்கு மத்திய சமூகநீதி அமைச்சகம், மாராட்டிய மாநில அரசு மற்றும் தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகம் ஆகியவை நிதி உதவி செய்துள்ளன. ரூ.9 கோடி செலவில் இப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இப்படம் விருது பெற்றது என்ற வகையில் தேசிய திரைப்பட விழாவில் திரையிடப்பட்டுள்ளது.

இப்படத்தில் மகாத்மா காந்தியை விமர்சிக்கும் கடுமையான வசனங்கள் இடம்பெற்றுள்ளதால் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. இப்படத்தில் மகாத்மா காந்திக்கும் டாக்டர் அம்பேத்கருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விரிவாக சித்தரிக்கப்பட்டுள்ளது. காந்திக்கு எதிராக அம்பேத்கர் கடுமையாக பேசுவது போன்ற வசனங்கள் இடம்பெற்றுள்ளன.

இப்படத்தில் வரும் ஒரு காட்சியில் நாடே மகாத்மாவின் பின் திரண்டு கொண்டிருப்பதல் காந்தியின் மீது நம்பிக்கை வைக்குமாறு அம்பேத்கரின் நண்பர்கள் அவரிடம் கூறுகின்றனர். இதற்கு பதிலளிக்கும் அம்பேத்கர் 'மகாத்மாக்கள் மறைந்துவிடும் கற்பனைத் தோற்றங்கள் என்பதை வரலாறு வெளிப்படுத்தியுள்ளது. அவர்கள் புழுதியை கிளப்புவார்கள் ஆனால் உயராமாக அல்ல' என கூறுகிறார். மற்றொரு காட்சியில் வெளிநாட்டு பத்திரிகையாளர் ஒருவரிடம் அம்பேத்கர் கூறும்போது 'அவரது (காந்தி) பேச்சைக் கேட்காதீர்கள். அவர் ஒன்றும் கடவுள் அல்ல. மகாத்மாக்கள் வந்துள்ளனர், போயுள்ளனர். ஆனால் தீண்டத்தகாதவர்கள் தீண்டத்தகாதவர்களாகவே இருக்கிறார்கள்' என்று கூறுகிறார். இன்னொரு கட்டத்தில் 'அவரை மகாத்மா என்று கூறாதீர்கள். அவர் ஒரு சீசன் அரசியல்வாதி. அனைத்தும் தோல்வியடைந்தால் சதி ஆலோசனையில் இறங்கிவிடுவார்' என அம்பேத்கர் கூறுகிறார். இதே போன்று அம்பேத்கருக்கும் காந்திக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை விளக்கும் காட்சிகளில் கடுமையான வசனங்கள் உள்ளன.

இன்னொரு கட்டத்தில் மகாத்மா காந்தி தனது உதவியாளர்களிடம் கேட்கும்போது டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்டவர் என்று என்னிடம் யாரும் ஏன் கூறவில்லை. அவர் புனேயை சேர்ந்த மிகவும் ஆச்சாரமான பிராமணர் என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன் என்று கேட்கும் வகையில் வசனம் இட்ம்பெற்றுள்ளது.

இது குறித்து இப்படத்தின் இயக்குநர் ஜப்பார் பட்டேல் கூறும்போது 'மிகவும் ஆராய்ச்சி செய்யப்பட்டு அம்பேத்கரின் பேச்சுக்கள் மற்றும் எழுத்துக்களின் அடிப்படையில் இப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இதில் வரும் சம்பவங்கள் மற்றும் வசனங்கள் யாவும் மகாராஷ்டிர அரசு வெளியிட்டுள்ள அம்பேத்கர் பற்றிய 15 தொகுப்புகளில் இருந்து எடுக்கப்பட்டவைதான். இதில் வரலாற்று உண்மைகள் ஏதும் தவறாக இடம்பெற்றிருந்தால் இப்படத்தை வெளியிடவே அனுமதி கிடைத்திருக்காது. எங்களது நோக்கமெல்லாம் இந்திய சுதந்திர போராட்டத்தில் காந்தியின் உணர்ச்சிபூர்வமான அணுகுமுறைக்கு எதிரான அம்பேத்கரின் அறிவுபூர்வமான அணுகுமுறையை வெளிப்படுத்துவதுதான்' என்றார். இப்படத்திற்கு சூனி தாராபூர்வாலா வசனம் எழுதியுள்ளார். மீரா நாயரின் சலாம் பாம்பே என்ற படத்திற்கு வசனம் எழுதியவர் இவர்.

# பாப்பரசரின் இந்திய விஜயம்

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் எதிர்வரும் நவம்பர்மாதம் இந்தியாவிற்கு விஜயம்செய்ய இருக்கின்றார். நவம்பர்மாத ஆரம்பத்தில் பாப்பரசரின் விஜயம் அமையுமென இந்திய கத்தோலிக்க பிஷப் அமைப்பின் துணைச்செயலர் ஜோர்ச் பெனாரா தெரிவித்துள்ளார்.

பாப்பரசரின் இந்த விஜயம் இந்தியாவிற்கான இரண்டாவது விஜயம் என்பது குறிப்பிடத்தக்கது.


## கிடைக்கப்பெற்றோம்

### பனிப்பாறைகளும் சுடுகின்றன

ஆசிரியர்: சுவிஸிலிருந்து கல்லாறு சதீஸ்

சிறுகதை தொகுப்பு

வெளியீடு:
மணிமேகலை பிரசுரம்
சென்னை-17

தொடர்புகளுக்கு:
Arulrasa Nageswaran
Schönmatr Str.8
6034 INWIL







### அனுபவங்கள்

– அனுபவக்கதைகள்

ஆசிரியர்:
கே.எம். முருகேசன்

வெளியீடு:
**GESAN ENTERPRISE**
No.17 Jelanss 9/4 Seriseita
47300 Petaling Jaya
Selangor Malaysia.


# பாகிஸ்தானின் அச்சுறுத்தலைச் சந்திக்க தயாராக இருங்கள் சுதந்திரதினச் செய்தியில் ஜனாதிபதி அறைகூவல்!

பாகிஸ்தானில் இருந்துவரும் எந்த திடீர் தாக்குதலையும் சந்திக்க நாம் தயாராக இருக்க வேண்டும். பாகிஸ்தானின் கடந்தகால நடவடிக்கைகளைக் கருத்தில்கொண்டு நமது முப்படைகளையும் வலிமைப்படுத்த வேண்டும். இவ்வாறு இந்திய சுதந்திர தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் உரையாற்றும்போது அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானுடன் நட்புடன் இருக்கும் கொள்கையையே நாம் எப்போதும் விரும்புவோம். ஆயினும் கடந்த காலத்தில் இந்த நட்பினை முறித்துக்கொள்ளும் படியாக அந்த நாடு நடந்து கொண்டது. அதனால் நம்மீது தாக்கப்படும் எத் தாக்குதலையும் சந்திக்க நாம் தயாராக இருப்பது எமது கடமை மட்டுமல்ல, விவேகமும்கூட. எமது சுதந்திரத்தினையும், அமைதியையும் பாதுகாக்க நாம் தொடர்ந்தும் கவனத்துடன் செயற்படவேண்டும். போர்ச்சூழ்நிலை வரும்போது மட்டும் நாம் ஒற்றுமையாக இருந்தால் மட்டும் போதாது. எல்லா நேரத்திலும் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். உலக நாடுகளோடு ஒப்பிடும்போது நாம் குறைந்த அளவே இராணுவத்திற்குச் செலவு செய்கின்றோம். எனவே இப்போது நாம் இராணுவத்திற்கு அதிக நிதி ஒதுக்கவேண்டியது நமது கட்டாய கடமையாகும்.

இந்த உரையின்போது ஜனாதிபதி நாராயண்ன், கார்கில் போர் பற்றியும் எதிர்வரும் தேர்தலில் வாக்காளர்களின் மற்றும் வேட்பாளர்களின் கடமை பற்றியும் எடுத்துக்கூறியுள்ளார்.

# 20 தொகுதிகளைத் தாருங்கள் நான் யாரென்று காட்டுகிறேன்

## தேவகௌடா

எனக்கு 20 தொகுதிகளைக் கொடுங்கள். நான் யாரென்று காட்டுகிறேன். இவ்வாறு முன்னாள் பிரதமர் தேவகௌடா பெங்களூரில் நடந்த கருத்தரங்கொன்றில் சவால்விடுத்துள்ளார். எந்த ஒரு தனிக்கட்சியுமே தாங்கள் வலுவாக இருப்பதாகக் கூற முடியாது. தேர்தலில் எல்லாக் கட்சிகளுமே எதையாவது செய்து அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கின்றன. அங்கு கொள்கையோ, தத்துவமோ எதுவும் கிடையாது. தன்னால்தான் நிலையான ஆட்சியைத் தரமுடியுமெனக் கூறும் காங்கிரசும் இந்த முறையைத் தான் கையாளுகின்றது.

கர்நாடக மக்கள் தேர்தலில் எனது வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வார்களேயானால் அதன் பின்னர் நான் யாரென்பதைக் காட்டுவேன். கர்நாடகத்திற்கு எது தேவையோ அதை நான் நிச்சயம் வாங்கிக்கொடுப்பேன் எனக் கௌடர் தெரிவித்தார்.

# உலகச் செய்திகள்

## பாகிஸ்தானுடன் இந்தியா பேச்சுக்களை நடாத்தும் - பிரதமர் வாஜ்பாய்

இந்தியாவும் பாகிஸ்தானும் மீண்டும் சமாதானப் பேச்சுக் களை ஆரம்பிக்கும் என இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் கடந்த திங்களன்று தெரிவித்தார். தேக்க நிலையை அடைந்துள்ள இருதரப்பு உறவுகளும் அண்மைக் கால மோதல்களாலும் இருத ரப்பு வார்த்தைப் பிரயோகங்களா லும் மேலும் சிக்கல்நிலையை அடைந்தன. இவற்றை நிவர்த்தி செய்ய மீண்டும் பேச்சுவார்த்தை கள் ஆரம்பமாகவேண்டும் என தாம் விரும்புவதாக இந்தியப் பிரதமர் மேலும் தெரிவித்தார். இனியும் ஆரம்பமாகும் பேச்சுக் களில் பிராந்திய அமைதியே வலி யுறுத்தப்படும் என்றும் கூறிய இந்தியப் பிரதமர் காஷ்மீரில் பாகிஸ்தான் பயிற்சி பெற்ற தீவி ரவாதிகள் சண்டையில் ஈடுபடுத் தப்படும்வரை நடக்கும் எந்தப் பேச்சுவார்த்தையும் அர்த்தமற்ற தாகவே இருக்கும் என்றார். இதற்கிடையே பாகிஸ்தான் பிர தமர் நவாப்செரிப் இந்தியாவின் குற்றச்சாட்டை முற்றாக மறுத் துள்ளதுடன், காஷ்மீரில் போரா டுபவர்கள் விடுதலைப் போரா ளிகள் என்றும் அவர்களுக்கான உதவிகளை தமது அரசு வழங்க வில்லை என்றும் கூறினார்.

அதேவேளை பாகிஸ்தானிய விமானத்தை இந்தியா சுட்டு வீழ்த்தியதைக் கடுமையாகக் கண்டித்த அவர் தமது நாடு அமைதியான தீர்வையே விரும் புகிறது. இந்தியாவுடன் நல் லெண்ண உறவுகளை வளர்த் துக்கொள்ள அது எப்போதும் தயாராகவே உள்ளது. ஆனால் இந்தியா இராணுவ ரீதியிலான நகர்வுகளை எதிர்பார்க்கிறது. பாகிஸ்தானின் பொறுமையைச் சோதிக்கிறது என்றவர், பாகிஸ் தானின் பொறுமைக்கும் எல் லையுண்டு. அது திரும்பித்தாக் கும் உரிமையும் கொண்டுள்ளது என எச்சரிக்கையும் விடுத்தார்.

## இளவரசர் பிலிப்பின் இனவாதக் கருத்திற்கு கடும் கண்டனம்

இந்தியர்களை ஏழனப்படுத் தும் விதத்திலான கருத்தொன்றி னைத் தெரிவித்ததற்காக பிரிட் டிஸ் "ம்காராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவரும் எடின் பரோ கோமகனுமாகிய இளவ ரசர் பிலிப்பிற்கு பிரித்தானியா வில் கடும் கண்டனம் எழுந்துள் ளது. அத்துடன் அரச குடும்பத் தின் மீதான விசனமும் அதிகரித் துள்ளது. இளவரசர் பிலிப் முட் டாள்தனமான கிழவர் எனவும் பொதுவாழ்வில் இருந்து அவர் ஓய்வு பெறுவது நல்லதென்ற ரீதி யிலான கருத்துக்களும் எழுந் துள்ளன. பிலிப்பினை சர்ச்சைக் குள்ளாக்கியிருக்கும் விடயம் இதுதான்.

ஸ்கொட்லாந்தின் எடின் பேர்க் பகுதிக்குச் சென்ற இளவ ரசர் பிலிப் தொழில்நுட்ப நிறு வனம் ஒன்றிற்கு விஜயம் செய் துள்ளார். அந்த நிறுவனத்தில் சரியான முறையில் வைக்கப் படாத மின்சாரப் பெட்டியொன் றைக் கண்டதும், (பியூஸ்) இத னைப் பார்த்தால் இந்தியர் ஒரு வர் செய்ததுபோல காணப்படு கிறது என அந்த தொழிற்சாலை முகாமையாளரிடம் அவர் தெரி வித்திருக்கிறார்.

அவர் இவ்வாறு தெரிவித்த கருத்துத்தான் சர்ச்சையினைக் கிளப்பியுள்ளது. இவரது கருத்தி னைப் பற்றி விமர்சனம் தெரி வித்த மிரர் பத்திரிகை பொது வாழ்வில் இருந்து அவர் ஓய்வு பெறுவதுடன் வேட்டையாடு தல், துப்பாக்கிச்சூடு, மீன் பிடித் தல் ஆகிய பொழுதுபோக்குகளை யும் அவர் நிறுத்திக்கொண்டு இனவாதக் கருத்துக்களுக்கு முக் கியத்துவம் கொடுக்கலாமென மிரர் கடுமையாகச் சாடியுள் ளது. ஸ்கொட்லாந்தின் பிரபல பத்திரிகையான ஸ்கொட்மானும் தனது கண்டனத்தைத் தெரிவித் துள்ளது. அக் கண்டனத்தில் முடியாட்சி அமைப்பு கடுமை யாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

## ஐரோப்பிய உல்லாசப் பயணிகள் ஈரானில் கடத்தப்பட்டனர்

இரண்டு ஸ்பானிய துறவிகள் உட்பட நான்கு பேரை தென் கிழக்கு ஈரானில் தீவிரவாதிகள் கடத்திச்சென்றனர். இது பற்றி ஈரானிய வெளியுறவு அமைச்சு ஞாயிறு வெளியிட்ட அறிக்கை யில் ஐந்து பேரைக்கொண்ட துப் பாக்கி ஏந்திய குழுவினர் மூன்று ஸ்பானியப் பிரஜைகளையும் ஒரு இத்தாலியரையும் ஒரு ஈரானிய ரையும் கடந்த சனியன்று கடத் தியுள்ளதாக கூறியுள்ளது. இவர் களைத்தேடும் முயற்சியில் கடந்த சில நாட்களாக ஈரானின் பாது காப்புப் படையினரும் பொலிசா ரும் ஈடுபட்டுள்ளனர். கேர்மன் பிராந்தியத்தைச் சுற்றிவளைத்து தேடுதல் நடாத்திய பொலிசார் இதுவரை யாரையும் கைது செய்யவில்லை எனக் கூறியுள்ள னர்.

இக்கடத்தல் பற்றி ஸ்பானிய வெளியுறவு அமைச்சு விடுத் துள்ள செய்தியில் தனது அரசு ஈரானிய அரசுடன் இவ்விட யத்தில் தொடர்ந்தும் தொடர்பு கொண்டு வருவதாயும் தம்மைப் பொறுத்தவரை இது அரசியல் காரணங்களைக்கொண்டதாக இருக்காது என்றும் கூறியுள்ள னர். கடத்தப்பட்டவர்களில் ஒரு வர் 70 வயதானவர் என்றும் சொல்லப்படுகிறது.

கடந்த ஜுன் மாதம் நடுப் பகுதியிலும் இதே விதமான ஒரு கடத்தல் நடந்தது. அன்றும் கடத் தியவர்கள் சிறையில் உள்ள தமது சகாக்கள் மூவர் விடுதலை செய் யப்படவேண்டும் என்றே கூறி யிருந்தனர். இறுதியில் பொலிசா ரினால் அவர்கள் கைதுசெய்யப் பட்டு உல்லாசப் பயணிகள் விடுவிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது..

## ஹொங்கோவில் அன்னிய இராணுவங்கள் மோதல்

ஹொங்கோ ஜனநாயக குடிய ரசின் வடபகுதியில் கிசங்கானி நகர்பகுதியை கட்டுப்பாட்டுக் குள் வைத்திருக்கும் ருவண்டா மற்றும் உகண்டா நாட்டுப்படை கள் முதன்முதலாக நேற்று துப் பாக்கிச் சமரில் ஈடுபட்டனர்.


ஹொங்கோ ஜனநாயக குடி யரசின் ஆட்சியாளரான லோரன் கபிலாவை பதவியில் இருந்து அகற்றுவதற்கான போராட்டத் தினை ஒரு வருடகாலத்துக்கும் மேலாக ஹொங்கோ விடுதலை அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன. நேற்று நடந்த மோத லானது கபிலாவுக்கு எதிரான போராட்டத்தில் பலத்த பின்ன டைவுகளைத் தோற்றுவிக்கும் என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிசங்கானியின் பிரதான விமான நிலையத்தில் நிலை கொண்டுள்ள உகண்டாப்படை கள், ருவண்டா இராணுவ அணி கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். சில மணி நேரம் இடம்பெற்ற இம் மோத லில் இரு தரப்பினரிலும் பலர் காயமடைந்தனர். கடந்த வாரம் உகண்டாப் படைகள், ருவண் டாவின் சார்பு அமைப்பினர் மேல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டன.

இப்போரில் உகண்டாவும், ருவண்டாவும் வேறு வேறு அமைப்புக்களுக்கு ஆதரவு வழங் குகின்றன. ஹொங்கோ ஜனநா யக முன்னணியின் தலைவரான வம்பா டீ வம்பாவுக்கு உகண்டா படைகள் பாதுகாப்பு வழங்கு கின்றன. இதற்கிடையே இவரது அமைப்பில் இருந்து விலகிய எமில் இலுங்காவுக்கு ருவண்டா பாதுகாப்பு வழங்குகின்றது. இவ ரது தலைமையகம் கோமாவில் இயங்கிவருகின்றது. அண்மை யில் ஹொங்கோவின் பிரச்சி னைக்கு அமைதியான தீர்வுகா ணும் முயற்சியில் கடந்தமாதம் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகி யிருந்தது. இதில் போராளிகள் தரப்பில் இருந்து யாரும் கைச் சாத்திட்டிருக்கவில்லை. ஆனால் உகண்டாவின் ஆதரவுடன் திரு வம்பா அரசியல் நோக்கற்ற ரீதி யில் எந்தவித இலாபங்களுமின்றி ஹொங்கோவுடன் கைகோர்க்க முயற்சிக்கின்றார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## லொஸ் ஏஞ்சல்ஸ் பாலர் பாடசாலையில் துப்பாக்கிப் பிரயோகம்

அமெரிக்காவில் தொடர்ச்சி யாக நடாத்தப்பட்டுவரும் தனி நபர் துப்பாக்கித் தாக்குதல்க ளால் அமெரிக்க மக்கள் அதிர்ச் சியடைந்துள்ளனர். கடந்த செவ் வாயன்று (10) லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் உள்ள யூத மக்களின் சனசமூக நிலையமொன்றில் ஆயுதபாணி ஒருவர் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சிறார்கள் உட்பட ஐவர் காயம டைந்துள்ளனர். தாக்குதலை நடாத்தியவர் தப்பிச் சென்றுவிட் டார்.



ஜேர்மனியின் தென் பகுதியில் பவேரியா என்ற இடத்தில் அகஸ்டர்க் நகரின் மேலாகத் தென்பட்ட பூரண சூரிய கிரகணம்

துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதைக் கேள்விப்பட்ட பெற்றோர்கள் சனசமூக நிலையத் தில் பாலர் பாடசாலைகளை நோக்கி விரைந்தனர். இப் பாட சாலையில் சுமார் 300 சிறார் கள் கல்விகற்று வருகின்றனர். துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றவேளை பெரும்பாலான பிள்ளைகள் வெளியே விளை யாடிக்கொண்டிருந்ததால் கட்டடத்தினுள்ளே உயிரிழப்பே தும் ஏற்படவில்லை. ஆயினும் காயமடைந்த சிறுவன் ஒருவ னின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. சுமார் 40 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே துப்பாக்கிப் பிர யோகத்தினை மேற்கொண்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தனியார் மயமாக்கலை சீனா உறுதியாக நிராகரிக்கும்

தனது பொருளாதாரத் துறை யின்மேல் கொண்டிருக்கும் அரச கட்டுப்பாடுகளை நீக்கி சீர்தி ருத்த நடவடிக்கைகளை மேற் கொள்ள இருப்பதாக சீன அதி பர் ஜியாங் ஜெமின் தெரிவித்துள் ளார். அரச நிறுவனங்களையும் பொருளாதாரத்தையும் மறுசீர மைப்பதற்கு சீனா திட்டமிட்டுள் ளதாகவும் அதிபர் தெரிவித்தி ருக்கிறார். ஆயினும் நாட்டின் பொருளாதாரத்தின் பிரதான மான துறைகள் எக்காரணம் கொண்டும் தனியார் மயப்படுத் தப்படமாட்டாது எனவும் இது சீனாவின் உறுதியான கொள்கை எனத் தெரிவித்த ஜனாதிபதி தனியார் முதலீடுகளை பெற்றுக் கொள்வதற்கு சீனா தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சோஷலிசப் பொருளாதாரத்தின், எதிர்கா லத்தை நிர்ணயிக்கும் முக்கிய மான அரசியல் விவகாரமாக அரச துறையை மறுசீரமைப்பது இப்பொழுது முக்கிய விடய மாக விளங்குகிறது.

ஆயினும் தொழிலாளரின் நலன்களுக்கு ஆதரவாக இருப் பதும் சமூக ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதும் சீன அரசின் முக்கிய கடமையாகவும் உள்ளது. எனவே சீர்திருத்தம் என்பது மிக வும் பொறுப்பாக மேற்கொள்ளப் பட வேண்டிய ஒரு விடயம் எனவும் அவர் தனது அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

## ரஷ்யா இஸ்லாமிய நாடுகளுக்கு எச்சரிக்கை டகஸ்தான் பிரிவினைவாதிகளுக்கு உதவவேண்டாம்

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகோர் இவானொவ் டகஸ்தாணில் பிரிவினைக்காகப் போராடும் இஸ்லாமிய போராளிகளுக்கு உதவ வேண்டாமெண பிராந்தியத்திலுள்ள இஸ்லாமிய நாடுகளுக்கு எச்சரிக்கைவிடுத்தார். ரஷ்யாவின் தெற்குப் பிராந்தியத்தில் டகஸ்தான் அமைந்துள்ளது. இங்கு முழுமையான பிரிவினைக்காக இஸ்லாமிய போராளிகள் போராடி வருகின்றனர்.



ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சரான இகோர் இவானொவ் கூடந்த சனியன்று-விடுத்த அறிக்கையில் ரஷ்ய பாதுகாப்புத்துறையினர் டகஸ்தான் போராளிகள் சர்வதேச ரீதியான உதவிகளைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதற்கு ஆதாரங்களைக் கொண்டுள்ளனர். இது ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கைகளில் குழப்பகரமான நிலையைத் தோற்றுவித்துள்ளது. போராளிகளுக்கு உதவுவதானது ரஷ்யாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலைப்படுவதாகும். இது நிரூபிக்கப்பட்டால் அதற்கான பதில் நடவடிக்கைகள் மிக உறுதியாக இருக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

டகஸ்தானின் இஸ்லாமிய போராளிகளுக்கு யார் உதவுகிறார்கள் என்பதை ரஷ்ய அதிகாரிகள் பகிரங்கமாக வெளியிடாதபோதிலும் செச்சினியாவே போராளிகளுக்கான ஆயுத வழிங்கலில் பின்னணியில் நிற்பதாக நம்பப்படுகிறது, இதற்கிடையே ரஷ்யாவின் பதில் பிரதமர் விளாடிமீர் புடீன் கடந்த வெள்ளியன்று பத்திரிகையாளர்களிடையே பேசுகையில் அவசியமானால் தமது படைகள் செச்சினியாவின் மீதும் தாக்குதல்களை நடாத்தும் என்றார்.

## மேற்கு ஐரோப்பாவுடன் சுவீடனும் இணைந்து கொள்கின்றது

உலகின் மிக நீண்ட பாலங்களில் ஒன்றினைக் கட்டியதன் மூலம் சுவீடன் டென்மார்க்கினூடாக மேற்கு ஐரோப்பாவுடன் முதல்முறையாக இணைந்து கொண்டுள்ளது. நூற்றாண்டு காலமாக ஸ்கன்டினேவியா கண்ட கனவு இந்நூற்றாண்டு இறுதியில் நனவாகியுள்ளது. சுவீடனின் மால்மோ துறைமுகப் பகுதியினையும் டென்மார்க் தலைநகர் கோப்பன்ஹாகனையும் இணைக்கும் இத்தொடர்பு கடல் நிலம் என 16 கிலோமீற்றர் நீளத்தைக்கொண்டுள்ளது. இப்பாலமானது நான்கு வாகனப் போக்குவரத்துச் சாலைகளையும், இரயில் இணைப்பினையும் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

1991-ம் ஆண்டு டென்மார்க் அரசும் சுவீடன் அரசும் தமது நாடுகளுக்கிடையிலான பாலத் தொடர்பு பற்றிய பேச்சுக்களை ஆரம்பித்தன. இதனையடுத்து 1995-ம் ஆண்டு அதன் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகின. கடந்தவார இறுதியில் இப் பாலத்தின் இறுதிக்கட்டப்பகுதியை கட்டுமானப் பணியாளர்கள் இணைத்ததன் மூலம் பாலத்தின் வேலைத்திட்டங்கள் முடிவடைந்தன. இதனையடுத்து டென்மார்க்கின் முடிக்குரிய இளவரசர் பிறடரிக்கும் சுவீடனின் முடிக்குரிய இளவரசி விக்டோரியாவும் முதன்முறையாக இப்பாலத்தில் சந்தித்துக்கொண்டனர். அத்துடன் அப் பிராந்தியத்தில் நின்ற ஏராளமான கப்பல்கள் சங்கொலி எழுப்பி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டன. இப்பாலத்தின் கட்டுமானத்திற்காக இரண்டு பில்லியன் டொலர்கள் வரை செலவிடப்பட்டுள்ளன. பாலத்தின் நடுவே கடலில் செயற்கையாக ஓர் தீவொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுவீடனில் இருந்து புறப்படும் வாகனங்களோ, இரயிலோ 7.8 கிலோ மீற்றர் தூரத்தைப் பாலத்தினூடே கடந்து பின்னர் நான்கு கிலோ மீற்றர் தூரத்தை தீவினூடாகச் சென்று கோப்பன்ஹாகன் விமான நிலையத்திற்கருகில் வந்தடைவர்.

## பிரெஞ்சு விமானச்சேவை குற்றம் சுமத்தப்பட்டது

பிரான்சின் தேசிய விமான சேவையான ஏயார் பிரான்ஸ் நிறுவனம் சில பயணிகள் மேல் மேற்கொண்ட முறைகேடான நடவடிக்கைகளுக்காக பிரெஞ்சு போக்குவரத்து அமைச்சின் எச்சரிக்கைக்குள்ளாகியது.

விமானசேவை பயணிகள் மேல் பாரபட்சம் காட்டிய இரண்டாவது சம்பவம் இது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் பயணிகள் நலன்களைப் பேணும் அமைப்புக்களும் இவ் விமான நிறுவனத்தின் தொடரும் பாரபட்சத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன. கடந்தவாரம் உடல் ஊனமுற்ற ஒருவர் இந் நிறுவனத்தின் உள்ளூர்ச்சேவையில் ஈடுபட்டிருந்த விமானம் ஒன்றில் பயணம்செய்ய முயன்ற போது விமான வாசலில் வைத்து பணியாட்களால் திருப்பி அனுப்பப்பட்டார். அவருக்கான சரியான பாதுகாப்பை தங்களால் வழங்கமுடியாது என அவர்கள் தெரிவித்திருந்தனர். அடுத்த சம்பவம் கடந்தவாரம் இடம்பெற்றது.

சுமார் 170 கிலோ நிறைகொண்ட ஒருவர் சீனாவிற்கு இவ்விமான மூலம் பயணம்செய்ய முயன்ற போது அவர் ஒரு சீட்டுடன் செல்லமுடியாதென தடுக்கப்பட்டார். விமானத்தின் இரண்டு இருக்கைகள் இவருக்கு தேவையாக இருப்பதால் இவர் இரண்டு சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக்கூறி திருப்பி அனுப்பப்பட்டார். இந்த சம்பவங்கள் பெரும் சர்ச்கைக்குள்ளான நிலையில் பிரெஞ்சுப் போக்குவரத்து அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இவ் விமான நிறுவனத்தின் இந் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனக்கூறிய போக்குவரத்து அமைச்சர் இவை நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டியவை. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வண்ணம் விமானசேவை நிர்வாகம் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## சுதந்திரத்திற்கான பிரச்சாரத்தில் பல்லாயிரம் மக்கள்

இந்தோனேசியாவின் ஆட்சியில் இருந்து சுயாட்சி உரிமையைப் பெற்றுக்கொள்வதா அல்லது முற்றாக விலகி சுதந்திர நாடாவதா எனும் விருப்பு வாக்கெடுப்பு எதிர்வரும் 30-ம் திகதி கிழக்கு தீமோரில் இடம்பெற உள்ளது. ஐநாவின் மேற்பார்வையில் இந்தோனேசிய அரசு இந்த வாக்கெடுப்பை நடத்துகின்றது. இந்தவிருப்பு வாக்கெடுப்புக்கான பிரச்சாரம் கடந்த சில தினங்களாக நடந்துவருகின்றது. இந்தோனேசியாவுடன் சுயாட்சி உரிமையுடன் இணைந்துவாழும் பூர்வீக இந்தோனேசியர்கள் கடந்த சனியன்று கிழக்கு தீமோர் தலைநகர் டில்லியில் ஆரம்பமாகியது. இதனையடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தோனேசியாவிடமிருந்து சுதந்திரம்கோரி போராட்டம் நடத்தும் தீமோர் மக்கள் சுதந்திரப் பிரச்சார நடவடிக்கையை மாபெரும் ஊர்வலம் ஒன்றின் மூலம் ஆரம்பித்தனர். இந்த ஊர்வலத்தில் 5,000 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். 1976-ம் ஆண்டு போர்த்துக்கேய காலனி நாடாக இருந்த கிழக்கு தீமோர் இந்தோனேசியாவுடன் இணைத்துக்கொள்ளப்பட்டது. அன்று இறக்கப்பட்ட கிழக்கு தீமோரின் உத்தியோக பூர்வகொடி சட்டபூர்வமாக இவ்வேளையில் மீண்டும் ஏற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.



கிழக்கு தீமோரின் சுதந்திரத்துக்காக போராடும் அமைப்பின் தலைவரான எக்ஸ்தானா குஸ்மாவோ தனது வீட்டுக்காவலில் இருந்தவாறே மக்களுக்கு உரையாற்றினார். அவர் தனது உரையில் தனது ஆதரவாளர்களை அமைதியான முறையில் பிரச்சாரத்தை மேற்கொள்ளுமாறும் இந்தோனேசியாவுடன் தொடர்ந்தும் இருக்கவேண்டும் எனக் கோரும் பிரிவினருடன் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் கோரினார். அவர் தனது உரையில் கடந்த 24 வருட காலமாக எமது போராட்டத்தின் எதிரி இந்தோனேசிய ஆதரவாளர்கள் அல்ல, இந்தோனேசியாவின் இராணுவமே எமது எதிரியாகியிருந்தது என்றார். தீமோர் புரட்சிக்கான தேசிய கவுன்சிலின் தலைவரான குஸ்மாவோ 1992-ம் ஆண்டு முதல் சிறைவைக்கப்பட்டுள்ளார்.

சுதந்திர ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் கடந்த 24 வருட போராட்டத்தில் இறந்த 200,000 மக்களுக்கு முதலில் அஞ்சலி செலுத்தி தமது பிரச்சாரத்தை ஆரம்பித்தனர்.

## மனித உரிமை மீறல்களுக்கு முழுப்பொறுப்பையும் பினோச்சே ஏற்றார்

முன்னாள் சிலியின் சர்வாதிகார இராணுவ ஆட்சியாளரான அகஸ்ரோ பினோச்சே 1973-ம் ஆண்டு இராணுவ சதிப்புரட்சியின் பின் நடந்ததாகக் கூறப்படும் எல்லா மனித உரிமை மீறல்களுக்கும் தாமே பொறுப்பேற்பதாகக் கூறினார். போலந்தின் பத்திரிகையொன்றிற்கு வழங்கிய பேட்டியொன்றின் மறுபிரசுரம் கடந்தவாரம் சிலியின் பிரபல தினசரி ஒன்றில் வெளியாகியது. அப்பேட்டியில் 1973-ம் ஆண்டு தாம் புரட்சியின் பின் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் ஆட்சியில் இருந்து அகற்றப்படும் வரையிலான காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு அதிலும் தான் சம்பந்தப்படவில்ல எனக் கூறப்பட்ட சம்பவங்களுக்கும் தானே பொறுப்பேற்றுக்கொள்வதாக அவர் கூறியிருந்தார்.

அகஸ்ரோ பினோசே 1973-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11-ம் திகதி அன்றைய சோசலிச ஜனாதிபதியான சல்வடோர் அலன்டேயின் ஆட்சியை இராணுவ சதியொன்றின் மூலம் கைப்பற்றிக்கொண்டார். 1990-ம் ஆண்டுவரை இவரது ஆட்சி நீடித்தது. இக்காலப் பகுதியில் 3000 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டோ, காணாமல் போயோ உள்ளனர் என மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். தற்போது 83 வயதான பினோச்சே கடந்தவருடம் ஒக்டோபர் மாதம் லண்டனில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். இன்றும் வீட்டுக்காவலில் உள்ள இவர் இவரது ஆட்சிக் காலத்தில் ஸ்பெயின் பிரஜைகள் காணாமல் போனதற்காக ஸ்பெயின் இவரை நாடுகடத்த வேண்டும் என கோரியுள்ள குற்றச்சாட்டிற்கான விசாரணையை எதிர்நோக்கியுள்ளார். செப்டெம்பர் 27-ம் திகதி இவ் விசாரணைகள் ஆரம்பமாகும் எனச் சொல்லப்படுகின்றது.

## ரஷ்யர்களை வெளியேற்ற இறுதிவரை போராடுவோம் கெரில்லா தலைவர் அறிவிப்பு

டகஸ்தானில் இருக்கும் ரஷ்யத் துருப்பினர் வெளியேறும் வரை போராட்டம் தொடரும் என இஸ்லாமிய கெரில்லாக்களின் தலைவர் ஷாமில் பஷாயேவ் அறிவித்துள்ளார். இதுவரை நடந்த சண்டையில் 7 உலங்கு வானூர்திகள் 12 கவச வாகனங்களை தாம் அழித்திருப்பதாகவும் 4 கவச வாகனங்களை தாம் கைப்பற்றியிருப்பதாகத் தெரிவித்த இவர் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை தம்மால் ஒடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ரஷ்ய இராணுவத்திற்கு ஆதரவான டகஸ்தான் முஸ்லீம் பொலிசார் மீது ரஷ்ய விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் அவர்களில் பலர் பலியானார்கள். கெரில்லாக்கள் என சந்தேகப்பட்டு ரஷ்யத் துருப்பினர் மேற்கொண்ட தாக்குதலிலேயே இவர்கள் பலியானார்கள்.

# பாரிஸ் லாசப்பலில்

## கைத்தொலைபேசி இணைப்பு நிலையம்

# Titanic Com

**எமது வாடிக்கையாளர்களுக்கு 1 Fr உடன் அதி நவீன நீங்கள் விரும்பும் கைத்தொலைபேசியையும், இணைப்பையும் பெற்றுக்கொடுக்கிறோம்.**




- ★ அதி நவீன கைத்தொலைபேசிகள்
- ★ தொலைபேசி உதிரிப்பாகங்கள்
- ★ தொலைபேசி திருத்த வேலைகள்
- ★ Photocopy பிரதிகள்
- ★ Fax அனுப்பவும், பெற்றுக்கொள்ளவும்
- ★ Video, Audio கசற்றுகள் விற்பனைக்குண்டு
- ★ France, Telecom இன் Ticket தொல்லபேசி அட்டைகள்




மேலும் மிக விரைவில் உங்கள் உறவுகளுடன் தொடர்பு கொள்ள அதிக நிமிடங்களுடன் Titanic Com இன் தொலைபேசி அட்டைகளும் வரவிருப்பதையும் மகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.







**203, Rue de la Chaplle**
**75010 Paris.**
**Tel: 01 53 26 36 10**
**Fax: 01 53 26 36 12**

1 Fr



1 Fr



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# 'மாயமான்' வரும் - போகும்

தீர்வுத் திட்ட யோசனைகள் சிலவற்றுடன் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்காக சிறீலங்காவின் வர்த்தகப் பிரமுகரான லலித் கொத்தலாவல வன்னிக்குச் செல்ல விருப்பதாகப் புகையும் செய்திகளோடு சமாதானப் பேச்சு வார்த்தை என்ற பதமும் மீண்டும் மெல்லத் தலைகாட்டியுள்ளது. லலித் கொத்தலாவலவின் வன்னி விஜயம் பற்றி கூறுவதற்கு இது உகந்த காலம் இல்லை எனினும் சிறீலங்கா தரப்பிலிருந்து வன்னியை நோக்கிச் செல்லும் எந்த சமாதான சக்திகளும் தங்கள் கைகளில் எதனைக் கொண்டு செல்லப்போகிறார்கள் என்பது ஒரு முக்கிய விடயமாக எழுகிறது. இனிமேலும் சமாதானம் வேண்டும், பிரச்சினையில் விட்டுக்கொடுப்பு வேண்டும் என்ற சவடால் போதனைகளோடு வன்னிக்கு யாரும் செல்ல நினைப்பார்களேயானால் அதன் பலாபலன்கள் வெறும் பூச்சியமாகத்தான் இருக்க முடியும். சமாதானத்திற்கான அங்கீகாரமாக சிங்கள தேசத்திடமிருந்து ஐந்து வருடங்களுக்கு முன்னராகவே வாக்குகளைப் பெற்ற சந்திரிகா தரப்பு இன்று முழுநாட்டினையுமே பேரழிவுக்குக் கொண்டுசெல்லும் பெரும் கோர யுத்தம் ஒன்றினை நடாத்திவருகின்றது. எனவே சிங்கள தேசத்திலிருந்து சமாதானத்திற்காகக் குரல்கொடுக்கும் சக்திகள் முதலில் தமது வைத்தியத்தினை சந்திரிகா தரப்பிற்கு செய்வதுதான் உசிதமானது.

தனது அரசின் செயற்பாட்டு மந்தத்தினையும், ஊழலினையும் மூடி மறைப்பதற்காக அரசியல் அமைப்பு சீர்திருத்தம், தீர்வுப் பொதி, சமாதானம் என காதில் பூச்சுற்றும் வேலைகளை தமிழர் தாயகத்திற்கு இனிமேலும் சந்திரிகா தரப்பு செய்ய முடியாது. தமிழ் மக்களின் தலைமைத்துவம் இன்று வன்னியில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் சந்திரிகா தரப்பாகட்டும் அல்லது சமாதான விரும்பிகளாகட்டும். இதனைப் புறம்தள்ளி கொழும்பு தமிழ் குழுக்களுக்கும் சக்திகளுக்குத் தலையினையும், வன்னிக்கு வாலினையும் காட்டமுடியாது. தமிழ் மக்களது பிரச்சினை வெறும் சலுகைகளுக்கான பிரச்சினையல்ல. தமிழ் குழுக்களுக்கும், கட்சிகளுக்கும் வேண்டுமானால் அது அவ்வாறாக இருக்கலாம். சிங்களக் கைகள் வெறும் கையினால் முளம் அளந்தாலும் அதனை ஆகா, ஓகோ எனப் பாராட்டுவது அவர்கள் பாணி. ஏனெனில் பல வருடங்களுக்கு முன்னரே தமிழ் மக்களினால் நிராகரிக்கப்பட்டு சிங்களத்திடம் தஞ்சமடைந்தவர்கள் இவர்கள். எனவே இன்றைய நிலையில் உண்மையான சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்த வேண்டுமானால் பத்தோடு பதினொன்றாக தமிழ் தேசியத்தின் பிரச்சினைகளையும் யாரும் நோக்க முடியாது. தமிழ் தேசியத்தின் வாழ்வியல் உரிமை அச்சுறுத்தல் இல்லாமல் தமது சொந்த மண்ணில் பேணப்படும் வரை சமாதான விரும்பிகளின் மாயமான்கள் வரும் போகும். ஆனால் அவற்றை தமிழ் தேசியம் கணக்கில் எடுத்துக்கொள்ளப் போவதில்லை.




# சமமானவர்களாகவே சமாதானம் பேசலாம்

## பார்வை

மட்டக்களப்பு, வவுனியா நகர்களில் புலிகள் நடாத்தும் இராணுவ நடவடிக்கைகள் சிறீலங்காவின் இராணுவ அரசியல் தலைமைகளையும் செய்தியாளர்களையும் பரபரப்புக்குள்ளாக்கியுள்ளது. தமது பூரண ஆக்கிரமிப்பு வலயத்தில் தமிழர்களின் போரணிகள் தாக்குதல்களை நடாத்துவது ஆபத்தானது என்பதை இவர்கள் அறிவர். ரத்வத்தையும், சிறீலாலும் தமது தரப்பை பாதுகாப்பதற்கான இரகசிய கூட்டங்களை நடாத்துகின்றனர்.

மாங்குளத்தில் தம்மைச் சந்தித்த புலிகளிடம் போரை நிறுத்தி பேச்சு நடாத்தலாமே என ஒரு இராணுவத்தினன் கேட்டான் எனக் கூறப்படுகின்றது. கொழும்பில் தமது பிள்ளைகளை போரில் இழந்த பெற்றோர் சங்கம் 'போரை நிறுத்து' என ஆர்பாட்டம் செய்கின்ற்து. "போரின் கடுமையினால் தமது செல்வம் திரட்டுவதற்கான சந்தர்ப்பங்களை இழக்கும் வணிகர்களும், கைத்தொழில் அதிபர்களும் புலிகளுடன் பேச வன்னிக்கு செல்ல முயல்கின்றனர்.

இவை அனைத்தும் ஒரே சக்கரத்தில் இயங்குபவை. தமது இராணுவ பலம் மீது நம்பிக்கை இழக்கும் ஒவ்வொரு வேளைகளிலும் சிங்கள தேசம் இப்படியான சமாதானக் குரலை ஒலிக்கின்றது. பலமாக இருக்கின்றோம் என கருதும் வேளைகளில் புலிகளை அழித்துவிடலாம் என்ற எதிர்பார்ப்புடன் இயங்கும் சக்திகள் ஜெயசுக்கிறுயும், ரணகோசவும் புலிகளை அழிக்க முடியாதவை என உணர்ந்தபோது சமாதானத்திற்காக அழ ஆரம்பிக்கின்றன.

**இச் சக்திகளுக்கு புலிகளின் மாங்குளம் தளபதி கூறியது போன்று நாம் சமாதானத்திற்கும் தயார், போரிற்கும் தயார் எனக் கூறுவதே சிறந்ததாகும். இதன் உட்பொருள் யாதெனில் தமிழீழமும், சிறீலங்காவும் சமமான உரிமைகளைக் கொண்ட இரு தேசங்கள் என்பதை உலக சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்பதேயாகும்.**

★ ★ ★

கொழும்பின் அரச ஏடான 'சண்டே ஒப்சேவர்' புலிகளின் போதைவஸ்து வலை தொடர்பாக இந்தியப் பொலிஸார் ஆராய்வதாக தலைப்பு செய்திகளை வெளியிட்டது. இவ்வாண்டு உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து புகையிலை தடுப்புக்கான பரிசைப் பெற்ற சந்திரிகாவுக்கு போதைவஸ்து தடுப்புக்கு பரிசு வாங்கித்தரும் முயற்சியல்ல இது. இது கதிர்காமரின் அகலமாக எப்படியும் கதைக்கக் கூடிய வாய்க்கு அவல் கொடுக்கும் நடவடிக்கையாகும்.

இந்தியாவின் தலைமை வணிக மையமான பம்பாயின் (மும்பாய்) நிழல் உலகைச் சேர்ந்த ஒரு கிரிமினல் கைதுசெய்யப்பட்டார். இவரிற்கு பம்பாயில் வசிக்கும் தமிழக தமிழ் அடியாட்கள் உள்ளதுடன் பம்பாயில் இருந்து செயற்படும் சில ஈழத் தமிழர்களின் தொடர்புகளும் உண்டு. இதுவே புலிகளுக்கும் இந்த நிழல் உலக கிரிமினலுக்கும் தொடர்பை ஏற்படுத்த, சில இந்திய பொலிஸ் அதிகாரிகளுக்கும் சில செய்தியாளர்களுக்கும் கிடைத்த ஆதாரமாகும். புலிகளுடனான தொடர்பை கொண்டவர்களை கைது செய்தால் பதவி உயர்வு கிட்டும் என்ற பேராசை கொண்ட பொலிஸ் அதிகாரிகள் தமது நட்பு செய்தியாளர்களைப் பயன்படுத்தி இச் செய்தியை பரப்பிவிட்டனர். எதுவித உண்மைகளுமற்ற விடயமானலும் புலிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் காட்டினால் பத்திரிகையை விற்கலாம் என்பதை செய்தி ஏடுகளின் கண்ணியமான ஆசிரியர்கள் அறிவர்.

**இதனை கொழும்பு அரச ஏடுகள் பரபரப்பாக வெளியிட்டு புலிகளை மலினப்படுத்தும் விசமத்தனத்தை செய்துள்ளனர். தாம் நேரிடையாகச் சொன்னால் எடுபடாது என்ற உண்மையை அறியும் அரச ஏடு இந்திய பொலிஸாரை துணைக்கழைத்து பரப்புரை செய்துள்ளனர்.**

செய்திகளை இவ்வாறு உருமாற்றி பயன்படுத்துவது சந்திரிகா அரசாட்சியின் சிறப்பம்சமாகும். வன்னிக்கு பாதையை தாமே மூடிவிட்டு புலிகள் மூடிவிட்டார்கள் என அழுதவர்களல்லவா?

★ ★ ★

சிங்கள தீர்வுப் பொதியை காவிக் கொண்டு வன்னிக்கு செல்லப் போவதாகக் கூறும் லலித் கொத்தலாவெல மகான் யேசு போன்று பேச ஆரம்பித்துள்ளார். *எனக்கு புலிகள் மீதும், பிரபாகரன் மீதும் ஆழ்ந்த வெறுப்பு உண்டு. ஆனால் வெறுப்பு போரை முடிவுக்கு கொண்டு வராது என்பதை நான் உணர்கின்றேன்* என்றெல்லாம் பேசும் அவர் தான் பிரபாகரனுடன் மட்டும்தான் பேசுவேன் என 'றொயிட்டர்' செய்தி நிறுவனத்திற்கு கூறியுள்ளார்.

இரு பிரதான சிங்களக் கட்சிகளினதும் கூட்டு சம்மதத்துடன் பொதுத் திட்டம் ஒன்றை புலிகள் முன்வைக்கப் போவதாகக் கூறும் லலித் கொத்தல்வல் இதுவரை தமது நாட்டின் திட்டம் என்ன என்பதை தமிழர்களுக்குத் தெளிவாகக் கூறவில்லை. வெறுமனே தமிழர்களும் சிங்களவர்களும் சமமானவர்கள் எனக் கூறுவதன் மூலம் மட்டும் தீர்வு உருவாகப் போவதில்லை. தீர்வு தொடர்பாக தமிழர்களின் தேசியத் தலைவர் சில தெளிவான கருத்துக்களை முன்வைத்துள்ளார். இது பற்றி வணிகர்களின் தலைமை கருத்துக் கூறவில்லை. வெறுமனே சிங்களவர்களின் இருப்பை தென்தமிழீழத்தில் புலிகள் அங்கீகரித்தால் தமிழீழமும் தீர்வுக்காக ஆராயப்படலாம் என பேட்டியொன்றை முன்பொருமுறை இவர் வழங்கினார்.

*கொத்தலாவெலவால் சிங்கள இனவாதத்திற்கும் தமிழர்களின் எழுச்சிக்கும் இடையே தீர்வு காண்பதற்கு ஏற்ற பலத்தைக் கொண்டவர் அல்ல. மூன்றாம் தரப்புப் பேச்சுக்களை மட்டுமே எமது தேசியத் தலைவர் சமாதானத்திற்கான தேவையாக வலியுறுத்தியுள்ளார். இதனைத் தவிர்த்தால் எல்லைகளைப் பற்றிக் கதைக்கவே கொத்தலாவெல செல்ல வேண்டியிருக்கும்.*

★ ★ ★

நீலனின் மறைவை கருணையுடன் அனுட்டித்த 'இந்தியா ருடே' ஏட்டின் தலைமை தமிழ்பதிப்பாசிரியர் தன்னை அறிவிலி எனக் காட்டிக் கொள்ள படாதபாடுபட்டுள்ளார். சந்திரிகாவும், பீரிசும் கூட முழுமையான தீர்வு தராது என நம்பும் தீர்வுப் பொதி நிறைவேற்றப்பட்டிருந்தால் இனச்சிக்கல் அந்த நிமிடத்தில் காணமல் போய்விடும் எனக் கூறி தமிழக மக்களுக்கு தன் அறிவை(?) காட்டிய அந்த ஆசிரியர் வாஸந்தி கொழும்பில் அரச பாதுகாவலில் வாழ்ந்து பின்னர் அமெரிக்கா சென்றுவிட திட்டமிட்டுக் கொண்டிருந்த நீலனை புலிகள் கொன்றுவிட்டதாக கூறுகின்றார். புலிகளை இகழ்வதாக நினைத்துக் கொண்டு தனக்கு ஈழத்தமிழர்களின் இனச்சிக்கல் பற்றி ஒன்றுமே தெரியாது எனக் காட்டிக் கொண்டுள்ளார்.

தனது பரப்புரைக்காக கன்னடத்து நாடோடிக் கதை ஒன்றை எமக்கு சொல்லும் வாஸந்திக்கு ஈழத்தமிழர் கொடுக்கக் கூடிய அறிவுரை கதை *எழுவதற்கு கற்பனை வேண்டும் விடுதலைக்காக போரடுவதற்கும் உயரிய மானுட நேசமும் புரட்சிகர சிந்தனையும் வேண்டும்* என்பதேயாகும்.

*– ராஜா*

# ‘சினிமாவில் இருக்கும் யாருக்குமே அக்கறை இல்லை!’

## அதியமான்



**அதியமான் ‘தொட்டாச்சிணுங்கி’ ‘சொர்ணமுகி’ ஆகிய படங்களை இயக்கிய இயக்குநர் தலைமுறைகள் திரைப்படத்தில் நடித்தவர், அண்மையில் தெலுங்குப்படம் ஒன்றின் பாடல் காட்சிகளை எடுக்க மலேசியா வந்திருந்தார். திரைப்படம் மீதான மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்கள் என்றறிந்தும் தான் சார்ந்துள்ள திரைத்துறை சம்பந்தமான நமது கேள்விகளுக்குப் பதிலளித்தார். அவற்றில் இருந்து சிலபகுதிகள் இவை, நேர்காணல் கணபதி கணேசன்.**

✓ **சமூகத்தில் சினிமாவின் பயன்பாடு பற்றிய தங்கள் கருத்து என்ன?**

✪ என்னுடைய கருத்து சினிமா என்பது ஒரு வியாபாரம். அதை மக்களுக்காக எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றி சினிமாவில் இருக்கும் யாருக்குமே அக்கறை இல்லை. ஏன்னா சினிமா என்பது ஒரு வியாபாரம் மட்டும்தான். இதன் மூலம் மக்களுக்கு ஏன் நல்லதைச் சொல்லவில்லை என்று நீங்கள் தூண்டுவது நியாயமாக இல்லை. ஏனென்றால் இதற்கான பணத்தைப் போடுபவர் அந்தப் பணத்தைத் திரும்ப எடுப்பதில்தான் முதல்குறிக்கோளாகக் கொண்டிருப்பார்.

தொடை தெரிகிறமாதிரி பாவாடை கட்டிப் படம் எடுத்தால்தான் பணம் திரும்ப வருகிறது என்றால் தொடை தெரிகிற மாதிரித்தான் படம் எடுப்பான். ஏன் என்றால் நீங்கள் சொல்கிற மாதிரி குடும்பக் கதைகளை மையமாக வைத்துப்படம் எடுத்தால் (நல்ல குடும்பம், நல்ல மனைவி, நல்ல நட்பு இந்த மாதிரிக் கதைகளைப் படமாக எடுத்தால்) அவை வியாபார ரீதியில் தோல்வியடைந்து விடுகின்றன. இது நான் சினிமாவில் உணர்வு பூர்வமாக உணர்ந்த ஒரு விடயம். அதனால் சினிமாவைப் பயனுள்ள தேவைகளுக்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்று சொல்ல உங்களுக்கு உரிமை இல்லை. ஏனென்றால் அது 100% வியாபாரம். கோடிக் கணக்கில் முதலீடுபோட்டு நஷ்டமடைய யாரும் தயாராக இல்லை. நல்ல படம் எடுக்க எல்லாருக்கும் தெரியும்.. பாலச்சந்தர், பாரதிராஜா, கடைசி டைரக்டர் எனக்கு வரைக்கும் நல்ல படம் எடுக்கத் தெரியும். நான் எடுத்த நல்லபடம் ஓடவில்லை. வியாபார ரீதியாக எடுத்தபடம் நல்ல வெற்றியைத் தந்திருக்கின்றது. ‘தொட்டாச்சிணுங்கி’ படத்துக்காக ‘அவார்டு’ கிடைத்தது. எல்லாமே கிடைத்தது. ஆனால் பணம் கிடைக்கவில்லையே!

நல்ல கருத்துள்ள படம் எடுப்பதானால் பட முதலாளி அரச்சாக இருக்கவேண்டும். பாலச்சந்தரிடம் ஒருபடம், பராதிராஜாவிடம் ஒருபடம் எனக்கொடுத்து பணத்தை முதலீடு செய்து ‘நல்ல படமாக எடுங்கள். இதற்கு வரி கிடையாது. மக்களுக்கு நல்ல செய்திகள் இருக்க வேண்டும்’ என்று சொன்னால் அப்படி நல்லபடம் எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். பட முதலாளி வேறு ஒருவராக இருக்கும்போது எமது முதல் குறிக்கோள் அவர் பணத்தைத் திரும்பிப்பெறுவது எப்படி என்பதுதான். சினிமாவே பயனுள்ளதா? என்று நீங்கள் கேட்கும் போது அதற்குச் சரியான பதில் என்னால் சொல்ல முடியாது. ஏன் என்றால் நான் முன்பே சொன்னது மாதிரி இது ஒரு வியாபாரம். ‘குட்டைப் பாவாடை போட்டுப்படம் எடுக்கக்கூடாது’ என்றால் குட்டைப் பாவாடை தடை செய்யப்பட்டது என்று அரசை அறிவிக்கச் சொல்லுங்கள். அதன் பிறகு நாம் ஏன் குட்டைப்பாவாடை கட்டிப் படம் எடுக்கப்போகிறோம். அதிகாரம் அரசின் கையில் இருக்கிறது. நாம் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறோம்.

✓ **சினிமாவில் உங்கள் பிரவேசம் பற்றிச் சொல்லுங்கள்?**

✪ எங்கள் தாத்தா பரமக்குடியில் ஒருபெரும் புலவர். என் பெற்றோர் ஆசிரியர்கள். நிறையக் கவிதைகள், நூல்கள் எல்லாம் என் தாத்தா எழுதியிருக்கிறார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, பாரதியார் அளவுக்கு அவரின் கவிதைகள் இருந்தன. ஆனால் ஊருக்கு வெளியே அவர் அறியப்படவில்லை. அந்த மாதிரி நான் ஆகவிரும்பவில்லை. என் திறமை, உழைப்பு, வெளியே நாலு பேருக்குத் தெரிகிறமாதிரி இருக்கவேண்டும் என்று விரும்பினேன். புகழ்பெற வேண்டும் என்கிற ஆசை எனக்கு இருந்தது. சினிமாவுக்கு வந்ததே அதனால்தான். தமிழ் இருக்கிற இடமெல்லாம் அதியமான் அறியப்பட வேண்டும் என்கிற ஆசை எனக்கு இருந்தது. அதற்காகத்தான் நான் சினிமாவைத் தேர்ந்தெடுத்தேன். டைரக்டர் கே.விஜயன் அப்போது நிறையப்படங்கள் எடுத்துக்கொண்டிருந்தார். அவரிடம் உதவியாளராகச் சேர்ந்தேன். அவரின் 10 படங்களுக்கு உதவி டைரக்டராக இருந்த காலத்தில் ஒரு படம் எப்படி எடுக்கப்பட வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன். என்ன படம் எடுக்கிறது என்பதை நாம் சொந்தமாகத்தான் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும்.

சுரேஷ் மேனனின் ‘புதிய முகம்’ என்கிற படத்திற்குத் திரைக்கதை அமைத்து வசனம் எழுதினேன். அவரின் டைரக்ஷனில் ‘பாசமலர்கள்’ என்று ஒரு படம் எடுத்தார்கள். அந்தப்படம் தோல்வியடைந்தது. அதன்பிறகு ‘ரேவதி’ என்று ஒரு தொலைக் காட்சித் தொடரைச் சுரேஷ் மேனன் (ரேவதியின் கணவர்) எடுத்தார். அந்தப் படத்தின் வசனங்களை நான்தான் எழுதினேன். அந்தத் தொடருக்கு விருது கிடைத்தது. அதன்பிறகு நானே நண்பர்களுடன் ஒன்றுசேர்ந்து ‘தொட்டாச்சிணுங்கி’ படம் பண்ணினோம். நல்ல டைரக்டர் என்ற பெயர் கிடைத்தது. அடுத்து ‘சொர்ணமுகி’ படம் செய்தேன். மிகப்பெரிய வெற்றி கிடைத்தது. அதன் பிறகு ‘தலைமுறைகள்’ படம். அதில் ஒரு கதாநாயகனாகப் பதவி உயர்வும் கிடைத்தது.

✓ **நீங்கள் நடிக்கவேண்டும் என்று எப்படித் தீர்மானித்தீர்கள்?**

✪ ஒரு அப்பா—மகன். ராஜ்கிரண் அப்பா, நான் மகன். மகனாக நடிக்க வியாபார ரீதியாக யாரைக்கேட்டாலும் 50 லட்சம் ரூபா பணம் கேட்டார்கள். 50 லட்சம் பணம் வாங்கிக் கொண்டு, ‘நான்தான் கதாநாயகன். அதனால அப்பா காரக்டர பின்னால காட்டுவோம்’ அப்படி என்று கதையில சில மாறுதல்கள் செய்யவேண்டும் என்று கேட்டார்கள். இப்படி ஒரு அப்பாவுக்கு இப்படி ஒரு மகன் என்பது என் கதை. இப்படி ஒரு மகனுக்கு இப்படி ஒரு அப்பா என்று கதை மாற்றம் அடையும் போது கதாபாத்திரத்தின் சிறப்புக் குன்றும் அபாயம் இருந்தது. இதைத் தவிர்க்க நானே அந்த மகன் பாத்திரத்தில் நடிக்கலாம் என்று முடிவு செய்தேன். கதாநாயகன் வேஷமும் கிடைத்தது. 50 லட்சம் பணமும் மிச்சம். இப்படித்தான் நான் கதாநாயகனானேன்.

✓ **ஒரு நல்ல சினிமா எப்படி இரு–க்கவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

✪ தயாரிப்பாளரின் பணத்தைத் திரும்ப எடுக்க என்னனென்ன இருக்கவேண்டுமோ அவையெல்லாம் இருப்பதுதான் நல்ல சினிமா! எல்லோரும் படம் பார்க்கிறார்கள் என்றால் அது நல்ல சினிமா! நல்ல படம் என்று சொல்லிவிட்டு விருது வாங்கிக்கொண்டு, படவிழாக்களுக்கு மட்டும் அனுப்பிக்கொண்டிருந்தால் அது நல்ல சினிமா அல்ல! மக்கள் பார்க்காத படம் எதுவும் நல்ல படமே அல்ல! நல்ல படம் என்று ஒருபடம் எடுத்துவிட்டு நீங்களும் நானும் அந்தப் படத்தைப் பார்த்தால் போதாது. மக்கள் பார்க்கவேண்டும். அவர்கள் இதைத்தான் பார்க்க விரும்புகின்றோம் என்று அடம் பிடிக்கிறார்கள். எனவே அவர்கள் விரும்பிப் பார்க்கிற படம்தான் நல்லபடம்.

✓ **நல்லபடம் என்று நீங்கள் ஏதாவது எடுக்க விருப்பம் கொண்டிருக்கிறீர்களா?**

✪ அப்படி இல்ல! அதில் ஒரு விஷயம் நான் சொல்ல வேண்டி இருக்கிறது. சினிமாவை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. ரியாலிஷம், 2. ஐடியலிசம். நடிகர் சிவாஜிகணேசன் ரியாலிஷம், M.G.R ஐடியலிஷம், மனிதன் எப்படி இருக்கிறானோ அது ரியாலிஷம், மனிதன் எப்படி இருக்க ஆசைப்படுகிறானோ அது ஐடியலிஷம்.

ஒரு பஸ்ஸில் போய்க்கொண்டிருக்கும்போது ஒருத்தன் பின் பாக்கட் அடித்துவிடுகிறான். நீங்கள் அதைப் பார்க்கிறீர்கள். அவனை அடித்து நொருக்க வேண்டும் என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் செய்யமாட்டீர்கள். ஏன்னா, திருடன் தன் விரலிடுக்கில் பிளேடையோ கத்தியையோ வைத்திருக்கலாம் என்று நினைப்பீர்கள். இது உண்மையான நிகழ்ச்சி. ஆனா இன்னொரு காட்சியில் அவனைப் பிடித்து அடித்து நொருக்கி ‘ஏண்டா ராஸ்கல்! என்னடா ஊரு இது? என்னடா நாடு இது! நடுரோட்டில இப்படி நடக்குது! நீ ஆம்பளையா! இல்லையே! சேலையா கட்டி இருக்கிறாய்? Pant தானே போட்டிருக்கிறாய்!’ என்று கத்தினால் அது கதாநாயகன். இதுதான் ரியாலிஷத்திற்கும் ஐடியலிஷத்திற்கும் உள்ள வேறுபாடு. இந்த இரண்டும்தான் சினிமா.

ஒருத்தன் கிராமத்தில் வயலில் உழுதுகொண்டு சிங்கப்பூர் போக வேண்டும் என்று கனவில் மிதந்துகொண்டிருப்பான். இந்த நினைவுகளுடன் அவன் படம் பார்க்கும்போது கதாநாயகன் சிங்கப்பூரில் ஆடிப்பாடும்போது ரசிகன் தானே சிங்கப்பூரில் இருப்பதாய் உணர்வான். இதில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் உங்கள் கற்பனையை விரித்துக்காட்டலாம். இதுதான் என்னுடைய கருத்து. ஒன்று நம்மள மாதிரி இருக்கணும். அல்லது நாம நினைக்கிறமாதிரி இருக்கணும்.

ஒரு கதாநாயகன் நாலு பேரை அடித்து நொறுக்குவான். ரசிகன் கைதட்டிக்கொண்டு படம் பார்ப்பான். ‘எப்படி நூறு பேரை ஒருவன் அடிக்க முடியும்?’ என்று ரசிகன் என்றைக்கு யோசிக்கின்றானோ அன்றைக்கு வரைக்கும் இப்படித்தான் படங்கள் எடுத்துக்கொண்டிருப்போம்.

✓ **இன்னும் ரசிகன் அப்படி நினைக்கலை என்று கருதுகிறீர்களா?**

✪ இன்னும் நினைக்கவில்லை. உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். ‘தலைமுறைகள்’ என்ற படத்தில் நான் முதல் காட்சியில் எல்லோரையும் அடித்து நொறுக்குகிறேன். ரசிகன் பார்த்துக்கொண்டிருக்கிறான். இறுதியில் நான் வில்லனிடம் அடிவாங்கும்போது ரசிகனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதுதான் கதாநாயகன்மேல் ரசிகன் கொண்டுள்ள பற்றுதலுக்கு அடையாளம். இதிலிருந்து யாரும் மீள முடியாது. நான் உட்பட.

✓ **சினிமாவில் உங்கள் குறிக்கோள் என்ன?**

✪ சினிமா எடுத்துக் கொண்டே இருக்கவேண்டும் அவ்வளவுதான்.

✓ **எந்தமாதிரியான சினிமா?**

✪ இரண்டு படம் ஓடற மாதிரி நல்லா எடுத்திட்டா ஒரு படம், நல்லபடம் ‘தொட்டாச் சிணுங்கி’ மாதிரி எடுக்கலாம். இரண்டு படம் பார்த்த ரசிப்பில் மூணாவது படம் பார்ப்பான். 25% மாவது வெற்றி கிடைக்கும் என்பது என் கணக்கு. நான் அதிர்ஷ்டக்காரன் என்று எண்ணுகிறேன். நான் ஹிந்திப்படம் எடுப்பேன், அதுவும் ஷாருகானை வைத்துப்படம் செய்வேன் என்று கனவில்கூட நினைத்ததில்லை.

ஆனால் இப்ப தொட்டச்சிணுங்கிய ஹிந்தியில் ஷாருக்கானை வைத்து எடுத்துக்கொண்டிருக்கிறேன். தெலுங்குப்படம் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

✓ **பிறமொழிப்படங்கள் செய்யும் போது மொழி புரியாத போதும் எப்படி அதனைக் கையாளுகின்றீர்கள்?**

✪ மொழி மாற்றுப்படங்கள் எடுக்கும்போது படம் ஏற்கனவே எடுக்கப்பட்ட படம். நடிப்பு ஒன்று, மொழிதான் வேறு. ஒரு உதவியாளர் போதும், அந்த வசனத்தை மாற்றி எழுதிவிட முடியும். சினிமாவை எந்த மொழியில் வேண்டுமானாலும் எடுக்கலாம். அதற்கு அந்தமொழி தெரிய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

✓ **முன்பு தமிழ்த் திரைப்படங்கள் தமிழ்நாடு, இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா என்ற வட்டத்துக்குள் மட்டும்தான் இருந்தது. இன்று உலகம் முழுவதும் வெளியிடப்படுகிறது. அந்த அளவுக்கு இருக்கும்போது ஏன் நீங்கள் உலகத் தரத்தைப் படங்களில் கையாள்வதில்லை?**

✪ இது குறைந்த அளவினரையே அடைகிறது. மலேசியாவில் உள்ள தமிழருக்காக ஒரு படம் எடுக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அது நிச்சயமாகத் தமிழகத்தில் அடையாளம் காணப்படாது. மலேசியாவில் உள்ளது நம்ம ரத்தம்தான். அந்த ரத்தத்தோட கஷ்டத்தைச் சினிமாவா எடுத்திருக்கிறார்கள் என்று அவர்கள் உணர்கிற அளவுக்கு இருந்துவிட்டால் படையப்பாவைப் பார்த்துக் கைதட்ட மாட்டார்க்ளே! படையப்பாவுக்கு 50 வயதிற்கும், சட்டையைக் கழட்டிவிட்டு உடம்பை முறுக்கிக்காட்டும் போது அது ரஜினி இல்ல, வேறு ஓர் ஆள் என்று ரசிகன் புரிந்து கொள்ளவில்லை என்றால் அவனிடம் மலேசியா பற்றித் திரைப்படத்தில் சொல்லிவிடமுடியுமா?

✓ **உங்கள் பக்கத்துநாடு சிறீலங்கா. தமிழகத்தில் நிறையப் பேர் அகதிகளாகவும் இருக்கிறார்கள். விடுதலைப் போராட்டங்களும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இவற்றின் பிரதிபலிப்புக்கூடத் தமிழ்த் திரைப்படங்களில் காணப்படவில்லையே! ஏன்? பாலச்சந்தர் ஒரு படம் எடுத்தார்? எல்லாவற்றையும் சென்சாரில் வெட்டி எறிந்துவிட்டார்கள்? கதையே புரியாமல் போய்விட்டது.**

✪ இலங்கையில் தமிழர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். அதைக் கதைக்களமாக வைத்து ‘பைலட் பிரேம்நாத்’ என்று ஒரு படம் எடுத்தார்கள். முன்பு நான் 10-ம் வகுப்புப் படிக்கும்போது ‘இலங்கையில் தமிழர்கள் அவதிப் படுகிறார்கள். இந்திய அரசே படையனுப்பு’ என்று தெருவில் நின்று கோஷம் போட்டோம். பள்ளியைவிட்டு வெளியே வந்த போதும் நம்ப ரத்தம் அங்க வேதனையில் துடிக்குது என்று வருத்தப்பட்டேன்! இன்றைக்குத் தமிழ்நாட்டில நிலைமை மாறிக்கிட்டே இருக்கிறது. அவங்க நடக்கிறவிதம், அவங்களைப் பத்தி நமக்குத் தெரியப்படுத்திய விதம், புரிந்துகொண்ட விடயம் நல்லமாதிரி இல்லாதபோது அவர்களைச் சப்போர்ட் பண்ணிச் சினிமா எடுத்தால் தோற்றுவிடுவோம் என்ற பயம்தான் காரணம்.

*நன்றி: செம்பருத்தி*

## இருவாரக் கதை




# பதியப்படாத பதிவுகள்

தூறல் போல் தொடங்கி 'சோ' வென்று கொட்டி விட்ட மழையில் மரங்களும் செடிகளும் சிலிர்த்து நின்றன.

பீலியால் இன்னும் தண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

வேலிக்கு மேலால் தெரிந்த இராணுவத் தலைகளும் கண்களும் காணாமல் போயிருந்தன.

சற்று நேரத்துக்கு முன் இராணுவக் கண்களைக் கண்டு, மருண்டு முகம் இருண்டு போயிருந்த சங்கவி, இப்போது தன்னை மறந்து, இலைகளில் இருந்து சொட்டும் மழைநீரைப் பார்த்து ரசித்தபடி விறாந்தை நுனியில் நிற்பதைப் பார்த்த கதிரேசருக்குச் சந்தோஷமாக இருந்தது.

கதிரேசர் இன்றைக்கு என்றுமில்லாத சந்தோஷத்தில் குளித்துக் கொண்டிருந்தார். பின்னே என்ன இருக்காதா? மகள் சங்கவி ஜேர்மனியில் இருந்து வந்திருக்கிறாள். அதுவும் பன்னிரண்டு வருடங்களின் பின்.

★★★

கதிரேசர் இப்படிக் கதிரைக்குள்ளும், கட்டிலிலுமாய் முடங்கிப்போய் இருக்கக் கூடிய ஆள் அல்ல. மீசையையும் முறுக்கிவிட்டுக்கொண்டு, வாட்ட சாட்டமான கட்டுடலுடன் அவர் ராஜநடைபோடும் அழகே ஒரு தனி அழகுதான்.

'எப்போதும் சந்தோஷமாக இருக்க விரும்பும் அவர் வீலிலே வீட்டுக்கு வந்தாலே, வீடு அசாதாரண தலகலப்பில் மிதந்து அவர் அன்பில் திளைத்திருக்கும்.

மனைவி செல்வமும் பெரிய குங்குமப்பொட்டுடன் வளையல்கள் குலுங்க வீட்டுக்குள் வளைய வரும் காட்சி மங்களகரமாகவே இருக்கும்.

பின்னேரம் என்றாலே கதிரேசர் வீட்டுக்குள்ளே இருக்கமாட்டார். பிள்ளைகளையும் செல்வத்தையும் அழைத்துக்கொண்டு Beach, Park, படம் என்று சுற்றித்திரிவார்.

பருத்தித்துறைத் தோசை என்றாலே அவருக்குக் கொள்ளை பிரியம். அதற்காகவே மகள் சங்கவியையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு ஓடக்கரைக்குப் போவார்.

பகலில் எந்தவித அசுமாத்தமும் இல்லாது வேலியோடு வேலியாக மூடப்பட்டிருக்கும் சின்னச்சின்ன சதுரத்தட்டிகள் மாலையானதும் திறக்கப்பட்டிருக்கும். உள்ளேயிருந்து 'கள்'விட்டுப் புளிக்கவிடப்பட்ட தோசைமாவில் சுடப்படும் தோசையின் வாசம் மூக்கைத் துளைக்கும்.

கதிரேசர் சைக்கிளையும் உருட்டிக் கொண்டு ஒவ்வொரு தட்டியாகத் தாண்டும்போது சங்கவி 'ஏனப்பா போறீங்கள்? இங்கேயே வேண்டுங்கோவன்.' பொறுமையிழந்து கேட்பாள்.

கதிரேசர் 'இவளட்டை தோசை சரியில்லை. இவளின்ரை பச்சைச் சம்பல் சரியில்லை.' என்று சொல்லிக்கொண்டு, ஒவ்வொன்றாகத்தாண்டி குறிப்பிட்ட தட்டியில் குனிந்து, மூடு பெட்டியைக் கொடுத்து 'முப்பது தோசை சுட்டு வையணை' என்கிறபோது 'என்ரை ராசா வந்திட்டியே' என்பாள் தோசை சுடும் பெண். ஏதோ அவளும், கதிரேசரும் நெருங்கிய உறவினர்கள்போல இருக்கும் அவளின் கதை. தோசை வாங்கி வாங்கியே பரிச்சயமான உறவு.

'நல்லா நிறையச் சம்பல் போட்டு வையணை' பத்துப்பாலப்பமும் புறிம்பாகச் சுட்டு வையணை.' கதிரேசர் சொல்லிவிட்டு, சங்கவியையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு ரவுணுக்குள் போய் இன்னும் வீட்டுச்சாமான்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு திரும்பி வந்து தோசை பாலப்பத்தையும் வாங்கிக்கொண்டு வீடு திரும்புவார். வவுனியாவில் நிற்கும் சங்கவியின் நினைவலைகள், பருத்தித்துறையை வலம் வந்தன.

பிறந்த மண்ணையும், அப்பா, அம்மா, சகோதரர்களுடனான அந்த வாழ்க்கையையும் நினைக்கும் போதெல்லாம், வீணையின் நரம்பை மீட்டும் போதெழுகின்ற மெல்லிய நாதத்தின் இனிமை தரும் சிலிர்ப்பு அவளுள் ஏற்படும்.

★★★

'என்ன சங்கவி! ஆமியைக் கண்டு பயந்து போட்டியே? இஞ்ச வா. வந்து பக்கத்திலை இரு'

மிகவும் ஆதரவாகவும், ஆசையாகவும் கதிரேசர் சங்கவியை அழைத்தார்.

நினைவுகள் தந்த சிலிர்ப்புடன் சங்கவி வந்து, அவர் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்து இடது கையால் அவர் முதுகைத் தடவி அணைத்துக் கொண்டு வீதியை நோக்கினாள்.



சற்று நேரத்திற்கு முன் சிங்களக் கூலிப்படைகளின் 'பூட்ஸ்' கால்களுக்குள் மிதிபட்டுக் கிடந்த வவுனியாவின் வைரவர் புளியங்குள ஸ்டேசன் ரோட்-சைக்கிள்களும், ஓட்டோக்களும், மனிதர்களுமாய் மீண்டும் உயிர்ப்புடன் தெரிந்தது.

பக்கத்தில் அமர்ந்திருந்த அப்பா கதிரேசரைப் பார்க்கப் பார்க்க சங்கவிக்கு ஒரே கவலையாக இருந்தது. அவரது அகன்ற தோள்கள் ஒடுங்கி, மார்பகங்கள் வலுவிழந்து, கைகளும் கால்களும் சோர்ந்து... உடலுக்குள் நெளிந்து திரியும் நோயின் கொடிய வேதனையைக் கொன்று விடும் அளவு கொடிய வேதனை, பிள்ளைகள் நாடு நாடாய் சிதறியதில் ஏற்பட்ட தனிமையில் கண்ணுக்குள் தெரிய துவண்டு போயிருந்தார்.

அவர் திடீரென்று நோய்வாய்ப்பட்டு படுக்கையாகிப்போனதை 'மேற்கொண்டு வைத்தியம் செய்யமுடியாது,' எல்லாம் கை நழுவிவிட்டது' என்று டொக்டரே கை விரித்த பின்தான், செல்வம் ஜேர்மனிக்கு ரெலிபோன் பண்ணி சங்கவியிடம் சொன்னாள்.

சங்கவியை ஒருதரமாவது பார்த்து விடவேண்டுமென்ற ஆசைத் துடிப்பிலேயே அவர் இன்னும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருக்கிறார் என்றும் சொன்னாள்.

சங்கவியை ஒரு தரமாவது பார்த்துவிட வேண்டுமென்ற ஆசைத் துடிப்பிலேயே அவர் இன்னும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருக்கிறார் என்றும் சொன்னாள்.

'உயிருக்கு உத்தரவாதமில்லாத தாயகத்தில் எனக்கொன்று ஆகிவிட்டால், ஜேர்மஹியில் விட்டுவரும் எனது குழந்தைகள் சிறகிழந்து போவார்களே' என்ற பயம். சங்கவியின் மனதைக் குழம்ப வைத்தாலும், அப்பாவின் பாசம் வலிந்திழுக்க போராடும் மனதுடன்தான் புறப்பட்டாள்.

தாயகத்தில் கால்வைத்தபோது மனதுக்குள் ஏற்பட்ட இனம் புரியாத சந்தோஷத்தையும், துள்ளலையும் முண்டித் தள்ளிக்கொண்டு முன்னுக்கு வந்து நின்றது பய உணர்ச்சிதான்.

'பொட்டை அழித்துவிடு' பின்னுக்கு நின்ற சிங்களப் பெண் ஆங்கிலத்தில் கிசுகிசுத்தபோது, பன்னிரண்டு வருடங்களாக ஜேர்மனியிலேயே தவிர்க்காத பொட்டைத் தவிர்த்து, பாழடைந்த நெற்றியுடன், கால்கள் பின்னித்தடுமாற படபடக்கும் நெஞ்சுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடந்ததை நினைக்க சங்கவிக்கு மனசு கூசியது. 'ஏன் இப்படி முகம் இழக்கப் பண்ணப்படுகிறோம்' என்று குமுறலாகக்கூட இருந்தது.

விமான நிலையத்தில் மாமாவை இனங்கண்டு, செக்கிங் Points தாண்டி வெள்ளவத்தை வரைபோய், 'பொலிஸ்ரிப்போர்ட்' எடுத்து வவுனியா புறப்படுவதற்கிடையில் சங்கவி நிறையத்தரம் எரிச்சலப்பட்டாள்.

'அந்நிய நாட்டில் எமக்கிருக்கும் சுதந்திரம்கூட, எமது நாட்டில் எமக்கில்லையே' என்று மாமாவிடம் குமுறினாள்.

'வவுனியாவிலை ரெயின் நிண்டதும் ஓடிப்போய் லைன்ல நில். இல்லாட்டி 'பாஸ்' எடுத்து வீட்டை போய்ச் சேர மதியம் ஆகிவிடும்.' மாமா ஏற்கெனவே சொல்லியிருந்தாலும் சங்கவி ஓடவில்லை.

அதன் பலனாக, வவுனியா ரெயில்வே ஸ்டேசனை நிறைத்து நின்ற சிங்களக் கூலிப்படைகளுக்கு இடையில் நீண்டு, வளைந்து, நெளிந்து நின்ற மூன்று மனிதவரிசைகளின் மிக நீண்ட வரிசையில் இறுதி ஆளாக அவள் நின்றாள். இறுதிக்கு முதல் ஆளாக அவளது மாமா நின்றார். சங்கவி அலுப்பு, களைப்பு, பயம், சலிப்பு எல்லாவற்றையும் மீறிய ஆர்வத்துடன் முன்னுக்கு எட்டிப்பார்த்தாள்.

மூன்று வரிசைகளும் ஆரம்பிக்கும் இடங்களில் ஐந்து ஐந்தாகச் சிங்களப்பெண்கள் Uniform உடன் வரிசையாக அமர்ந்திருந்தார்கள். மேசைகளில் பெரிய பெரிய கொப்பிகள் இருந்தன. வரிசையில் முன்னுக்கு நிற்பவரை ஒருபெண் எதுவோ கேட்டு எழுத அடுத்தபெண் ஒரு கொப்பியைப் புரட்டி எதுவோ தேட மற்றைய இரு பெண்களும் எழுதுவதும், பொலிஸ் ரிப்போட்டையோ அல்லது வேறு எதையோ அக்குவேறு ஆணிவேறாய் அலசிப்பார்த்து முடிப்பதுமாய் தொடர இறுதிப்பெண் எதுவோ ஒரு சின்ன ரோஸ் கலர் துண்டைக் கொடுக்க மனித வரிசை ஒவ்வொருவராக ஆறுதலாகக் கலைந்து கொண்டிருந்தது.

6.30 க்கு ரெயினால் இறங்கிய சங்கவியும் மாமாவும் சிங்களப் பெண்கள் இருந்த மேசையடிக்கு வரும்போது நேரம் 8 மணியைத் தாண்டி இருந்தது.

மற்றைய இரண்டு வரிசைகளும் ஏற்கெனவே முடிந்து, அந்த வரிசைகளுக்குப் பொறுப்பாகவிருந்த சிங்களப் பெண்கள் எழுந்து நின்று கைகளை மேலே உயர்த்தி உளைவு எடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்த இரண்டு வரிசைகளும், ஏற்கெனவே வவுனியாவில் இருந்து கொழும்புவரை போய்விட்டு வருபவர்களுக்காம்.

அப்பா கதிரேசர் வவுனியாவில் ஸ்டேசன் மாஸ்டராகப் பணிபுரிந்த காலங்களில் அவரோடு கை கோர்த்துக்கொண்டு துள்ளித்திரிந்த Flattform இன்று சிங்கள இராணுவங்களால் நிறைந்திருக்கும் காட்சியை ஜீரணிக்க முடியாமல் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த சங்கவியை, அந்தச் சிங்களப் பெண்கள் கேள்விகளாய்க்கேட்டு கோபப்படுத்தினர்.

சங்கவிக்குச் சிங்களம் விளங்குகிறதோ இல்லையோ என்பது பற்றியே அக்கறைப்படாத சிங்களப் பெண்கள் அவளின் கோபத்தை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அவர்கள் கேள்விகளால் குடைந்து, ஜேர்மனியப் Passport, Ic பார்த்து பொலிஸ் ரிப்போர்ட்டை ஆராய்ந்து, பாடசாலை வரவுப் பதிவேடுபோன்ற கொப்பியில் பெயர் விலாசம் எல்லாம் பதிந்து, கடைசியாக முத்திரை சைஸில் ஒரு ரோஸ் கலர் துண்டை நீட்டியபோது 'அப்பாடா' என்ற உணர்வுடன் அதை வாங்கிப் பார்த்தாள்.

எல்லாம் சிங்களத்தில் எழுதியிருந்தது. ஒன்றுமே புரியவில்லை.


*(மிகுதி அடுத்த வாரம்)*


சந்திரவதனா செல்வகுமாரன்

# ஜெனீவா பேரணிச்

**கொடி தாங்கிய மகளிர் அணி:**

*தமிழீழ தேசியக் கொடிகளை கரம்பற்றிய மகளிர் அணி இருவரிசைகளில் ஊர்வலத்தில் அணிவகுத்துச் சென்றது.*





**பேரணி ஊர்திகள்:**

*பேரணியின் ஆரம்பத்தில் இரு ஊர்திகள் சென்றன. ஒன்று நாகர்கோவில் பாடசாலை குண்டுவீச்சு விபரீத நிகழ்வையும், மற்றையது செம்மணி புதைகுழிகளையும் – சிறீலங்கா அரசின் கண்துடைப்பு வித்தையையும் காட்டின.*



**பேரணிப் பிரகடனங்கள்:**

*ஜெனீவா நகரிலுள்ள ஐ.நா. முன்றலில் முடிவுற்ற பேரணியின் போது மக்கள் அனைவரும் எழுந்துநின்று தமது வலதுகரத்தை உயர்த்தியபடி 7 பிரகடனங்களை நிறைவேற்றினர். இத் தீர்மானங்கள் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளில் நிறைவேற்றப்பட்டன.*



**சுவிஸ் தொடர்பு சாதனங்கள் விபரிப்பு:**

*தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசு விதித்துவரும் உணவுத்தடைகளை எதிர்த்து ஐ.நாவை நோக்கி தமிழ் மக்கள் பேரணி*





# செய்தித்துளிகள்

**வணக்கத்திற்குரிய இம்மானுவேல் அடிகள் உரையில்:**



தமிழ் மக்களின் அடிப்படைத்தேவைக்காக எழுப்பப்படும் குரல் நசுக்கப்படுவது சிறீலங்காவில் வாடிக்கையாகிவிட்டது. இவற்றுக்கு எதிராக தமிழ் மக்கள் எழுப்பும் போராட்டம் தோல்வியடையப்போவதில்லை என்ற உறுதியுடன், உண்மையுடன் கஷ்டத்தின் மத்தியிலும் அலையலையாகத் திரண்டு நம்பிக்கையுடன் போராடுவீர். சிறீலங்கா அரசாங்கத்திடமிருந்து சமாதானத்தையும் நீதியையும் எதிர்பார்க்க - எங்களுடைய தமிழீழம் எங்கள் ஒவ்வொருவர் கையிலேயே உள்ள - கண்ணீரைத்துடைத்து தமிழீழ போராட்டத்தை விரைவுபடுத்






**தாயகவித்து வெளியீடு:**

தமிழீழ விடுதலைப்புலிகள் சுவிஸ் பணியகத்தின் கலைபண்பாட்டுக்கழகம் தனது புதிய வெளியீடான 'தாயகவித்து' மின்னியல் இசைத்தட்டை பேரணி முடிவில் வெளியிட்டுவைத்தது. இவ் இசைத்தட்டு சுவிசில் உள்ள கலைஞர்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டதாகும்.

**சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி அல்சலின் பிறங்கோ உரையில்:**

இலங்கைத்தீவில் சமாதானத்திற்கான தேவை வந்துவிட்டது. மக்கள் தமது அடிப்படை உரிமைகளைத் தட்டிக் கேட்பதற்கு உரிமையுண்டு. அப்பாவி மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும்.

**சர்வதேச செயற்பாட்டாளர் திரு.சிவா உரையில்:**

ஒரு தேசிய விடுதலைப்போரை நடாத்தும் தேசிய இனமாக இருக்கும் நாம், ஒரு இறுதியான கட்டத்தை எட்டிவிட்டோம். எமது போராட்டத்தை நசுக்கவும் முறியடிக்கவும் சிறீலங்கா அரசு பல தந்திரங்களைச் செய்தபோதும் நாம் தோற்றுவிடவில்லை. மாறாக நாம் பலம்பெற்று நிற்பதை இன்று உலகமே அறிந்துகொண்டிருக்கிறது. இது வெறும் தமிழீழ போராட்டமல்ல, தமிழனின் தன்மானப் போராட்டம். அதனால் தன்மானமுள்ள தமிழர்கள் அனைவரும் போராட்டத்தை எதிர்கொள்ளத் தயாராகவேண்டும். விரைவில் தமிழீழக்கொடி ஐ.நாவில் பறக்கும். தமிழீழ பிரதிநிதிகள் ஐ.நாவில் இருப்பார்கள்.

**மக்களின் எதிர்பார்ப்பு:**

தமிழீழத்திலிருந்து அண்மையில் லண்டன் வந்திருக்கும் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் பேரணியில் கலந்துகொண்டு விசேட உரையினை வழங்குவார் என பலரும் எதிர்பார்த்ததை உணரமுடிந்தது.





**நடமாடும் தமிழினி:**

சூரிச் நகரில் பிரபலமாகிவரும் ஈழத்து சுவைகளை அள்ளிவழங்கும் தமிழினி உணவகம் தொடர் பேருந்தில் ஜெனீவாவுக்கு விரைந்தது.

## உங்கள் கைவண்ணம்




செல்வி ம.மாலதி

*வயது: 04 (15.09.1995)*

*முகவரி:*

**Paris, France.**





## குட்டிக்கதை படிப்போம்

### ஆண்களைக் காப்பாற்றிய பெண்கள்

ஒரு சமயம் ஜேர்மனி மன்னர் வீன்சுபர்க் என்ற நகரத்தின் மீது படையெடுத்தார். மக்கள் பெரும்படையைக் கண்டதும் நகரக் கோட்டைக்குள் புகுந்து கதவை அடைத்துவிட்டனர். ஜேர்மனிப் படை கோட்டையை முற்றுகையிட்டது.

பின் ஜேர்மனியப் படை கோட்டையைத் தகர்த்தது. அதனுள்ளிருந்த மக்களை வெளியேற விடவில்லை. 'அங்கிருக்கும் ஆண்களையெல்லாம் மறுநாள் காலை கொன்றுவிட வேண்டும்' என்று மன்னர் ஆணையிட்டார்.

இதைப் பெண்கள் அறிந்து திகைத்தனர். மன்னரிடம், 'மன்னரே! இது அநியாயம்! ஆண்களெல்லாம் இறந்துவிட்டால் பெண்களாலும், குழந்தைகளாலும் எப்படி வாழ முடியும்? அநாதைகளாக நேருமே! கருணை காட்டுங்கள்' என்று வேண்டினர்.

மன்னர், 'ஆண்கள் மீது கருணை காட்ட முடியாது. பெண்கள் மீது கருணை காட்டுகிறேன். நாளை நீங்கள் கோட்டையைவிட்டு வெளியேறும் போது உங்களுக்கு வேண்டிய பொருள்களை கைகளிலோ, தலையிலோ அல்லது தோள்களிலோ எடுத்துச் செல்ல தாராளமாக அனுமதிக்கிறேன்' என்றார்.

அப்பெண்கள் கூடிப் பேசி முடிவெடுத்தனர். மறுநாள் காலை அவர்கள் கோட்டையைவிட்டு வெளியேறுவதைக் கண்ட படை வீரர்கள் அதிர்ச்சியுற்றனர். அவர்கள் பொன்னும் பொருளும் தூக்கிவரவில்லை, ஆண்களையே தூக்கிச் சென்றனர்.

இச்செய்தி மன்னருக்குத் தெரிவிக்கப்பட்டது. 'நான் வேண்டிய பொருள்களைத்தான் எடுத்துச் செல்லச் சொன்னேன். அவர்களும் அப்படித்தான் செய்துள்ளனர். அவர்களைத் தடுக்க வேண்டாம். போக அனுமதியுங்கள் என்றார்.

## அறிந்துகொள்ளுங்கள்

### தோகைப்புறா

இந்தோனேஷியாவின் மலைக் காடுகளில் பல விசித்திரமான பறவைகள் உண்டு. நீங்கள் பார்ப்பது ஒரு புறா என்றால் நம்புவீர்களா? இதற்கு விக்டோரியா கிரவுன்ட் பிஜியன் (Goura Victoria) என்று பெயர். சாதாரணமாய் இது மரத்தடிகளில் தான் தீனி தேடி அலைந்து கொண்டிருக்கும். ஆனால் இதைச் சற்று சலனப்படுத்தினாலும் போதும்; படபடவென்று பறந்து மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டுவிடும். அப்போது இது போடும் சத்தம் இருக்கிறதே... காட்டையே அதிரடித்து விடுமாம்! இதன் தலையில் மயில் கொண்டை போல எத்தனை அழகான சின்னஞ்சிறு தோகைகள் பார்த்தீர்களா?



*— யாளி*

## தகவல் முற்றம்

### கைக் கடிகாரம் தோன்றியது எப்படி?

1870ம் ஆண்டு நவம்பர் மாதம் சுவிட்சற்லாந்தில் உள்ள ஒரு பூங்கா வழியாக கடிகாரம் தயாரிக்கும் ஒருவர் நடந்துசென்று கொண்டிருந்தார். அப்போது தாயுடன் சென்று கொண்டிருந்த குழந்தை ஒன்று திடீரென்று அழத் தொடங்கியது. குழந்தையின் அழுகையை அந்தத் தாயால் அடக்க முடியவில்லை.

இதைத் தொடர்ந்து அந்தத்தாய் தனது பையில் இருந்த கடிகாரத்தை எடுத்து அதை ஒரு சங்கிலியில் பிணைத்து அழும் குழந்தையின் கையில் கட்ட முயற்சித்தார். அப்போது அந்தக் குழந்தையின் அழுகை நின்றது. இதைப் பார்த்த கடிகார தயாரிப்பாளருக்கு ஏன் கைக் கடிகாரம் செய்யக்கூடாது என்ற எண்ணம் தோன்றியது.



இதையடுத்து அவர் தனது கம்பெனிக்குச் சென்று கைக்கடிகாரம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார். வெற்றியும் கண்டார்.

## கவிதை முற்றம்



### பள்ளி செல்வோம்!

பள்ளி செல்வோம் தோழரே
படிக்கச் செல்வோம் நாங்களே
துள்ளி ஓடித் தோழரே
தேடிச் செல்வோம் பள்ளியே,

ஆடிப் பாடி ஆசையாய்
அன்புத் தோழர் நாங்களே
கூடி ஒன்றாய்க் கற்கவே
கூடும் இடம் பள்ளியே,

பந்து அடித்து ஆடுவோம்
பாய்ந்து குதித்து ஓடுவோம்
வந்து ஒன்றாய்க் கூடுவோம்
வகுப்பில் அறிவைத் தேடுவோம்,

வகுப்பு அறையில் ஆசிரியர்
விளக்கி வைக்கும் பாடங்கள்
அகத் திரையில் எங்களுக்கு
அழிந்திடாத ஓவியமே,

ஆசிரியர் சொல் மதித்து
அறிவினையே நாம் பெற்று
காசினியே வாழ்த்தி நிற்க
கற்போமே பள்ளி சென்று,

நாளை உயர்ந்த மனிதனாய்
நல்ல பணிகள் செய்திட
வேளை இதுவே கற்றிட
விரைந்து செல்வோம் பள்ளியே,

அன்பு நிறைந்த ஆசிரியர்
அணைத்து நிற்கும் தோழர்கள்
என்றும் நெஞ்சில் நிறைகின்ற
இனிய பள்ளி மறப்போமா?

— அசலை

## அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 43**

பிள்ளைகளே!
சொற்களைக் கண்டுபிடிக்க முயன்று பாருங்கள்.
முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | X 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | X 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| X 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | X 23 | 24 | 25 |

**இடமிருந்து வலம்**

1. 1–2 நன்றியுள்ள மிருகம்.
2. 6–8 வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளை இப்படி அழைப்பர். அமெரிக்கா. இதற்கு தலைமை வகிக்கிறது. இங்கு வலமிருந்து இடமாக உள்ளது.
3. 4–5 சான்றோர்கள், அறிஞர்கள், வீரர்கள் நினைவாக இதை அமைப்பார்கள். இங்கு வலமிருந்து இடமாக உள்ளது.
4. 12–15 பாம்பை இப்படியும் அழைப்பர்.
5. 21–22 சைவசமய மக்களால் மதிக்கப்படும் ஒரு மிருகம்.

**மேலிருந்து கீழ்**

6. 1–11 நாடுவிட்டு நாடு அலைந்து திரிபவர்களை இப்படிச்சொல்வர்.
7. 12–22 ஒரு நாட்டை ஆளுகின்ற அதிகார அமைப்பை இப்படி அழைப்பர்.
8. 8 –18 இது மிகவும் பெறுமதியானது. இதனை வீணாக்கக்கூடாது என்பர்.
9. 14–24 காடு என்று பொருள்படும்.
10. 5–12 தமிழர்களின் தொன்மையான விளையாட்டுக்களில் ஒன்று.

**சொற்சிதறல் எண் நாற்பத்தி இரண்டின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | மி | ■ | சி | ப |
| ந | த் | தை | ■ | ரி |
| க | தி | ய | தி | பா |
| ரி | ர | ல் | ரி | ட |
| செ | ன் | னை | ■ | ல் |

## சித்திர முற்றம்

*நிறம் தீட்டிப் பாருங்கள்*



# மணலாறு ஒரு வீரவரலாறு



30

## ஒபரேஷன் கஜபார (ஒபரேஷன் சிக்சர்)

மின்னல் நடவடிக்கையின் மூலமும் மணலாற்றை வெற்றிகொள்ள முடியவில்லை என்பதால் மணலாற்றை சுற்றியுள்ள பகுதிகளை முதலில் தமது 'கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து அதன் பின்னர் மேற்கொள்ளும் தாக்குதலே வெற்றிக்கான சிறந்த வழி என்ற புதிய சிந்தனையொன்று சிங்களப்படைத் தலைமையிடம் உருவாகியிருந்தது. மின்னல் இரண்டின் மூலம் கைப்பற்றிக்கொண்ட கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் இருந்து



நாயாறு முகத்துவாரம் வரையிலான கடற்கரையோரப் பகுதியை கைப்பற்றி அதன் பின்னர் மணலாற்றுக் காட்டின் மீது தாக்குதலை மேற்கொண்டாலே மணலாற்றை வெற்றிகொள்ள முடியும் எனக் கருதியது. அதனைவிட யாழ்.குடாவிற்கான புலிகளின் போக்குவரத்து மணலாற்றில் இருந்து இப்பகுதிக் கடலினூடாகவே நடைபெறுகின்றது. இப்பகுதியை கைப்பற்றிவிட்டால் யாழ். குடா மீது எதிர்காலத்தில் தாம் மேற்கொள்ளப்போகும் தாக்குதலுக்கு புலிகளின் அணிகள் மணலாற்றில் இருந்தோ, அல்லது கிழக்கின் ஏனைய பகுதிகளில் இருந்தோ கடல்வழியான போக்குவரத்தின் மூலம் விரைவாக வந்துசேர்வதை தடுப்பதற்கும் இப்பகுதியை கைப்பற்றியாக வேண்டுமென்பது சிங்களப் படையின் சிறந்த தளபதியாக இருந்த முன்னால் இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவாவின் திட்டமாகவும் இருந்தது. (இவர் யாழ். குடாமீது தாக்குதலை மேற்கொள்ள தயாராக இருந்தவேளையிலேயே 08.08.92 அன்று அராலித்துறையில் வைத்து புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.)

இவற்றை எல்லாம் விட, நாயாறு பகுதி பாதுகாப்பற்றது எனக்கூறி அங்கு குடியேற மறுக்கும் சிங்களவர்களை அப்பகுதிகளில் பாதுகாப்புடன் குடியேற்றுவதற்கும் தமிழ் மண்ணை அபகரிப்பதற்கும் இப்பகுதியை கைப்பற்றியாக வேண்டும் என்பது சிங்கள அரசின் திட்டமாக இருந்தது. அதனால் கொக்குத்தொடுவாயில் இருந்து நாயாறு வரையான பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது எதிர்காலத்தில் பல்வேறு வகையில் மிகவும் பயனுள்ளதாகவே இருக்கும் என்பதை தெளிவாகவே தெரிந்திருந்தது சிங்களப்படைத் தலைமை. இவ்வாறு பல்வேறு காரணங்களுக்காக அப்பகுதி மிகவும் முக்கியம் வாய்ந்ததென கருதியதால், அதனை கைப்பற்றி மணலாற்றின் மீது அடுத்த தாக்குதலைத் தொடுப்பதற்கென வகுப்பட்ட தாக்குதல் திட்டமே 'ஒபரேஷன் கஜபார' (ஒபரேஷன் சிக்சர்). செப்டெம்பர் 91ல் மின்னல் நடவடிக்கையில் பின்வாங்கி ஓடிய படையினர் மீண்டும் இத் தாக்குதலுக்காக தயார் படுத்தப்பட்டனர். மழைக்காலம் முடிந்து கோடைக்காலம் ஆரம்பித்து தமக்கு சாதகமான காலநிலையும், களநிலையும் வரும்வரை எதிர்பார்த்து காத்திருந்தன சிங்களப்படைகள்.

1992 மார்ச் மாதம், கொக்குத்தொடுவாய் முகாமிலும் முல்லைத்தீவின் ஏனைய முகாங்களிலும் படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டதுடன் தாக்குதலுக்கான முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளிலும் இறங்கத்தொடங்கினர். சீனாவில் இருந்து கொள்ளவனவு செய்யப்பட்டிருந்த டாங்கிகள், பின் உதைப்பற்ற பீரங்கிகள் கொக்குத்தொடுவாய் முகாமிற்கு கொண்டுவந்து இறக்கப்பட்டதுடன் ஏராளமான படையினரும் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். இராணுவத்தினரின் இந் நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருந்த வேவுப் புலிகளின் தகவல்கள் மணலாற்றின் சிறப்புத் தளபதியை சென்றடைந்தது. புலிகளின் தாக்குதல் அணிகளும் எதிர்த் தாக்குதலுக்கு தயாரானார்கள். மின்னல் நடவடிக்கையின் மூலம் படை நகர்வுகள் எவ்வாறு இருக்கும் என்பதை அவதானித்து வைத்திருந்த புலிகளுக்கு அடுத்த தாக்குதலை எதிர்கொள்வது சுலபமானகாரியமாவே தென்பட்டது. ஆனால் வழமைபோல் படையினரை காட்டினுள் உள்நுழைய விட்டு அதன் பின்னர் தாக்குதலை மேற்கொள்ளாமல், இம்முறை படையினரின் முகாம் வாசலில் நின்றே அவர்களை அடித்து விரட்டவேண்டும் என மணலாற்றின் சிறப்புத் தளபதியும், தளபதிகளும் திட்டம் வகுத்தனர்.

> **யாழ். குடா மீது எதிர்காலத்தில் தாம் மேற்கொள்ளப் போகும் தாக்குதலுக்கு புலிகளின் அணிகள் மணலாற்றில் இருந்தோ, அல்லது கிழக்கின் ஏனைய பகுதிகளில் இருந்தோ கடல் வழியான போக்குவரத்தின் மூலம் விரைவாக வந்துசேர்வதை தடுப்பதற்கும் இப்பகுதியை கைப்பற்றியாக வேண்டும்.**

இதேவேளை, சிங்களம் தனது தாக்குதலை ஆரம்பிக்கும் முன்னர் மண்கிண்டிமலையில் முகாமிட்டிருந்த ஆக்கிரமிப்பு படையின் சில முன்னணி காவலரண்களை தகர்ப்பதற்கான திட்டம் ஒன்று புலிகளால் வகுக்கப்பட்டு, நீண்ட நாட்களாக இம்முகாம் வேவுப்புலிகளால் வேவு பார்க்கப்பட்டிருந்தது. இம்முகாம் மீது வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயமே 2ம் லெப். சிறீதரன் (நிக்கலஸ் சூசைப்பிள்ளை— இருதயபுரம் மூதூர்) என்ற போராளி 29.08.91 அன்று வீரச்சாவை தழுவிக்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே மணலாற்றில் படையினர் மேற்கொள்ளப்போகும் அடுத்த தாக்குதலுக்கு முன்னர் இம் முகாமின் காவலரண்கள் சிலவற்றை தாக்கியளிக்க வேண்டும் என்று புலிகளால் தீர்மானிக்கப்பட்டது. 05.03.92 அன்று மேஜர் சதாத் அல்லது வீமன் (அமிர்தநாதன் அருளப்பு- அடம்பன் மன்னர்) என்ற போராளியின் தலைமையில் அணி ஒன்று தாக்குதலுக்கு சென்றது. குறுகிய நேரத்தில் திட்டமிடப்பட்ட காலரண்களை தகர்த்தெறிந்த போராளிகள் ஏராளமான ஆயுதங்களையும் கைப்பற்றிக் கொண்



மேஜர் சதாத் – வீமன்

டனர். இத் தாக்குதலில் சிலாவத்துறை இராணுவமுகாம் தகர்ப்பு, கோட்டை முற்றுகை, மாங்குளம் முகாம் அழிப்பு, வன்னி விக்ரம-1, ஆனையிறவுத் தளம் மீதான ஆ.க.வெ தாக்குதல் எனப் பெரும் களங்கள் பலவற்றை கண்ட மேஜர் சதாத் வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

மண்கிண்டிமலை தாக்குதலை வெற்றியுடன் முடித்தகையுடன், மணலாற்றில் தமது அடுத்த தாக்குதலை மேற்கொள்வதற்காக படையினர் முன்னேறக்கூடிய பகுதிகள் எவையென ஆராய்ந்த தளபதிகள், அந்தந்த பகுதிகளில் எல்லாம் புலிகளின் அணிகளை நிறுத்தி வைத்தனர். சில முக்கியமான பகுதிகளில் புலிகளின் அதிரடி தாக்குதல் அணியினரும் (கொமோண்டோ படை) படைமுகாமிற்கு ஐந்நூறு யார் தூரத்தில் வியூகம் அமைத்து நிறுத்தப்பட்டனர். சிங்களப் படையினரின் முன்னேற்ற நடவடிக்கை எப்போதும் ஆரம்பிக்கலாம் என்ற நிலையில், போராளிகள் படை முகாமிற்கு முன்னால் வளர்ந்திருந்த புற்களையே காப்பரணாக்கி உருமறைப்பு செய்தபடி நின்று கொண்டிருந்தனர். நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. மூன்று நாட்கள் காத்திருந்தும் படையினர் முன்னேறுவதற்கான எந்தவித அசுமாத்தங்களும் தெரியவில்லை. இதே நேரம் தொடர்ந்து அப்பகுதியில் நின்று கொண்டிருந்த போராளிகளுக்கு தேவையான உணவு, தண்ணீர் கிடைப்பதே பெரும் கஷ்டமாகியது. அப்பகுதிக்கு உணவு, தண்ணீர் எடுத்துச் செல்வது என்பது ஒரு தாக்குதலுக்கு செல்லும் நடவடிக்கை போன்றது மட்டுமல்ல, அப்பகுதிகளில் போராளிகள் நடமாடுவதாக படையினர் அறிந்துவிட்டால் தமது தாக்குதல் திட்டத்தையே மாற்றியமைத்துவிடுவார்கள். மிகவும் ஆபத்தான பகுதியில் நின்றுகொண்டிருந்த போராளிகள் பசியை மறந்து எதிரியின் வரவை எதிர்பார்த்து உறுதியுடன் தமது நிலைகளில் நின்று கொண்டிருந்தனர்.

மூன்றாம் நாள் மாலை (16.03.92) சிறீலங்கா வான்படை



களின் குண்டுவீச்சு விமானங்கள் அப்பகுதிகளை சுற்றி வட்டமிடத் தொடங்கியது. தாக்குதல் ஆரம்பமாகப் போகின்றதென போராளிகள் எண்ணியிருக்க, வந்த விமான்ங்களோ குண்டுகள் எதனையும் வீசாமல் வட்டமடித்து விட்டு சென்றுவிட்டன. இதனால் பண்டயினர் இப்போதைக்கு தாக்குதலை ஆரம்பிக்கப் போவதில்லை என போராளிகள் கருதினர். எனினும் சிறப்புத் தளபதியின் பதிலுக்காக காத்திருந்தனர். சிறப்புத்தளபதி இன்னும் ஓரிரு நாட்கள் பார்த்துவிட்டு திட்டத்தை மாற்றியமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதாக இருந்துள்ளார். ஆனால் மறுநாள் காலையில் (17.03.92) அவர்கள் காத்திருந்தது வீண் போகாமல் இராணுவ அணிகள் மூன்று முனைகளினூடாக முன்னேறி நகரத்தொடங்கியது. டாங்கிகள், பின் உதைப்பற்ற ஆர்சிஎல் பீரங்கி பொருத்தப்பட்ட வாகனம், ஐம்பது கலிபர் துப்பாக்கி பொருத்தப்பட்ட இராணுவ வாகனங்கள் என்பன தாக்குதல் நடாத்தியபடி முன்னால் நகர, 2500ற்கும் மேற்பட்ட படையினர் மூன்று முனைகளினூடாகவும் நகரத்தொடங்கினர். புற்களையே காப்பரணாக்கி நிலையெடுத்திருந்த போராளிகள் தங்கள் தளபதிகளிடமிருந்து வரவேண்டிய தாக்குதல் உத்தரவிற்காக காத்திருந்தனர். ஆனால் தாக்குதலுக்கான உத்தரவு கிடைப்பதற்கிடையில் போராளிகள் இருந்த இடத்தையும் கடந்து இராணுவ அணிகள் முன்னேறி நகர்ந்து கொண்டிருந்தன.

(தொடரும்)

எஸ்.தீரன்




# குழந்தை பிறப்பும் கால இடைவெளியும்

பொதுவாக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும்போது அவர்களுக்கிடையே ஒரு ஒழுங்கான கால இடைவெளி இருக்க வேண்டும். சாதாரணமாக எம் குடும்பங்களிடையே குறைந்தது மூன்று குழந்தைகளாவது இருக்கும். ஆனால் அவர்கள் யாவரும் சிலவேளைகளில் ஒவ்வொரு வருட இடைவெளியிலோ அல்லது ஒருவருக்கொருவர் அதிக வயது இடைவெளியுடனேதான் காணப்படுகிறார்கள். இதற்குக் காரணம் இங்குள்ள குடும்பப் பெண்களிற்கு போதிய உறவினர்களின் உதவி கிடைப்பதில்லை. இதனால் பல பெண்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடங்களிலும் கூட குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். காரணம் ஒரு குழந்தையை வளர்க்கச் செலவிடும் நேரத்திலேயே மற்றைய குழந்தைகளையும் ஒன்றாக இணைத்து வளர்த்து விடலாம் என எண்ணிக்கொள்ளுவது தான்.

இதேபோல் சிலர் தாம் தொழில் புரியும் இடங்களில் பெறப்படும் சில சலுகைகளிற்காக மற்றும் குடும்பத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளையும் கருத்திற்கொண்டு பல ஆண்டுகள் கழித்து குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவும் முனைகிறார்கள். இதுவும் உண்மையில் தவறான கணிப்பீடுதான்.



இவர்களின் குழந்தை பெற்றெடுத்தல் பற்றியதான திட்டமிடல் என்பது அவர்களை வளர்க்கக் கூடியதான நேரச்சூழல் தமக்கு எப்போது சாதாகமாக அமையும் என்பதைச் சார்ந்தே இருக்கிறது.

ஆனால் உண்மையில் இது மிகத்தவறான ஒரு முடிவு. ஏனெனில் எம் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளல் என்பது பற்றியதான திட்டமிடல் என்பது தனியே எம் வசதிகளை மட்டும் கருத்திற்கொண்டதாக அல்லாமல் அவர்களின் உடல் மூளை வளர்ச்சி போன்றவற்றை மையமாகக்கொண்ட ஒரு ஆரோக்கியமான திட்டமிடலாகவும் இருத்தல் வேண்டும். ஏனெனில் எம்

ஆனால் சிலருக்கு உடலியல் ரீதியாகவும் இவ்வாறான அதிகரித்த நீண்ட இடைவெளிக்குப் பிறகு குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும்படியான சூழ்நிலைகள் அமைந்துவிடுவதுண்டு. இதற்கு குறிப்பிட்டவர்கள் காரணமாக இருக்க முடியாது.

எனவே இந்தக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள திட்டமிடும்போது ஒவ்வொரு குழந்தைகளிற்குமிடையேயும் குறைந்தது 2 1/2 வருட இடைவெளி வேண்டும். அதாவது முதல் குழந்தைக்கு 19 முதல் 23 மாதங்களாக இருக்கும்போது அடுத்த குழந்தை கருத்தரிப்பது நல்லது. அதைவிட்டு முதல் குழந்தை பிறந்த ஓர் சில மாதங்களிலேயே மீண்டும் கர்ப்பம் தரித்தால் அது தாய் சேய் இருவருக்கும் நல்லதல்ல.

இவ்வாறான கர்ப்பம், சராசரி 30—40 வீதமானவர்களிற்கு முழுவளர்ச்சியடையாத குழந்தையாக பெற்றுக்கொள்ள காரணமாக இருக்கும். அதேபோல் 10 வருடங்களுக்கப்பால் அல்லது, இன்னும் பல ஆண்டுகள் தள்ளி குழந்தை பெற்றால் அக் குழந்தையும் 60—80 வீதமான அளவில் எடைகுறைந்து பூரண வளர்ச்சியடையாமலே இருக்கும். சில வேளையில் 50 வீதம் முற்றாக வளர்ச்சியடையாமல் கூட குழந்தை இறந்துவிட நேரிடும். எனவே இவ்விடயத்தில் பெண்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

# வெற்றியைத் தேடும் அபர்ணா

இந்தியாவில் பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகளில் கடந்த 2 வருடங்களாக தேசிய அளவில் முதலிடத்தில் இருக்கும் வீராங்கனை அபர்ணா பொபட். இந்த அபர்ணா தற்போது இந்தியாவில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும்கூட போட்டிகளில் பங்குபற்றத் தொடங்கியுள்ளார். இவ்வருடம் சர்வதேச பூப்பந்தாட்ட ஒருங்கமைப்புக் குழு தம்மிடையேயுள்ள அனைத்துப் பூப்பந்தாட்ட வீராங்கனைகளையும் தரப்படுத்தி பட்டியலிட்டது. இதில் இந்திய வீராங்கனையான அபர்ணா முதல் 20 வீராங்கனைகளிற்குள்ளும் தெரிவாகியுள்ளார்.

இதுகுறித்து இந்திய பூப்பந்தாட்ட போட்டி அமைப்பின் குழுத்தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் அபர்ணாவை தாம் இன்னும் முன்னிலைக்குக் கொண்டு வர மிகுந்த கவனம் எடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். ஏனெனில் சிறந்த முயற்சி எடுத்தால் இன்று 20 பேருக்குள் இருக்கும் அபர்ணா விரைவில் முதல் 12 வீராங்கனைகளும் உள்ள இடத்திற்குள் தன்னைத் தக்க வைத்துக்கொள்வார் என்று கூறியுள்ளார்.



இவ்வாறு முதல் 12 வீராங்கனைகளுக்குள்ளும் அபர்ணா வந்துவிட்டார் எனில் எதிர்வரும் 2000 ஆண்டில் நடைபெறப் போகும் முதல் '12 வீராங்கனைகளுக்குமான கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் விளையாட வாய்ப்பு அமையுமெனத் தெரிவித்துள்ளார்.

எனவே அபர்ணா சர்வதேச அளவில் முன்னணியில் திகழுமிடத்து இந்தியப் புகழ் சர்வதேச விளையாட்டரங்கில் ஓங்கி ஒலிக்கும் எனவும் கூறுகிறார்.

# தென்னாபிரிக்காவில் அதிகரிக்கும் பாலியல் வன்முறைகள்

உலகிலேயே மிக அதிகளவில் பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படும் நாடு தென்னாபிரிக்கா. இந் நாட்டில் 2 ஆண்டுகளுக்கு முன்பு சராசரி 83 நொடிகளுக்கு ஒரு பெண்ணும், குழந்தையும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளனர். ஆனால் தற்போது 26 நொடிக்கு ஒருமுறை ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுவருகிறார். அதாவது இங்கே பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படும் நிகழ்வுகள் மிகக் குறுகிய காலத்தில் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. இதற்குக் காரணம் தென்னாபிரிக்காவில் உள்ள சில மூட நம்பிக்கைகள்தான். ஏனெனில் அங்கு கன்னிப் பெண்களுடன் உடலுறவுகொண்டால் நோய்கள் வராதென்றும், எயிட்ஸ் நோய் குணமாகுமென்றும் பெரிதும் நம்புகின்றனர்.

இதனால்தான் அங்கு பல ஆயிரக்கணக்கில் பெண்கள் வன்முறைக்குள்ளாக்கப்படுகிறார்கள். இது மட்டுமல்ல 10 வயதுக்குக் குறைந்த பெண் குழந்தைகளும் அதிகளவில் இந்த பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் வருத்தத்துடன் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றே.

# மாணவிகளின் மனமாற்றம்

சமீப காலங்களில் அமெரிக்க மாணவிகள் மத்தியில் கன்னித் தாய்மார்கள் அதிகரித்து வருவதாக நாம் படித்திருக்கிறோம். கிட்டத்தட்ட அங்குள்ள சமூகத்தையே சீரிழிக்கக்கூடிய அளவுக்கு இவர்களின் தொகை கூடி வருவதாக அங்குள்ள பத்திரிகைகள் கணக்கெடுப்பில் தெரிவித்திருந்தன. ஆனால் சமீபகாலமாக எயிட்ஸ் நோய்பற்றித் தொடுத்த விரிவான விளக்கங்களினாலோ அன்றி வேறு காரணத்தினாலோ தெரியவில்லை தற்போது அநேகமான பாடசாலைகளில் தாம் இன்னும் கன்னி கழியவில்லை என்ற முத்திரையொன்றை (ஸ்ரிக்கர்) ஒன்றை உடைகளில் அணிந்தபடி திரிகிறார்கள் மாணவிகள். அதுமட்டுமின்றி கல்லூரிகளில் கன்னியர் கழகம் என்றும் பெயரில் இவ்வாறான பலர் சேர்ந்து சிறு அமைப்புகளையும் உருவாக்கி வருகிறார்கள்.

இந்த அமைப்பில் உள்ளவர்கள் அதில் இணையும்போது கடவுளுடன் சில ஒப்பந்தங்களைச் செய்கிறார்கள். அதாவது நான் திருமணமாகும் வரை கன்னி கழியாதவர்களாகவே சுத்தமாக இருப்போம் என்று கூறிக்கொள்கிறார்கள்.

ஆகமொத்தம் இந் நிலை நீடித்தால் ஆரோக்கியமான ஒரு இளைய சமுதாயத்தை அமெரிக்கா பெற்றுக்கொள்ளும் என்பது உண்மையே.

# பெண்களை எளிதில் நாடும் குடலிறக்கம்

சாதாரணமாக குடலிறக்கம் என்னும் நோய் விரைவில் ஆண்களைவிடப் பெண்களிற்கேதான் அதிகளவில் ஏற்படுகிறதென்கிறது மருத்துவ உலகம். ஏனெனில் இவர்கள்தான் நாளிற்கு ஆண்களைவிட கூடியளவிலான வேலைப் பளுவைச் சுமக்கிறார்கள் என்றும் இவர்களின் மத்தியில்தான் பிரசவம் சம்பந்தமான பிரச்சினைகளும் தோன்றுவதால் இதன் தாக்கம் அதிகமாக இருக்கிறதென்கிறார்கள் மருத்துவர்கள். இது மட்டுமல்ல இந்நோய் பெண்களிற்கு விரைவில் ஏற்படுவதற்குக் காரணமாக பின்வரும் விடயங்களும் அமைவதாக அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அதாவது அடிவயிற்றுத் தசைப் பகுதிகள் ஆண்களைவிட பெண்களுக்கு நலிந்ததாக உள்ளமை, தொடர்ந்து கருவடைவதால் வயிற்றுப்பகுதித் தசைகள் அடிக்கடி விரிவடைந்து அழற்சி அடைதல், பெண்களிற்கு விரைவில் உடல் பெருக்கத் தொடங்குதல், மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சை அல்லது சிசேரியன் காரணமாகவும் தசை நார்களை செயற்கையாக வலுவிழக்கச் செய்யப்படுதல் அத்தோடு பெண்கள் பெரியளவில் உடற்பயிற்சிகளைச் செய்யாமையே காரணமென்கிறார்கள் இம் மருத்துவர்கள்.

**அம்பாள் வாகன சேவை**
**AMBAL TRANSPORT**

பொருட்களை ஏற்றி இறக்கவும், மங்கள வைபவங்கள், ஸ்தல யாத்திரைகள், சுற்றுலாக்கள், ஐரோப்பிய நாடுகளுக்கான 9 இருக்கைகள் கொண்ட வாகனசேவைகளுக்கு



**ஜெயம்:**
26, Rue Perdonnet, 75010
Paris.
Mo: La Chapelle
Tel: 06 03 84 02 29 / 06 10 38 44 92 / 06 84 57 21 77

**நித்தி வாகன சேவை**

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் ஊர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214
0613342518
0607348051 / 0148385825

Pub Fr 23032

**ஈழமுரசு**

Eelamurasu Weekly

ஐரோப்பிய வணிக சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின்

- ★ பிறந்த நாள் வாழ்த்துக்கள்
- ★ திருமண அழைப்பிதழ்கள்
- ★ நிகழ்ச்சி அரங்கேற்றங்கள்
- ★ அறிவித்தல்கள் - நினைவஞ்சலிகள்

என்பவற்றை வரலாற்றுப் பதிவாக்க நாங்கள் தயாராக உள்ளோம்

நீங்கள் ஈழமுரசிற்கு சந்தா செலுத்துவதன் மூலம் 20% இலாபம் அடைகின்றீர்கள் என்பதனை அறிவீர்களா?

**ரவி வாகன சேவை**

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது



தொலைபேசி:
0148765190
0607622689

Pub Fr 23034

உத்தியோகபூர்வ
**மொழிபெயர்பு சேவை**

கிருஷ்ணபிள்ளை மாயவன்
15 ஆண்டுகளாக அரச அங்கிகாரம் பெற்று சட்ட ஆலோசனைகள் மொழிபெயர்ப்புகள் சேவையாற்றிவருகிறோம்

39, bd de la Chapelle
75010 Paris
M°: LA CHAPELLE OU GARE DU NORD
TEL/FAX: 0140345341

எம்.ஜி.ஆர் வீடியோ & ரெக்ரைல்ஸ் நிறுவனத்தின் உள்ளே

Pub Fr 23035

**P.S வாகன சேவை**

உங்கள் தேவைகளுக்கு
24 மணி நேர சேவை
தொடர்புகட்கு:
ஜேர்மன் - T.P: 01717489297
பிரான்ஸ் - T.P: 0164721143
கொர்னலியூஸ் (Cornelius)
குமார்



Pub Fr 23037

**தென்றல் இல்லம்**

உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வதுடன், சுவை மணம் குன்றாத உடன் கோப்பித்தூளும் பெற்றுக்கொள்ள

60, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle
Tel: 01 42 09 36 09

Pub Gra.

**Lune**

LUNE
ELECTRONIQUE INFORMATIQUE



3590F

- Processeur CYRIX 300
- Carte Mère TX PRO II
- Disque Dur 3,2 Go Ultra DMA
- SDRAM 32 Mo Pc 100
- Carte Video 4 Mo AGP
- Carte Son 16 Bits PCI
- Lecteur CD ROM 40X
- Lecteur Disquette 3,5"
- Ecran 15" MPR II
- HP PMPO 160 W
- Clavier 105 Touches PS/2
- Souris PS/2
- Botier Alim Moyan Tour ATX

GARANTIE 2 ANS

**உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்.**

# 'VICTOR SARL'

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

**VICTOR SARL**
43, Rue de la Reunion, 75020 Paris
Tel: 01 44 93 90 30

**சிவாசினி வாகன சேவை**

*Chivashini Transport*

**வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை**

தொடர்புகட்கு:சிவாஜினி வீடியோ



06 14 61 69 84
01 42 09 23 59
01 49 37 26 03
01 42 05 44 04

Pub Fr 23036




*Réseau*

**WWA**

உலகம் உங்கள் கைகளில்




## மீண்டும் அதிகரித்த நிமிடங்களுடன் உங்கள் சேவையில்!

**Maghrab 80Mn**

**Afrique 50Mn**

**Asie 50Mn**

Surcharge : 3F à chaque connexion.

KING Telecom
92, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)
Tél.: 01 44 62 93 96
Fax: 01 44 62 94 96

WWA
86, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)

KING Telecom
33, Place de Général de Gaulle
60100 Creil.
(Place de la Gare)
Tél:03 44 55 41 59
Fax: 03 44 55 42 51

வர்த்தகர்களுக்கு விசேட கழிவுண்டு

அனைத்துத் தொடர்புகளுக்கும்: 01 43 15 17 17 - விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18

Pub.

# கலைந்த சொற்கள் எண்: 37

கீழ் உள்ளவற்றில் 128 சொற்கள் கலைந்திருக்கின்றது. சொற்கள் நேர்கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச் சொற்களை கண்டு பிடித்து கோடிடவும். இச் சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | இ | மை | ம் | ல் | ம் | ம் | ம் | ம் | ன | த | வி | ரு | ப் | ப | ம் |
| க | கு | ல் | ற | ர | ய | ய | க | ம | ம் | த் | ரி | பு | ம் | ல | வ |
| வா | இ | ற | நி | தி | த | தா | சா | ரு | த | ம் | ண | ர | கா | கா | பா |
| ன் | வ | த | த் | ரு | ப | ர | ள | க | ந் | ர | க | ற் | கா | ல | ம் |
| இ | ய | ப | இ | தி | ப | பி | ம் | க | ப | ச | பி | ரி | ய | ம் | பு |
| ள் | வா | டை | உ | ரை | ப | ம் | ர | ப | ம் | ப | ம் | க | ச | ப் | பு |
| உ | நி | ப் | இ | ட | ம் | ச | ர | ம | ச | ய | ர | ப் | டி | ப் | டை |
| லை | க் | பு | பா | ம் | பு | வ | ச | ம | த | ண | த | பி | டை | ப் | ப் |
| மா | பி | கி | ண | நி | ப் | ர | ர் | இ | ம் | ம் | ம் | உ | டு | ம் | பு |
| ணி | று | ர | ர | ர் | ச | ப் | வ | ப | ம | வ | ப | ரு | வ | ம் | இ |
| டி | இ | த | மா | ம் | ப | க் | க | ம் | ரு | தே | ஸ் | ட் | ரு | மை | ந |
| அ | க | ல | ல் | ண | ல | த | லா | உ | ச | நி | பு | டு | ட | க | ர |
| து | த் | ப | ம் | ச | ம் | ரா | சா | ம் | க | ய | னி | ப் | ம் | ம் | க |
| ய | த் | பு | ப் | ரி | தி | ம் | லை | மா | ண | ம | த | பு | ர | ச | ம் |
| ர | ர | ப | ப | த் | ட | ன | யோ | கா | ச | ன | ம் | ர | ரு | பு | ல் |
| ம் | ப | ப் | ரு | தி | வா | பு | ர | த | ம் | ம் | ட | ட் | ப் | வ | ம் |
| நி | து | ப | ப் | ர | இ | லி | ம் | யோ | சா | ந | ம | டு | க | ட | ம் |
| ன் | ல | க் | பு | ம் | ய | பு | ப | ப | ர | ம் | து | த | ரு | ப | ப |
| ர | வ | ம் | க | ப | ரா | ப் | ன் | த் | ம் | ழை | வ | வ | ம் | பு | ப் |
| தி | தி | ல | க | ம் | த | ரி | து | தி | தி | க | வா | த | ச | ப | ரு |
| த் | உ | ம | க | க | ட | வ | தி | ய | ச | ர | க | லை | ஞ் | ம் | தி |
| பு | ப | க | ப் | ப | ம் | க | பு | ம் | ர | வ | ம் | சு | ம | ட | ர் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இதயம் | உதயம் | கம்பம் | பயணம் | பம்பரம் | சம்பந்தம் | சம்பிரதாயம் | நிருபர் | சமர்ப்பணம் | பிரமாணம் | சாராம்சம் |
| பிற்காலம் | பருத்தவன் | விருப்பம் | யோகாசனம் | நிருபம் | புருவம் | பசப்பு | கருமம் | தம்புரா | தம்பதி | கசப்பு |
| பரம்பரை | பதறல் | இருதயம் | தம்பட்டம் | சாலையோரம் | மணமாலை | பக்கம் | சரசம் | பர்வம் | காரணம் | பருவம் |
| பலகாலம் | சப்தம் | புரதம் | சம்மதம் | குறத்தி | கதம்பம் | பத்தியம் | பகவான் | வலம்புரி | கற்காலம் | பிரியம் |
| கடிப்பு | பிடிப்பு | உடும்பு | உடைப்பு | புடைப்பு | உருவம் | இடையன் | இடைநிலை | அகலல் | உடைவாள் | படைப்பு |
| நிபுணர் | இரணம் | உக்கிரம் | மணிமாலை | மாறுதல் | நரகம் | சரித்திரம் | புஸ்பம் | புனிதம் | சருமம் | சம்சாரம் |
| துடுப்பு | மஞ்சம் | வருடம் | திருப்பம் | துவசம் | தகவல் | மலைவாழை | திருப்பம் | பத்திரம் | துன்பம் | பருத்தி |
| துரிதம் | வரிப்புலி | வானலை | திரிப்பு | பருப்பு | வரம்பு | துயரம் | உலகம் | துக்கம் | கமலம் | திலகம் |
| பகலவன் | கப்பம் | புத்திரன் | உவமை | கம்பி | தரம் | திறமை | திரல் | தாகம் | நகம் | கசம் |
| இடம் | பாம்பு | மடம் | கமம் | பஞ்சு | வம்பு | தவம் | புயம் | புதிது | திடம் | தடம் |
| பத்து | புரம் | கடம் | பாவம் | வித்தகம்* | சபலம்* | சமரசம்* | கசாயம்* | கரணம்* | நியமனம்* | பிரதமம்* |
| உபதேசம் | சம்பத்து* | விதனம்* | தாளகம்* | புரசம்* | சுமடர்* | நரத்துவம்* | நிலம் | வரம் | உருட்டுப்புரட்டு | |
| சர்வகலாசாலை | | | | | | | | | | |

பெயர்: ...............................................................

முகவரி: ...............................................................

...............................................................

...............................................................

பிறந்த நாள்: ...............................................................

சந்தாதாரராயின் சந்தா எண்: ...............................................................


கலைந்த சொற்கள் எண்-37 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: **27.08.1999**

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:</u>

கலைந்த சொற்கள்
**Eelamurasu**
**22, Rue Perdonnet, 75010 Paris, France**

## கலைந்த சொற்கள் எண்–36 விடைகள்



ஈழமுரசின் சென்ற எண் கலைந்தசொற்கள் பகுதிக்கு 200 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) அ. ஸ்ரீதாரணி
93350 Le Bourget,
France.

2) செல்வி டயானா அருள்நேதன்
64000 Pau,
France.

3) M. அந்தோனிப்பிள்ளை
East-Ham,
London E6-2Dx.

4) சந்திரவதனா செல்வகுமாரன்
74523 Schwäbisch Hall,
Germany.

5) சோமாஸ்கந்தன் சசிதரன்
16121 Genova,
Italy.

இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-37 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 38ம், 02 - 08 செப்டெம்பர் 99 ஈழமுரசில் வெளிவரும்.

* இவ்வடையாளம் இடப்பட்ட சொற்களுக்கான விளக்கம். இச்சொற்கள் தமிழ் மொழியகராதியிலிருந்தும், விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் நடைமுறைத்தமிழ் வழிகாட்டியிலிருந்தும் எடுக்கப்பட்டவை

| | | | |
|---|---|---|---|
| வித்தகம் | -சிறப்புத்திறன், புலமை | பிரதமம் | - முதன்மை |
| சபலம் | -மன அலைவு, வேண்டாஆசை | சம்பத்து | - உடமை |
| சமரசம் | - ஒருமிப்பு, பொதுநோக்கு | விதனம் | - மனத்துயர் |
| கசாயம் | - குடிநீர் | தாளகம் | - அரிதரம் |
| கரணம் | - ஏமாற்று | புரசம் | - கைச்சங்கு, அக்கினித் தேவன் |
| நியமனம் | - அமர்த்தல் | சுமடர் | - அறிவிலார் |
| | | நரத்துவம் | - மனிதத் தன்மை |

தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா


# ஆசிரியர்கள் தேவை

**பின்வரும் பாடங்களுக்கு ஆசிரியர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

- கம்பியூட்டர் பயிற்சி நெறி (Cours d' informatique)
- கணிதம், பௌதீகம், இரசாயனம் (Collège, Lycée)
- பரதநாட்டியம், வயலின்,
- வாய்ப்பாட்டு (கர்நாடக சங்கீதம்)
- ஓவியம்-வரைதல் (Cours d'art de dessine)

தகமையும்–அனுபவமும் உள்ள, தமிழ்–பிரெஞ்சு கற்றறிந்த ஆசிரியர்கள் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

**Centre d'Insertion et d'Information des Tamouls**

**தமிழர் வித்தியாலயம்**

**75, Rue Philippe de Girard, 75018 Paris.**

*ச.சச்சிதானந்தம் மாஸ்ரர்*

# பலதும் பத்தும்

## செவ்வாய் கிரக பயணத்திற்கு ஆள் தேவை!

அவரைப் பார்த்தால் ஒரு நிறுவனத்தில் நிர்வாகி போலத்தான் தோற்றமளித்தார். நடுத்தர வயதுடையவர் பிரான்சின் மத்திய பகுதியொன்றில் ஒரு தபாலகத்தில் சில அலுவல்கள் செய்ய வரிசையில் அவர் நின்றிருந்தார். அந்த தபாலகத்தில் கடமையாற்றும் ஒரு அதிகாரியை அணுகிய அவர் தனது அலுவல்களை முடித்துக்கொண்டு மெதுவாக அந்த அதிகாரியிடம் கதை கொடுக்கத் தொடங்கினார். செவ்வாய் கிரகம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என அவரிடம் கேட்டபோது, அவரும் மிக ஆர்வமானார். அத்துடன் செவ்வாய் கிரக பயணம்பற்றிய விபரங்களையும் கேட்கத் தொடங்கினார்.

அந்த நிர்வாகிபோலத் தோற்றமளித்தவர், தான் இங்கு செவ்வாய் கிரகத்திற்கு எதிர்காலத்தில் ஆட்களை அனுப்பும் திட்டங்களைத் தயார் செய்வதாயும், அதற்காக ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டு மிகப் பாரிய அளவில் வேலைகளை மேற்கொண்டு வருவதாயும் கூறினார். இந்தப் பேச்சில் ஆர்வம் ஏற்பட்ட காசாளர், தானும் வானியல் பற்றி ஆராய ஆவலாய் இருப்பதாக கூறினார். இதனையடுத்து அந்த நிர்வாகியும் தபால் காசாளரை அழைத்துக்கொண்டு பாரிசில் உள்ள டிஸ்னிலான்ட்டிற்குச் சென்று அங்கு 'ஸ்பேஸ்மௌன்டன்' எனும் வானியல் வேடிக்கையொன்றைக் காட்டி, இப்படித்தான் செவ்வாய் கிரகப்பயணம் இருக்கும் எனக் காட்டினாராம். பின்னர் அடுத்தவாரம் இருவரும் போர்த்துக்கல் நாட்டிற்குச் சென்றுள்ளனர். அங்கு ஒரு மைதானம் போன்ற பகுதியொன்றில் வெள்ளை உடையுடன் தியானத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒரு குழுவினரைக் காட்டி இவர்கள் எனது நிறுவனத்தால் பயணத்துக்காக தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை குழப்பவேண்டாம் எனக் கூறியுள்ளார். உண்மையில் அவர்கள் மத்பிரிவொன்றின் பிரார்த்தனைக்குழுவினர்.

இது நடந்துமுடிந்து இரண்டு வாரங்களில் அந்த காசாளரிடம் வந்து செவ்வாய் கிரகப் பயணத்திற்கான ஏற்பாடுகளில் கொஞ்சம் காசுத்தட்டுப்பாடு வந்துவிட்டது. ஒரு பத்து லட்சம் பிராங்குகள் தந்தால் நன்றாக இருக்கும் எனக் கூறியுள்ளார். அந்தக் காசாளரும் அவ்வளவு தூரத்திற்கு தன்னிடம் பணமில்லை என்றவர் ஒரு சிறுதொகை கொடுத்திருக்கின்றார். ஆனால் சில தினங்களில் வேறொரு நபர் வந்து தாம்கேட்ட தொகையை தராதுவிட்டால் பெரும் பிரச்சினைவரும் என்று மிரட்டிச் சென்றுள்ளார்.

இப்போது காசாளர் உண்மையிலேயே பயந்துதான்போனார். மெதுவாக பொலிசில் புகார் செய்ய, பொலிசாரும் அந்த நிர்வாகி இளைஞரை மடக்கிப்பிடித்ததில், 'செவ்வாய் கிரகப் பயணமும் நிறுவனமும்' வெறும் புரட்டு என தெரியவந்தது.

## உரிமையா உபத்திரவமா?




இந்த உரிமைப் போராட்டங்களுக்குத்தான் அளவேயில்லையா? பிரித்தானிய பொலிசாருக்கு அண்மையில் ஏற்பட்ட பெருந்தலையிடி இது. நிர்வாண அமைப்பினர் அண்மையில் தங்களுக்கு வீதிகளில் நிர்வாணமாக நடக்க உரிமை வேண்டும் எனக் கூறி போராட்டத்தை ஆரம்பித்தனர். அதிலொருவர் இங்கிலாந்தில் ஒரு சந்தியில் நடுநாயகமாக நின்ற விளக்கு கம்பத்தில் ஏறிவிட்டார். அவரை இறக்க பொலிசார் பெரும்பாடு பட்டனர். ஆனால் நிச்சயம் உரிமைக்காக தண்டனையும்

## 'லூர்ட்ஸ்' - ஒகஸ்ட் 15ம் திகதி

5 மில்லியன் பக்தர்கள் வருடாந்தம் பயணம் செய்யும் இந்தப் பிராந்திய உண்மையிலேயே பிரான்சின் மிக முக்கிய ஒரு சுற்றுலாப்பகுதி என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

'லூர்ட்ஸ்' இது பிரான்சின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள ஒரு அதிசயம் நிகழ்ந்த தேவாலய நகரமாகும். உலகெங்கிலுமிருந்தும் இங்கு பக்தர்கள் வந்து குவிவார்கள். பிரான்சில் பாரிசுக்கு அடுத்ததாக தங்கு விடுதிகள் (Hotels) அதிகமாக உள்ள நகர் இதுவாகும். ஒகஸ்ட் மாதம் 15-ம் திகதி இத் தேவாலயத்தின் விசேட தினமானாலும் வருடத்தில் குளிர்காலம் தவிர்ந்த ஏனைய மாதங்கள் சனக்கூட்டத்தால் நிரம்பி வழியும். நகரின் தேவாலயப்பகுதி 42,000 சதுர மீற்றர் பகுதியில், 48 தொகுதி கட்டடங்களைக் கொண்டு அமைந்துள்ளது. இங்கு 350 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். (நகர சபைக்கு அடுத்த நிலை) மாதாந்தம் ஒரு ஏடு. ஒரு வானொலி, 100 மில்லியன் வரவுசெலவு என மிகப்பெரும் நிர்வாகமே அங்கு நடக்கின்றது.

1858-ம் ஆண்டு பேர்னாடெட் எனும் சிறு பெண்ணுக்கு ஏற்பட்ட அதிசயத்தின் தொடர்ச்சி இன்னும் ஏற்பட்டு வருவதாக இங்கு வரும் 90 விகிதமான மக்கள் நம்புகிறார்கள். இங்கு வருபவர்கள் தேவாலயத்தில் குகைப்பகுதிக்கூடாக சொரியும் நீரைப் பருகினால் பலன் கிடைக்கும் என அன்றுதொட்டு நம்புவதால் அந்த நீர் வழி மாத்திரம் 35 ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அதிசய நீரைப் பெற்றுக்கொள்ள பெருமளவிலான மக்கள் வரிசைகளில் நிற்கிறார்கள். அத்துடன் நேர்த்திகளுக்காக இக்குகைப்பகுதியில்



மெழுகுவர்த்திகள் எரிக்கப்படுகின்றன. வருடாந்தம் 800 தொன் மெழுகு இங்கு எரிக்கப்படுகிறது. இங்குள்ள தேவாலயத்தில் 35,000 பக்தர்கள் ஒரே நேரத்தில் பிரார்த்தனைகளில் ஈடுபடமுடியும். திருவிழாக்காலத்தில் நாளொன்றிற்கு 52 பூசைகள் வரை இடம்பெறும் எனச் சொல்லப்படுகின்றது.

## டார்சன் 'லோங்ஸ்' போடவேண்டுமாம்


டார்சன் எனப்படுபவர் அன்று முதல் இன்று வரை சிறுவர்களைக் கவர்ந்துவரும் ஒரு காட்டுவாசி. காட்டின் மிருகங்களுடன் ஒன்றாய் வாழ்ந்து பெரும் சாகசங்களைச் செய்யும் இவர் பற்றிய ஏராளமான சித்திரக் கதைகளும், கருத்துச் சித்திரப் படங்களும் வெளிவந்துள்ளன. தற்போது உலகின் முன்னணி திரைப்பட நிறுவனமான 'வோல்ட் டிஸ்னி' டார்சனை கதாநாயகனாக சித்தரிக்கும் ஒரு கருத்துச்சித்திரப்படம் தயாரிக்கின்றது.

இதன் விளம்பரப்படம் தற்போது அமெரிக்காவெங்கும் வெளியாகியுள்ளது. இதனைப் பார்த்த அமெரிக்காவின் கடும் தீவிரவாத அடிப்படைவாத யூத அமைப்பினர் அந்த விளம்பரப் படத்தை தயாரித்த நிறுவனத்திற்கு கடிதம் மூலமான எச்சரிக்கையொன்றை அனுப்பி வைத்தனர். அதில் டார்சன் அணிந்திருக்கும் சிறு துண்டு எம்மை அவமானப்படுத்துகிறதுபோல் இருக்கிறது. அவர் மீள உடையணிவிக்கப்பட வேண்டும். இல்லையேல் உலகம் முழுவதிலும் தாம் படத்தை பகிஸ்கரிக்கப் போவதாயும் கூறப்பட்டிருந்தது.

விளம்பரப் படத்தைத் தயாரித்த அந்த நிறுவனமும் காட்டு வாசியான டார்சனுக்கு நீளக்காற்சட்டை அணிவிக்க தயாராகியிருந்தது. ஆனால் படத்தயாரிப்பாளரோ டார்சனின் உண்மையான தோற்றத்தில் மாற்றம் செய்ய தயாரில்லை. ஆனால் வேண்டுமானால் டார்சனுக்கு ஒரு ஸ்ரெயிமல் [யூதர்கள் அணியும் பாரம்பரிய தொப்பி] அணிவிக்கத்தான் தயாராய் இருப்பதாகக் கூறினார்.

## தாகமா தள்ளாட்டமா?

அண்மையில் ரஷ்யாவின் சில பகுதிகளில் கடுமையான வெப்பம் தோன்றியது. சுமார் 200 பேர் வரையிலானோர் இறந்துபோயினர். அச்சமயம் மொஸ்கோ மாநகர சபை ஒரு மாபெரும் பியர் விழாவை ஏற்பாடு செய்தது. மொஸ்கோ நகர வாசிகளுக்கு 'பியர்' தாராளமாக வழங்கப்பட்டது. இதன்போது லெனினும் தப்பவில்லை. அவரது கைகளிலும் ஒரு பியர்கிண்ணத்தைக் கொடுத்துவிட்டார்கள்.



## இஸ்ரேலிய விமானங்களில் வழிபாட்டுத் தலம்

இஸ்ரேலிய விமான சேவையில், அமெரிக்க போயிங் விமானங்களே இதுவரை காணப்படுகின்றன. தற்போது அது முதன்முறையாக ஐரோப்பிய 'எயார் பஸ்' விமானங்களைக் கொள்வனவு செய்ய முடிவு செய்துள்ளது. எப்படி இந்த விமானப் பேரத்தில் எயார்பஸ் நிறுவனம் வெற்றி கண்டது என்றால் ஆச்சரியமாக இருக்கும். விமான நிறுவனத்தினர் தங்களது விமானங்களில் இன்மேல் 'சினகொக்' (யூதர்களது வழிபாட்டுத்தலம்) அமைக்கப்பட வேண்டும் எனக் கோரினார்கள். இதற்கு போயிங் நிறுவனம் மறுத்ததோ என்னவோ போட்டி நிறுவனமான ஏயார் பஸ்ஸிற்கு எப்படியாவது இந்த விற்பனையை வென்றாகவேண்டும். பல மில்லியன் டொலர்களை இலாபமாக பெறுவதென்றால் சினகொக் அமைப்பதில் தவறில்லை என்ற நிலைப்பாடு. உடனடியாக சரி என்று சொல்லிவிட்டார்கள். புதிய இஸ்ரேல் பயணிகள் விமானங்களில் பத்துப்பேர்கள் கலந்துகொள்ளக் கூடிய வழிபாட்டுத் தலங்கள் அமையப்போகின்றன.

மத்திய கிழக்கு விமான நிறுவனங்கள் இனிமேல் பள்ளி வாசல்கள் அமைத்தால்தான் தாம் வாங்கிக்கொள்வோம் எனக் கோரினால் இந்த நிறுவனங்கள் என்ன செய்யப்போகின்றன?

# வீர வணக்கம்



அன்னை மடியில்:
16.11.1974


வீர மரணம்:
12.01.1999

நாட்டு விடுதலைக்காய் போராட
அவன்
ஒருநாள் நாடு திரும்பினான்.
போகும் போது தன் உள்ளக்
குமுறலை
தாய்க்கு ஒரு ஒற்றையில் எழுதினான்
என்னைப் பெற்ற என் தாயவள்
தேசமே
எனக்குத் தாய்—ஆதலால்
அம்மா அழுவதை நிறுத்து
வீட்டைத் துறப்பதே
விடுதலையம்மா.
வீடு சிறையா?
மன வீட்டைத் திறப்பது
விடுதலையா?

பாசத் தூண்டலில் சிக்கிய மீனாய்
நீர் அற்ற கரையில் வீழ்ந்து துடித்து
ஆசை நிலையில் கைதியாகி
அகதி இனமென திரி நிலை மாற்ற
வீட்டைத் துறந்தவன் விடுதலைப்
பிழம்பே.

விடுதலையின் தங்கச் சாவி
எங்களின் அன்பன்
உள்ளக் கதவை திறந்தவன் அன்பன்
அன்பன் எங்கள் அகவீட்டில்
புதிதாய் குடிவந்துள்ளான்.
வீட்டைத் துறந்தவன் எப்படி
எங்கள் வீட்டில் குடி புகுந்தனன்.
அன்பே அகமெல்லாம் நிறைந்த
கடலன்பனே வென்றனன்.


— *அரியாலை நண்பர்கள்*



## கப்டன் கடலன்பன்

**திரு.லோகேஸ்வரன் நகுலேஸ்வரன்**

*(அரியாலை)*



# தமிழர் நடந்த பாதை

5

## தலைகீழ் வரலாறு

தமிழ்மொழியோடு உறவுடைய திரவிட மொழிகள் வலிமையான அளவில் இந்தியாவின் தென்பகுதியிலேயே தெலுங்கு, கன்னடம், மலையாளம் என வழங்கி வருகின்றன. திருந்திய திரவிட மொழிகள் எனப்படுவனவும் தமிழுக்கு அடுத்து நீண்ட வரலாறு உடையனவும் எனப்படுபவையும் இம்மொழிகளே. மைய இந்தியாவிலும், வட இந்தியாவிலும் இந்தியாவைத்தாண்டிய பாகிஸ்தான், பெலுசிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய இடங்களிலும் வழங்கிவரும் திரவிட மொழிகள் தமிழின் கொடுந்திரிபான மொழிகள். இவை திருத்தமாய் முற்றி வளராத மொழிகள். தமிழ்நாட்டிலும் தமிழரின் பிறிதொரு தாயகமாம் தமிழீழத்திலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழங்கிவரும் செந்தமிழ் மொழியோடு வடதிசையிலும் இந்தியாவைத்தாண்டிய பகுதிகளிலும், புழங்கும் மொழிகளை ஒப்புநோக்கி ஒற்றுமையைக் கண்ட மொழி நூலறிஞர்களும் வரலாற்றாசிரியர்களும் மாபெரும் தவறான கருத்தொன்றைத் தெரிவித்துவிட்டனர். அதாவது இன்றைய தமிழ்மொழி மேற்சொன்ன சிதைவு நிலைத்திரவிட மொழியிலிருந்து தோன்றி வளர்ந்ததென்பதே அது. இப்பிழைக் கருத்தினை ஒட்டியேதான் தமிழர்களும் மைய ஆசியாவிலிருந்து ஆரியர் வருமுன் குடிபெயர்ந்து தமிழ்நாட்டிற்கும் தமிழீழத்திற்கும் சென்று சேர்ந்தார்கள் என்னும் கருத்தும் உருவாயிற்று.



மொழிஞாயிறு பாவாணர் தமிழ். தமிழர் வரலாறு பற்றி மேற்சொன்ன அறிஞர்களைத் தலைகீழ் வரலாறு உரைப்பவர்கள் என்பார். தமிழுக்கும் தமிழ் எல்லையைத் தாண்டிய பகுதிகளில் வழங்கும் மொழிகளுக்கும் உள்ள ஒப்புமையைக் கண்டு சிதைமொழிகளிலிருந்து செந்தமிழ் தோன்றிற்று என்பதை நோக்கி அவர் அறிவுத்தெளிவு பெறுதற்காக ஓர் உவமையைக் கூறுவார். பேரனுக்கும் பாட்டனுக்கும் ஒப்புமை இருப்பதுகொண்டு பேரன், பாட்டனைப் பெற்றான் என்றுரைப்பதற்கும் மேலைய அறிஞர் கருத்திற்கும் வேறுபாடில்லை என்பார் பாவாணர். 'திராவிடர்கள் எப்பொழுது எப்படி இந்தியாவிற்குள் வந்து புகுந்தார்கள்' என்னும் தலைப்பில் கைமாண்டார்ப் [Halmendort] என்பார் எழுதிய கட்டுரையில்தான் தமிழர்கள் கி.மு. 500-ம் ஆண்டளவில் தமிழகம் புகுந்திருக்கவேண்டும் என்றார். தமிழர்கள் மைய ஆசியாவிலிருந்து ஆரியர் வருமுன் வந்து குடியேறியவரே என்னும் கருத்துடையவரான கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் கூட கைமாண்டார் கருத்தைப் பொருத்தமற்றதென்று ஒதுக்கித் தள்ளிவிட்டார்.

**பேரா.கு.அரசேந்திரன்**

கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகவே இந்தியாவைப் பற்றி எழுதுவோர் சமற்கிருதத்தையும் ஆரியர் நாகரிகத்தையும் பற்றி மட்டுமே உயர்வாய்ச் சொல்லி வந்துள்ளனர். தமிழ் நலிவும் தமிழர் ஒற்றுமைக் குலைவும் தமிழர் வரலாற்றை உண்மையானபடிக்குத் தெரிய முடியாமற் செய்துவிட்டன. சரியான தமிழ் வரலாறும் தமிழர் வரலாறும் இனிமேல்தான் எழுதப்படவேண்டும் என்பது மட்டும் முழு உண்மையாகும்.

கி.மு. 3000 ஆண்டளவில் சிறந்த நாகரிகமாய் விளங்கிய சிந்துவெளி நாகரிகம் அழியாமல் இருந்த காலத்திலேயே தமிழ்நாட்டில் தமிழ் நாகரிகம் செழித்து வாழ்ந்துள்ளது. இதற்கான சான்றுகள் நமக்குக் கிடைக்கும்போது சிந்துவெளி நாகரிகம் அழிந்தபோது அங்கிருந்த திரவிடர்கள் தெற்குநோக்கிப் பெயர்ந்து இறுதியில் தமிழகத்திற்கும் தமிழீழத்திற்கும் வந்து சேர்ந்தார்கள் என்று எப்படிச்சொல்ல முடியும். கி.மு. 3000 ஆண்டளவில் தோன்றிய தமிழ்நூல்கள் எவையும் இல்லை என்பது உண்மையே. ஆனால் அதுகொண்ட தமிழர்க்கே வரலாறு கி-மு.500 இல் இருந்துதான் தொடங்குகிறது என்று சொல்ல முடியுமா? பாண்டியர்கள் முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள் என்பதும் தமிழர்களின் தொல்பழந்தாயகப் பகுதியான குமரிக்கண்டம் கடலில் மூழ்கி அழிந்துவிட்டது என்பதும் தமிழின் முதலிரு சங்க நூல்கள் அழிந்துபோயின என்பதும் பொய்யா? புனைவுதானா? இப்பொழுது கிடைத்துள்ள தமிழ் நூல்களிலேயே பழைமையானதெனப்படும் தொல்காப்பியம் கி.மு. 600 ஆம் ஆண்டில் எழுந்ததென்பதும் அதுவும் இலக்கண நூலாக உள்ளதென்பதும் உண்மையாக இருக்கும்போது தமிழர்க்கு எப்படி வரலாறு கி.மு. 500 இலிருந்து தொடங்கமுடியும்.

## வெளியிலிருந்து கிடைக்கும் தமிழ், தமிழர் வரலாறு

பழந்தமிழர் வரலாறு பழந்தமிழர் உறவு கொண்டிருந்த அயல் உலகத்திலிருந்தே கிடைப்பதாக உள்ளது. அதுகொண்டு தமிழர் வரலாற்றை இப்பொழுதைக்கு நாம் கி.மு. 4000[நான்காயிரம்] ஆண்டுகட்கு முன்பிருந்தே தொடங்க வாய்ப்புள்ளது.

'சேஸ்' [Sayce] என்னும் வரலாற்றுப் பேரறிஞர் கி.பி 1887 ஆம் ஆண்டில் வெளியிட்ட நூல் 'ஹிப்பர்ட்' சொற்பொழிவுகள் என்பதாகும். கி.மு. 4 ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே தென்னிந்தியாவிற்கும் சுமேரியாவிற்கும் இடையில் வணிகம் நடைபெற்றுள்ளது என்று அந்நூலில் குறிப்பிட்டுள்ளார். சிந்துவெளி நாகரிகம் பற்றிய உண்மை கி.பி 1922 ஆம் ஆண்டில்தான் வெளியானது. அதன் பின்புதான் சிந்துவெளிக்கும் சுமேரியாவிற்கும் ஆன உறவு பற்றி அறிஞர்கள் ஆயத் தொடங்கினர். ஆனால் பேராசிரியர் 'சேஸ்' 1887 இலேயே தென்னகமாகிய தமிழகத்திற்கும் சுமேரியாவிற்கும் உடல் வணிகம் நடைபெற்றது என்று தெரிவித்துள்ளார். சுமேரிய மன்னரின் தலைநகரமே 'ஊர்' என்னும் தமிழ்ப்பெயரால் அழைக்கப்பட்டிருந்ததை முன்பே சுட்டினோம். இவ்வூரில் சேரநாட்டுத் தேக்குமரம் ஒன்று அகழ்வாராய்ச்சி மூலம் கிடைத்துள்ளது. இத்தேக்கு மரத்தின் அகவை [வயது] ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கவேண்டும் எனக் கண்டுள்ளனர். 'ஊர்' எனப்படும் சுமேரிய நகரம் கி.மு. மூவாயிரத்திலேயே அழிந்து போயிற்றென்றும் வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இதனால் கி.மு. ஐயாயிரம் ஆண்டளவிலேயே தமிழகத்தின் சேர நாட்டிலிருந்து தேக்குமரம் சுமேரியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதென்று தெரிந்துகொள்கிறோம்.

'சிந்து' என்னும் சொல் துணியைக் குறிக்கும் சொல்லாகச் சுமேரிய மொழியில் உள்ளது. இச்சொல் தமிழிலும் கன்னடம், துளு ஆகிய திரவிட மொழிகளிலும் துணியைக் குறிப்பதாக உள்ளது. ஆவியைப்போன்றும் மூங்கில் மரத்தின் உள்ளே உள்ள மெல்லிய பகுதி போன்றும் துணிகள் தமிழ்நாட்டில் நெய்யப்பட்டதாகச் சங்க நூல்கள் தெரிவிக்கின்றன. வெளிநாட்டவர் பலர் எழுதிய குறிப்புக்களிலும் பழந்தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் துணி முதன்மை இடம் பெறுகின்றது.

உலகில் முதன்முதலில் கடலில் கலம் செலுத்தியவர்களே தமிழர்கள்தான். மேலை ஆரிய மொழிகள் பலவற்றில் கடலையும் கடலில் செல்லும் கலங்களையும் குறிக்கும் சொற்கள் பல தமிழ்ச் சொற்களின் சிதைவாகவே உள்ளன. கடலைக் குறிக்கும் Marine கருவியைக் குறிக்கும் anchor ஆகியன யாவும் தமிழின் திரிபுச் சொற்களே. ஆங்கிலத்தில் புழங்கும் இச் சொற்கள் பழம்பெரும் ஆரிய மொழிகள் பலவற்றிலும் சிறு சிறு வேறுபாடுகளுடன் வழங்கப்பெறுகின்றன. இச்சொற்களின் வரலாற்றைப் பிறகு விளக்குவோம்.

தமிழரின் கடல் வணிகம் பற்றியும் அதன் வழியாகத் தெரியும் தமிழரின் பழம்பெரும் வரலாறு பற்றியும் இனி விளக்கமாகக் காண்போம். ஏனெனில் இதுவே இன்று நமக்குப் பழந்தமிழரின் வரலாற்றை நம்மிடம் இல்லாத நமது வரலாற்றை நமக்கும் உலகிற்கும் தெரிவிக்கும் தகுதியுடையதாகத் திகழ்கின்றது.

*(வளரும்)*

# நாற்று

## 'கனமான கனவுகள்'

– தானியங்களே மழைபோல் பொழியும் – அல்லது
பசியே எடுக்காத வயிறுகள் படைக்கப்படும்

– இரவில் இன்னுமொரு சூரியன் எழும்
மனிதர்கள் எப்போதும் எங்கும் தூங்கிவிடக்கூடாது

– வலியே ஏற்படாத இதயங்கள் முளைக்கும் – அல்லது
அதன் காயங்களை உடனுக்குடன் துடைத்துப்போட
மார்பில் வசதியாக வாசல் எழும்பட்டும்

– உண்மைகளைப் பேசும்போது மட்டும் திறக்கக்கூடிய வாய்
போதும்

– கொடுப்பதற்கு என்றால் நீளட்டும் –இல்லையென்றால்
தேவையில்லாத கரங்கள் தோள் பட்டைக்குள்ளே தூங்கட்டும்

– உலகமெங்கும் ஒரே மொழி! ஒரே வழி....

– முகம் அறியா மக்களுடன் வாழ்ந்தாலும் அனைவரும் நம்
உறவினர்கள். அனைத்தும் நம் தாய்த்திருநாடு

– கடல்–காலளவே வானம்–எட்டும் தூரமே
ஏற்றத்தாழ்வு எங்கும் இல்லை அனைவரும் சமம்

– புயல் இல்லை, பூசல் இல்லை, வெடிகுண்டோ ஊழலோ
இல்லை!

– ஒரே கூடாரத்துக்குள் ஒட்டு மொத்தமாக உலக மக்கள்!

– கனமான இந்தக் கனவுகள் உயிர்த்துவிட்டால்...?!

*- செல்வி டயானா அருள்நேசன்*
*பிரான்ஸ்*

## என் தோழிக்கு!

*உன் துப்பாக்கி என் தேசத்தில்*
*புதுப்பூக்களை பிரசவிக்க– நானோ*
*என் அடையாளத்தை*
*தொலைத்துவிட்டு அகதியாக*
*செத்துக்கொண்டிருக்கின்றேன்!*
*சுதந்திரமான உன் சிறகுகள்*
*விடியலை நோக்கி*
*சரித்திரம் படைக்க*
*என் சிறகுகளை – நானே*
*ஒடித்துவிட்டு அன்னிய நாட்டில்*
*அடைபட்டுப் போய்க்*
*கிடக்கின்றேன்!*
*விடுதலை வேட்கையின்*
*ஒவ்வொரு கணமும் – உன்வாழ்வில்*
*அர்த்தப்பட்டுப்போக – எனக்கு*
*சொல்லும்படியாக எந்தத் தகுதியுமின்றி*
*வெட்கப்பட்டு – ஊர்நினைவுகள்*
*மட்டும் மிச்சமாய்*
*ஆனாலும்...*
*நாளை மலரும் தமிழீழத்தில்*
*மரணமும் இயற்கையும் வணங்கிச்*
*செல்லும் – உன் வீரத் தடங்களை*
*என் பிள்ளை வந்து ஒருமுறை*
*தொட மட்டும் – உன்னிடம்*
*மண்டியிட்டு அனுமதி*
*கேட்கின்றேன் தோழி!*

*- லதா உதயன்*
*சுவிற்சர்லாந்து*

## கூடுங்கள்

விண்ணில் சிதறிய
விண்மீன் போல
தரணியில் சிதறிய
தமிழர்களே
ஒன்று கூடுங்கள்
தன்னலம் மறந்து
தமிழர் நலம் பேண
ஒன்று கூடுங்கள்
அழிந்து போகும்
இனமென
பழித்துக் கூற விடாமல்
எழுந்து வரும் இன
மென்று கூற
ஒன்று கூடுங்கள்
வாகை சூடும்
ஈழத்தாரைக் காண
ஒன்று கூடுங்கள்
அன்றி உரைக்காதீர்
தமிழனென்று....

*- கோ. நந்தன்*
*ஜேர்மனி*

# சர்வதேச தமிழ் ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

## INTERNATIONAL TAMIL BROADCASTING CORPORATION

# ITBC

(FIRST DIGITAL RADIO IN TAMIL)

**24 மணி நேர சர்வதேச தமிழ் வானொலி**

**Eutelsat Hotbird 3 இல் 12475.5 Mhz**

**Eutelsat Galaxis, Model 602 Cl Receiver ஒன்றினை வாங்கி ITBC தமிழ் நிகழ்ச்சிகளை இலசவமாகக் கேட்பதோடு, மற்றும் வேறு எந்த ஸ்தாபனமும் தரமுடியாத அளவு 200 (Radio, Television Channels) இற்கும் அதிகமான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை 100 வீதம் இலவசமாகப் பார்க்கலாம், கேட்கலாம்.**

## இதன் விலை 350 Euros மட்டுமே

**350 Euros** கொடுத்து மேற்படி **Receiver** ஐ வாங்கினால் அதன் பின் எந்தவிதமான மாதக் கட்டணமும் கட்டவேண்டியதில்லை. நிகழ்ச்சிகள் அனைத்தும் இலவசம்

அல்லது

ஐரோப்பாவில் தற்சமயம் Eutelsat Sagam 3200 Receiver வைத்திருப்பவர்கள் (தற்சமயம் TRT தமிழ்த் தொலைக்காட்சியை எடுத்துவரும் அதே Receiver) எமது நிகழ்ச்சிகளை, இந்த Receiver இலும் இலவசமாகக் கேட்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஒலிபரப்பாகும் நாடுகள்:**

42 ஐரோப்பிய நாடுகள் (Eutel sat Hotbird 3 இல்]
Canada உட்பட வட அமெரிக்கா (Fm சிறப்பலை வரிசையில்]
மத்திய கிழக்கு நாடுகள் (Eutel sat hot bird 3 இல்]
வெகுவிரைவில்
இலங்கை, இந்தியா [சிற்றலை வரிசை]

**ITBC இற்கு கடமைபுரிய சகல நாடுகளிற்கும் பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.**

**தலைமையகத் தொடர்புகளுக்கு:**

**Tel: 1-416 412 7384 / Fax: 1-416 412 7386**

### TECHNICAL PARAMETERS

| | | | |
|---|---|---|---|
| Satellite: | Hotbird 3-13 degrees East | Polarization: | Horizontal |
| Platform: | DVB/MPEG-2(MCPC) | Symbol Rate: | 27,5 MS/s |
| Freqyency: | 1247550 | FEC: | 3/4 |

காலத்தைப் பதிவுசெய்து மாயோன் எழுதுவது

# ஏற்ற செயல் செய்வதற்கு ஏன் அஞ்ச வேண்டும்?

எங்கள் பிறப்பின் அர்த்தம் என்ன? எங்கள் வாழ்வின் வலிமை என்ன? சாவிற்கு அப்பாலும் நாம் வாழ வேண்டாமா? செயலில் நாம் உயிர்ப்புப் பெற வேண்டாமா? செயற்கரிய காரியம் செய்தோம் என்ற நிறைவு அடைய வேண்டாமா? எங்கள் ஒவ்வோர் அசைவிலும் ஓர் அர்த்தம் தொனிக்க வேண்டாமா?

நான் பிறந்தேன், வளர்ந்தேன்-வெறுமனே வாழ்ந்தேன் இறந்தேன்.

இறப்பிற்குப் பின் உற்றார் கூடிஅழலாம். உறவினர் கண்ணீர் விடலாம்-நண்பர்கள் நயந்து போகலாம். அவ்வளவும்தானா?

இதற்கும் அப்பால் இருக்கின்றதே வாழ்வு. எங்கள் இறப்பு எத்தகையது?

**ஒருவர் இறந்துவிட்டார் அவ்வளவும்தானா?**

ஒருவர் போய்விட்டார்.

அவ்வளவுதா்னா?

அதற்குமப்பால் என் இறப்பு.

எனக்குத் தரும் துயர் எத்தகையது-அதனை நான் எவ்வாறு உணர்வேன்.

இந்தப் பெரிய உலகை விட்டு, இந்த அற்புதமான மனிதரைவிட்டு, இந்த அபூர்வமான வாழ்வை விட்டு, இந்த அன்பான உறவுகளை விட்டு, நான் பூோகிறேன்.

இது எத்துணையான வேதனையான உணர்வு. இது எவ்வளவு மோசமாக எங்களைத் தாக்கும். இதனை உணர்ந்து பாருங்கள் ஒரு கவிஞர் கூறினார்.

**நான் போய்வருகிறேன். _____**
**மாணிக்கங்களை இழந்து போகிறேன்**
**வள நதிகளை விட்டுச் செல்கிறேன்.**
**அது என் வரையில்தான்.**
**உங்களுக்கு நான்**
**சவுக்கு மயிலில் ஓர் நொடிக்குள்**
**கடந்து போய்விட்ட**
**ஒரு கால் அல்லது ஒரு கை**
**ஒரு முதுகு அல்லது பிடரி.**
**போய் வருகிறேன்.**
**உங்களுக்கு நினைவும் இருக்காது.**
**நான் அந்த 2x 5 1/2 அடி வெளியில்**
**ஒரு வெய்யில் சுடரும்**
**மெல்லிய காற்று வீசும்**
**நான் போய்வருகிறேன்.**

போனாய், போய்விட்டாய்-அது எமக்குத்தரும் துயர் அதிகம்தான். எனினும் அதிகநாள் தாக்குப் பிடிக்காது-எண்ணி ஒரு வருடம் அதன் பிறகு அந்த நினைவு ஒரு கனவாய் கழிந்துபோகும். மறைந்துவிடும். அடிக்கடி நினைவூட்டி நினைவூட்டிச் சிலிர்க்க வைக்கும்தான். என்றாலும்-சிலகாலங்களின் பின் சிலிர்த்துப் போவதும் சிதைந்து போகும்.

ஆனால் நான் வாழ்வேன்

என் இறப்பிற்குப்பின்னும் நான் இருப்பேன்.

என் செயலில் நான் உயிர்த்தெழுவேன்.

உன் செயல் - உன் சாவிற்கு அப்பாலும் வாழும்-உன் செயல் வாழின் நீ வாழ்வாய். செயல்-வாழும் வகையான செயல்-அது ஒரு போதும் ஓயாது. உயிர் ஒய்ந்து போனாலும் தலை சாய்ந்துபோனாலும் ஓயாது: சாயாது

என் செயலில், என் கவியில், நான் உயிர்த்தெழுவேன்; உயிர்த்தே எழுவேன். நீ புதைக்கப்பட்டாயோ? உன்னைத் தோண்டி எடுத்து, இதோ இவர் இருந்தார்; இன்ன காரியம் செய்தார். இதனால் இந்த உலகு இந்த விதமாய் நன்மை அடைந்தது என்று உலகு உரத்துக்கூறும்.

நீ எரிக்கப்பட்டாய் அல்லவா? அஞ்சாதே சுடுகாட்டில் உன்னைச் சுட்டெரித்த சாம்பலும் காற்றோடு கலந்து போயிற்றா? அதற்கென்ன? உன் வலிய செயல்-உன் அர்த்தம் செறிந்த வாழ்வு-காற்றில் கலந்துவிட்ட, காலத்தில் கரைந்துவிட்ட உன் சாம்பல் எடுத்து, அதனைச் சரியாக்கி உயிர்ப்பிக்கும்-இந்த உலகு உன் பெயர் சொல்லி உயிர்ப்பிக்கும்.

இனித்தான் இன்னோர், கேள்வி எழுகின்றது. என்ன கேள்வி அது?

செயல்-சரி-வலிமையான செயல்-புரிகிறது. வாழ்வு சரி. அர்த்தம் மிகுந்த வாழ்வு- மெத்தச்சரி செயல் யாது? எத்தகைய செயல்? இந்த உலகை உய்விக்க உகந்த செயல் யாது? உணர்வுடன் உரப்பேற்கும் உன்னத செயல் யாது? இன்னும் சொல்லப்போனால் இந்தச்செயல்- இந்த வண்ணம் வாழ்வை வளப்படுத்தும் என்று நாம் காண்தல் எங்ஙனம்?

ஒற்றை வரியில் இப்படிச் சொல்வோமே- ஏற்ற செயல் செய்வோம்.

உலகம் போற்றும் செயல் அதுவே- அப்படித்தானே-ஏற்ற செயல் எனில்,

உலகம் போற்றும் செயல் என்ற ஒரு வார்த்தையே போதுமே.

உலகத்தை உய்விக்க ஒரு செயல்

மானுடர் தர்மத்தை வெல்விக்க ஒரு செயல்.

மனிதாபிமானத்தின் உயிரைத் தடவும் ஒரு செயல்.

மக்கள் விரோதத்தின் கழுத்தை நெரிக்கும் ஒரு செயல்.

மெத்தச் சரி-அதுவே உலகம் போற்றும் ஒரு செயல்.

இதுதான் தக்க சொல் என்று இனி நாம் சரியாக வகைப்படுத்தவேண்டும்.

உலகத்தை உய்விக்கின்ற

மானுட தர்மத்தை வெல்விக்கின்ற

மனிதாபிமானத்தை உயர்த்திப் பிடிக்கின்ற ஒரு செயல்.

மற்றையது மக்கள் விரோதத்தின் கழுத்தை நெரிக்கின்ற ஒரு செயல்.

இரண்டு செயல்களும் இணைந்தவைதான். இரண்டு செயல்களுக்கும் மாறுபாடும் வேறுபாடும் கிடையாது.

ஆனால் நுணுக்கமான வேறுபாடுண்டு.

முதலில் கூறிய செயலை நாம் உயர்த்திப் பிடிக்கவேண்டும்-இரண்டாவது செயலை பகுதி வேலையாக்க வேண்டும்.

பயன்தரும் மரங்களை நாம் நடுவோம். இது முதலாவது செயல். பழுதாகிப்போன, பட்டுப்போன, இனிப்பயன்தராது என்று நம்புகின்ற மரங்களை வெட்டி வீழ்த்துவோம். இது இரண்டாவது செயல்.

நச்சு மரங்கள் வந்தாலோ?

நல்ல கதை இது-முதலில் அவற்றை அழிக்க வேண்டும். நச்சு மரங்கள் செய்யும் வேலை என்ன, இன்னும் நச்சு விதைகளை அவை விதைக்கும். விதைகளில் இருந்து இன்னும் நச்சுமரம் விளையும். விளையும் மரங்கள் இந்த உலகையே வேரோடு அறுக்கும். அதற்கு நாம் அனுமதிக்க முடியுமா?

முடியாது-இயலாது- இப்போது எங்கள் முதல்வேலை அதுவா்கத்தானே இருக்கமுடியும். நச்சு மரங்களால் வினையும் நாசமறுக்கவேண்டும்.

அதற்கு நாம் தான் முயலவேண்டும்.

அதனைச் செய்கின்ற அதே நேரம் பயனுள்ள மரங்களைப் பயிரடல் வேண்டும்-பயனுள்ள காரியம் செய்திடல்வேண்டும்.

தக்க செயல் செய்வதே நம் தகுதியானது.

சொல் செய்வதற்கு முன் சிந்தித்தல் அவசியம்.

சிந்தித்தல்; சிந்தனையின் விளைவாய் செயற்படுத்துதல், செயற்படுத்துதலில் முனைப்புக்கள் கொள்ளல்.

எண்ணித்துணி கருமம்-துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு.

சிந்தித்தல் பாதகமல்ல-நின்று, நிதானித்து செயற்படுத்துதல் சாதகமானது. செயல் வலிவு கொள்வதற்கு அதுவே உகந்தது. எண்ணத்தில் நேர்மை, சிந்தனையில் தெளிவு.

முன்னெடுப்பதில் உண்மை, முயற்சிக்கேற்ற உழைப்பு-இந்த வண்ண்ம் செயல்புரிவோமெனில்-செயல் வலிதாயல்லாது வேறு எந்த விதமாய் அமையும்? என்னால் இது இயலுமோ என்று அறிதல் இயலாத காரியம் என்று மனிதரிடம் எதுவும் இல்லை. தெரியும். எனினும் தனிமனிதர் தன் தோளில் மலையைத் தாங்கிட இயலுமா?

மனிதரால் இயலும் என்ற வார்த்தை மகத்தான வார்த்தை-தன்னம்பிக்கையை வழங்கும் வார்த்தை.

ஆனாலும் அதற்குமப்பால் தன்னால் இயலுமா? என்று உணர்வது அவசியமில்லையா?

**தன்வலி அறிதல்**

அது வலுமுக்கியமான ஒன்று

அதற்காகத்தளர்வது அல்ல, தன்னம்பிக்கை குறைவது அல்ல-தன்னை அறிதல்; தன் வலி எவ்வளவு என்று அறிதல்-செயலைத் திறம்படச்செய்வதற்கு வலுமுக்கியமானது. தன் வலிபோதாதா? அதனை நோக்கி தன்னை வளர்த்துக்கொள்ளல்-வலுவைப் பெருக்கிக்கொள்ளல், அதன் பிறகு செயல் செய்ய உன்னுதல்.

இதனுடன் இன்னொன்றையும் இணைத்துக்கொள்ளவேண்டும்.

**மாற்றான் வலி அறிதல்** - அது மகாமுக்கியமான ஒன்று.

எங்கள் யுத்தம் எதற்கு எதிரானதோ. அதன் ஆற்றல் எவ்வளவு? அதன் வலிமை எத்தகையது? அதனை நாம் அறிதல் மிக அவசியம். அப்போதுதான் அதனை நாம் வெல்லுதல் இயலும்.

தன் வலி அறிதல் மாற்றான் வலி அறிதல்

இவற்றுடன் ஏற்ற காரியம் செய்தல்

**அதற்கு ஏன் அஞ்சவேண்டும்.**

NÆRKØB -DKS Video

Danmark பதரேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

*Nærkøb Rejser®*
*Korskærvej 104*
*DK-7000 Fredericia*
*Tlf: 75 91 58 04*
*Fax: 75 91 58 06*

*Nærkøb DK's Video*
*Korskærvei 104* (கோஸ்கர்வாய் 104)
*DK 7000 Fredericia*
*Fax: 75 91 58 06.*

*Nærkøb Travels®*

உங்கள் பிரயாணத்துக்குரிய விமானச் சீட்டுகளை மிக மலிவான முறையில் உரியநேரத்தில் நீங்கள் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் இவ்வாண்டிலிருந்து எமது ஸ்தாபனம் இந்திய/சிங்கப்பூர் சுற்றுலாவை ஆரம்பித்துள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் இச்சுற்றுலா ஆரம்பமாகும்.
FREMMED Pas வைத்திருப்போரும் இந்த சுற்றுலாவில் கலந்து கொள்ளலாம் என்பதை மிக மிக மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறார்கள்.

*Nærkøb Money Transfer*

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

**இவ்வாரம் முதல் Okotober 30-ம் திகதி வரை**
**மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.**
Copenhagen - Colombo - **3,200 Kr** மட்டும் **(Tax 165 Kr)**
Copenhagen - Colombo - India (திருவனந்தபுரத்திற்கு) - **3800 Kr + Tax 185 kr**

## புகலிட நிகழ்வுகள்

# தியாகி திலீபன் பேச்சுப் போட்டி

உண்ணா நோன்பிருது மரணித்த தியாகி லெப். கேணல் திலீபன் நினைவுப் பேச்சுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியகம் கலைபண்பாட்டுக் கழகம் வருடா வருடம் இதனை நடாத்தி வருகின்றது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக பேச்சுப் போட்டிகள் நடைபெறும். அனைத்து வயதுப் பிரிவினரும் லெப். சேணல் திலீபன் என்னும் தலைப்பிலேயே பேச வேண்டும். கீழ்ப்பிரிவுக்கு மூன்று நிமிடங்கள், மத்தியபிரிவுக்கு ஐந்து நிமிடங்கள், மேற்பிரிவுக்கு ஏழு நிமிடங்கள் என பேச்சுப் போட்டிக்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கீழ்ப்பிரிவு 01.01.89 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள், நடுப்பிரிவு 01.01.83லிருந்து 31.12.88 வரை பிறந்தவர்கள், மேற்பிரிவு 01.01.79 லிருந்து 31.12.82 வரை பிறந்தவர்கள் என வயதெல்லை விதிக்கப்பட்டுள்ளது.

பேச்சுப் போட்டிகளிற் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்து 31.08.99ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**சகல தொடர்புகளுக்கும்:** K.T.O.
POSTFACM,
37441 BAD SACHSA.

*- வீ.ஆர்.வரதராஜா*

# பிறேமவேட தமிழாலயவிழா !

தமிழீழ சிறுவர் ஆண்டைச் சிறப்பிக்கும் பிறேமவேட தமிழாலய விழா 28.08.99 சனியன்று பிற்பகல் 4 மணிக்கு பிறேமவேட Hauptschule மண்டபத்தில் நடைபெறும்.

அமைதி வணக்கம், மங்கல விளக்கேற்றல், தமிழாலய கீதம், வரவேற்புரை, பேச்சு, கவிதை, பரதநாட்டியம், சிறுவர் நடனம், ஓரங்கநாடகம், பட்டிமன்றம், சிறுவர் அபிநயப்பாடல், பரிசு வழங்கல், ஆசிரியர் கௌரவிப்பு, வினோத உடைப்போட்டி, தமிழாலயவிழா மலர் வெளியீடு, நாட்டிய நாடகம், நகைச்சுவை நாடகம், அரட்டை அரங்கம் ஆகியவை கலைப்பூக்களாக மலரும்.

விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் பிறேமவேட தமிழாலயம் அன்புடன் அழைக்கின்றது.

# ஜேர்மன் மாவீரர் போட்டிகள் 99ல் இறுதி வெற்றியை பெற்றவர்கள்

**புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்ற தமிழாலயம்**

1வது இடம் wuppertal தமிழாலயம் 299 புள்ளிகள்
2வது இடம் Meerbusch தமிழாலயம் 192 புள்ளிகள்
3வது இடம் Krefeld தமிழாலயம் 159 புள்ளிகள்

**சிறந்த அணி நடை**

1வது இடம் Krefeld தமிழாலயம் பெண்கள்
2வது இடம் Meerbusch தமிழாலயம் பெண்கள்
3வது இடம் Wuppertal தமிழாலயம் பெண்கள்

**ஒப்பனையும் பாவனையும்**

1வது இடம் Krefeld தமிழாலயம்
2 வது இடம் Meerbusch தமிழாலயம்
3வது இடம் Wuppertal தமிழாலயம்

**10 வயதிற்குட்பட்ட தமிழாலய மாணவர்களுக்கான உதைபந்தாட்டம்**

**சிறந்த எல்லைக் காப்பாளர்:**
நிதர்சன் இராஜகுலம் முன்ஸ்ரர் தமிழாலயம்.

**கூடுதலான இலக்குகளைப் போட்டவர்:**
கிருஷ்ணானந்தன் வரதராஜன் முன்ஸ்ரர் தமிழாலயம்.

**சிறந்த விளையாட்டுவீரர்:**
ஜெகநாதன் பிரகாஷ் கிறீவில்ட் தமிழாலயம்.

**இறுதிப்போட்டி முடிவுகள்**

1வது இடம் முன்ஸ்ரர் தமிழாலயம்.
2வது இடம் பிராங்பேர்ட் தமிழாலயம்.
3வது இடம் பேர்லின் தமிழாலயம்.

**15 வயதிற்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டம்**

**சிறந்த எல்லைக் காப்பாளர்:**
சஞ்சீவன் இரவீந்திரநாதன் முன்ஸ்ரர் தமிழாலயம்.

**கூடுதலான இலக்குகளைப் போட்டவர்:**
தர்சன் ஸ்ருட்காட் தமிழாலயம்.

**சிறந்த விளையாட்டு வீரர்:**
கீர்த்தன் சிவலிங்கம் ஒபகௌசன் தமிழாலயம்.

**இறுதிப்போட்டி முடிவுகள்**

1வது இடம் முன்ஸ்ரர் தமிழாலயம்.
2வது இடம் பிராங்போட் தமிழாலயம்.
3வது இடம் ஒபகௌசன் தமிழாலயம்.

**20 வயதிற்குட்பட்ட தமிழாலய மாணவர்களுக்கான உதைபந்தாட்டம்**

**சிறந்த எல்லைக் காப்பாளர்:**
கோகுலறூன் சிலலோகநாதன் சுட்காட் தமிழாலயம்.

**கூடுதலான இலக்குகளைப் போட்டவர்:**
செந்தில்நாதன் பாலா டியூஸ்பேக் தமிழாலயம்.

**சிறந்த விளையாட்டு வீரர்:**
அலைமகன் தங்கவேல் சுட்காட் தமிழாலயம்.

**இறுதிப்போட்டி முடிவுகள்**

1வது இடம் சுட்காட் தமிழாலயம்.
2வது இடம் டியூஸ்பேக் தமிழாலயம்.
3வது இடம் வியூப்பெற்றால் தமிழாலயம்.

**கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டம்**

**சிறந்த எல்லைக் காப்பாளர்:**
சிவாகரன்-பக்நாத் விளையாட்டுக் கழகம்.

**கூடுதலான இலக்குகளைப் போட்டவர்:**
மனோப்பிள்ளை அலக்ஸன்-பக்நாத் விளையாட்டுக்கழகம்.


**சிறந்த விளையாட்டுவீரர்:**
இராமலிங்கம் பரணிதரன்-பேர்லின் தமிழர் விளையாட்டுக்கழகம்

**இறுதிப்போட்டி முடிவுகள்**


1வது இடம் பக்நாத் விளையாட்டுக் கழகம்.
2வது இடம் பேர்லின் தமிழர் விளையாட்டுக் கழகம்.
3வது இடம் எசன் தமிழர் விளையாட்டுக் கழகம்.

ஜேர்மன் தழுவிய கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 1999-ம் ஆண்டுக்கான சிறந்த ஒழுங்கு கட்டுப்பாட்டுக்கான வெற்றிக்கிண்ணத்தை டீலன்பேர்க் தமிழர் விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது.

# வீர வணக்கம்



## கப்டன் கடலன்பன்
## திரு.லோகேஸ்வரன் நகுலேஸ்வரன்
(அரியாலை)



**அன்னை மடியில்:** 16.11.1974

**வீர மரணம்:** 12.01.1999

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி லோகேஸ்வரன் – சொரூபராணி தம்பதிகளின் அருமை மகன் திரு. நகுலேஸ்வரன் (கப்டன் கடலன்பன்) கடந்த 12.01.1999 அன்று வீரமரணமடைந்தார்.

இவர், திருமதி ச.கஸ்தூரி (பிரான்ஸ), செல்வி யோகஸ்திரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சி.கண்ணம்மாவின் பேரனும், புஸ்பராணி, நவரட்ணராஜா (இலங்கை) ஆகியோரின் பெறாமகனும், நடேசலிங்கம், காசிலிங்கம், பூமலர், செல்வமணி (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

இலங்கையையும், பிரான்சையும் சேர்ந்த மச்சான்மார், மச்சாள்மார், சகோதர, சகோதரிகள், குடும்பத்தினருடன் இணைந்து தங்கள் வீரவணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

*தகவல்: யோ. சொரூபராணி (தாயார்)*
*தொலைபேசி: 01 60 29 45 28 / 01 39 83 08 18 அல்லது 06 09 22 05 97*

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க வெள்ளிவிழாவும் 7வது மாநாடும்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 7வது உலக மாநாடும் வெள்ளி விழாவும் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் ஆவணி 27, 28, 29 ஆகிய நாட்களில் கோலாகலமாக வாணி மகால் அரங்கில் நடைபெறுகின்றது.

மாநாட்டை தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமையில் தமிழ் மொழி பண்பாடு மற்றும் அறநிலைய துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் திறந்து வைக்க, ஏனைய இந்திய நடுவணரசு அமைச்சர்களும், புதுவை அமைச்சர்களும், தமிழக அமைச்சர்களும், யுனெஸ்கோ மேலாளர்களும் வாழ்த்துரைவழங்க, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் கே.ராமதாஸ் அவர்கள், மறுமலர்ச்சி தி.மு.க. தலைவர். வைகோ அவர்கள் இலங்கை கால்நடை தோட்ட அபிவிருத்தி அமைச்சர் செள. தொண்டமான் அவர்கள், திராவிடர் கழக பொதுச் செயலாளர் மாண்புமிகு கி.வீரமணி அவர்கள், மாநாட்டு புரவலரும் தமிழ் தேசிய இயக்க தலைவருமான மாவீரர் பழ.நெடுமாறன் அவர்கள் உலக தமிழர் பேரவை தலைவர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் தமிழ் சான்றோர் பேரவையைச் சேர்ந்தவரும் நந்தன் இதழ் ஆசிரியருமான பேரா, சுப. வீரபாண்டியன் அவர்கள் பன்னாட்டு தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள், திருநெல்வேலி மீனாட்சி சுந்தரனார் பல்கலைக்கழக துணை வேந்தர் கப. அறவாணன் அவர்கள் உட்பட பலர் எழுச்சி உரை முழங்க மாநாடு ஆரம்பமாக உள்ளதாக, மாநாட்டு செயலரும் நிதிப் பொறுப்பாளருமான இளம்பிறை எம்.ஏ. ரகுமான் அவர்களும் அகில தலைவர் பேராசிரியர், டாக்டர். இர.ந. வீரப்பனார் அவர்களும் தெரிவித்துள்ளதாக, உதப. இயக்கத்தின் செயலாளர் நாயகம் தமிழ்பணிச் செம்மல் கேரிகணேசலிங்கம் ஐரோப்பிய ஏடுகளுக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இருந்து ஈழத்து உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள், தமிழீழ விடுதலை அணித் தலைவர் மா.க. ஈழவேந்தன் அவர்கள் பேரா. அறிஞர் மறவன்புலவு சச்சிதானந்தன் அவர்கள் பேரா.கா.பொ. இரத்தினம் அவர்கள், முனைவர் அரு. கோபாலன் அவர்கள் புலவர் இறை குருவனார் அவர்கள், முனைவர் இரா.திருமுகனார் உள்ளிட்ட தமிழகத்தில் இருந்து 100 இற்கும் மேற்பட்ட பேராளர்கள் ஆய்வு உரைகளையும் சிறப்புரைகளையும் நிகழ்த்த '3 நாள் மாநாடு' முதல் நாள் பொது மாநாடாகவும் 2-ம் நாள் இயக்க மாநாடாகவும் 3-ம் நாள் இனமறுமலர்ச்சி மாநாடாகவும் இடம்பெறவுள்ளது.

மாநாட்டுப் புரவலர் தலைவர் திரு.பழ.நெடுமாறன் தலைமையில் வள்ளுவர் கோட்டத்திலிருந்து ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் திரு.தேனிசை செல்லப்பாவின் இசைநிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மாநாட்டிற்கு உ.த.ப இயக்க கிளைகளில் இருந்து உலகளாவிய ரீதியில் இருநூறுக்கும் மேற்பட்ட பேராளர்கள், சிறப்புரை ஆற்றவும், ஆய்வுரை நிகழ்த்தவும் உள்ளனர். பார்வையாளர்களும் கலந்துகொள்ள உள்ளனர்.

ஜேர்மனி உதப. இயக்க ஜேர்மன் கிளைத்தலைவர் ஆழலாடி நா.சி. கமலநாதன் அவர்கள், ஜேர்மன் கிளைச்செயலாளர் தமிழருவி நயினை விஜயன் அவர்கள் ஜேர்மன் கிளை நிதிப்பொறுப்பாளர் ஈழம் இராஜகருணா அவர்கள், பிரான்ஸ் உ.த.ப. இயக்க பிரான்ஸ் கிளைத் தலைவர் நகர பிதா அலன் ஆனந்தன் அவர்கள் யுனெஸ்கோ பேராளர் உ.த.ப. இயக்க வீ.தேவகுமாரன் அவர்கள், சுவிஸ் உதப. இயக்க சுவிஸ் கிளைத் தலைவர் ம.மனோகரன் அவர்கள், சுவிஸ் கிளை நிதிப் பொறுப்பாளர் மு.முருகவேல் அவர்கள், டென்மார்க் உதப. ஸ்கண்டிநேவிய இயக்க கிளைத் தலைவர் கவிஞர் பாரதிபாலன் அவர்கள், உதப. இயக்க இலண்டன் கிளைத்தலைவர் கலாநிதி. இராச மனோகரன் அவர்கள், உ.த.ப. இயக்க நெதர்லாந்து கிளைத் தலைவர் எஸ்.நடேச மூர்த்தி அவர்கள் உட்பட ஐரோப்பாவில் இருந்து 30-க்கும் மேற்பட்டோரும், 30-க்கும் மேற்பட்ட தமிழர் கழகங்கள் இணைந்த வட அமெரிக்காவில் உள்ள அமெரிக்க தமிழ்ச்சங்க பேரவையில் இருந்து பல பேச்சாளர்களும், உ.த.ப. இயக்க அமெரிக்க கிளைத்தலைவர் சுவாமி விஞ்ஞானனந்தா அவர்கள், உ.த.ப இயக்க கனடா கிளைத்தலைவர் சி.செல்லையா அவர்கள் அமெரிக்காவில் இருந்து 50-க்கும் மேற்பட்ட பேராளர்களும் மற்றும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மியா்மா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென்னாபிரிக்கா, ரியூனியன் அந்தமான் ஆகிய நாடுகளில் இருந்தும் பேராளர்கள் கலந்து கொள்கின்றனர்.

உலகளாவிய தமிழர்களை தமிழுடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற அடிப்படையில் 08.01.1974 அன்று தமிழீழம், யாழ்ப்பாணத்தில் இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

1962-ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ் ஆராய்ச்சி கழகத்தினால் எதுவித நன்மையும் கிடைக்காது என்பதனை உணர்ந்து 1974-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு வந்த தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி மறைந்த பேரா சாலை இளந்திரையன் அவர்கள் தலைமையில் இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்டு அகில தலைவர் பேரா.டாக்டர் இரா. வீரப்பனார் தலைமையில் மலேசியாவில் தலைமையகத்தைக் கொண்டும் பாரிஸ் யுனெஸ்கோவில் தலைமை பதிவு பெற்றும் 30 நாடுகளில் கிளைகளைப் பரப்பி ஒரே பெயரில் அந்த நாடுகளில் பதிவாகி இயங்கிவரும் உலகளாவிய மூத்த பேரியக்கம் இதுவாகும்.

இவ்வியக்க முதலாவது மாநாடு தமிழக தலைநகர் சென்னையில் 1977-ம் ஆண்டும், இரண்டாவது மாநாடு 1980இல் மொரீசியசிலும், 3-ம் மாநாடு 1984இல் சேலத்திலும், 4-ம் மாநாடு 1987-ல் மலேசியாவின் தலைநகர் கோலாலும்பூரிலும், 5வது மாநாடு 1992-ம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியிலும், 6-வது மாநாடு 1996 கனடாவின் தலைநகர் ரொரண்டோவிலும் நடைபெற்றது.

7வது உலக மாநாடும் வெள்ளி விழாவும் தமிழகத்தின் தலைநகர் சென்னையில் இடம்பெறுகின்றது. இம்மாநாட்டில் '21-ம் நூற்றாண்டின் தமிழினமும் தமிழியமும் கருப்பொருளாகும்.

இம்மாநாடு பற்றிய மாநாட்டு மலர் 500 பக்கத்தில் வண்ண வெளியீடாக ஆவண களஞ்சியமாக வெளிவர இருக்கின்றது.

**– அலன் ஆனந்தன்**

**மாநாடு சம்பந்தமான மேலும் அதிக விபரங்களை பெறவும் மாநாட்டில் கலந்துகொள்ளவும், பின்வரும் முகவரி மூலம் தொடர்புகொள்ளலாம்.**

**பிரான்சு செயலகம்:**
திரு.அலன் ஆனந்தன்
உ.த.ப. இயக்கம் தலைமையக செயலாளர்
**26.AV.Gul.de Gaulle,**
**93440-Dugny**

# ஜெனீவாவில் கண்டதும் கேட்டதும்....

ஊர்வலம் நகர்ந்து ஐ.நா சபைக்கு அருகில் வந்துவிட்டது. பாதைகளின் போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டுவிட்டன. தங்குபாதையில் நின்ற காரின் சாரதி ஒருவர் என்னை அழைத்தார். அவரும் சுவிஸ் நாட்டவர்.

சிறீலங்கா நாட்டுக்கு எதிரான ஊர்வலமா? என்று கேட்டார். 'சிறீலங்கா நாட்டின் மனித உரிமை மீறலை கண்டிக்கும் ஊர்வலம். தமிழர்கள் தங்கள் விடிவுக்காக தமிழீழத்தை உலகம் அங்கீகரிக்கவேண்டும் எனக் கோரும் ஊர்வலம் என்றேன்.'


உங்கள் கோரிக்கை நிறைவேற என்வாழ்த்துக்கள் என்றார். நன்றி. ஆனால் நீங்கள் இப்படி பாதையில் தாமதிக்கவேண்டியுள்ளதே என்று மெதுவாகக் குறிப்பிட்டேன். அதற்கு அவர் எதிரே வருகின்ற ஊர்வலத்தினரின் உணர்வலைகளுக்கு மத்தியில் இது மிகச் சாதாரணமானது.' என்றதும் ஒரு கணம் அதிர்ச்சியடைந்தேன்.



கூடவே ஒரு வேதனை பிறநாட்டவன் எம் உணர்வுகளை மதிக்கிறான். ஆனால் எம்மவர்...! புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் நான்கு லட்சம் பேர்! இவர்களில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் இப்பேரணியில் கலந்துகொண்டிருக்கலாமே! என்பதுதான் அந்த வேதனை! உணர்வுள்ள உள்ளங்களின் தொகை அதிகரிக்கவேண்டும்.

உலகில் ஏனைய இனங்களைப்போல சிறீலங்காவில் வாழும் தமிழர்கள் நடாத்தப்படவில்லை என்பதை ஆதாரங்களுடன் நிருபித்தும் எதிர்பார்க்கும் அளவுக்கு கண்டனங்கள் எழவில்லை என்பதுதான் தமிழினத்தின் ஆழ்ந்த மனவருத்தம். இதனை வெளிப்படுத்தவே சுவிஸ் நாட்டில் ஐ.நா சபைக்கு முன் தமிழர் பேரணி கூடியது.

தமிழீழத் தமிழர்களுக்காக புலம்பெயர்வாழ் தமிழர்கள் குரல்கொடுப்பார்கள் என்பதை உணர்த்தி நின்ற உணர்வுபூர்வமான பேரணி அது. அங்கு கலந்துகொண்ட ஒவ்வொரு தமிழரின் முகத்திலும் அதன் தாக்கம் வெளிப்பட்டது. கடல் கடந்து வந்தாலும் சொந்த நாட்டின் விடிவுக்காகப் பங்குகொள்ளும் பேரணி!




ஐ.நா. சபையின் மிக அருகில் வந்துவிட்டோம் என வணபிதா இமானுவேல் குறிப்பிட்டபோது, அங்கு குழுமியிருந்த அனைவரும் ஆவேசத்துடன் திரும்பி ஐ.நா சபைக்கட்டடத்தை ஒரு முறை பார்த்துக்கொண்டனர். கொசோவோ பகுதியில் மக்களில் பலர் புதைக்கப்பட்டது குறித்து உலகம் முழுவதிலுமிருந்து கண்டனக்குரல்கள் எழுப்பப்படுகின்றன. ஆனால் தமிழீழத்தின் ஒவ்வொரு இராணுவ முகாமிற்கு அருகிலும் தமிழரின் புதைகுழிகள் இருக்கின்றது என்பதை உலகம் உணரவேண்டும் என்பதையும் இப்பேரணி உணர்த்திற்று.

பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு மிக மோசமான முறையில் கொலை செய்யப்படும் மிருகத்தனம் இதுவரை உலகில் எங்குமே நடைபெறவில்லை. கொடிய பிசாசுகளைப்போல் நடந்துகொள்ளும் சிறீலங்கா இராணுவத்தை இப்பேரணி கண்டித்து குரலெழுப்பியது.

இவற்றிற்கு தீர்வு உண்டா? தமிழினத்தை இந்த அழிவிலிருந்து காப்பாற்ற முடியாதா? சர்வதேசம் இவ்விடயத்தில் என்ன செய்யலாம்? போன்ற கேள்விகளுக்கு இப் பேரணி பதிலிளிக்கின்றது. சிறீலங்கா இராணுவத்தின் கொடுமை விலங்குடைக்கும் தமிழரின் விடுதலையை சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும். தமிழீழம்தான் தமிழரை இந்தக் கொடுமையில் இருந்து காப்பாற்றும் ஒரே தீர்வு என்பதையும் சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை பேரணியில் கலந்துகொண்ட அனைத்து மக்களும் ஐ.நா.சபைக்குக் கேட்கும் வண்ணம் ஒரே குரலில் சத்தமிட்டுக்கூறினர்.

இதற்குப் பின்னரும் சர்வதேசம், தமிழரின் வேண்டுதலை புறக்கணிக்க முடியுமா?

**– வீ.ஆர்.வரதராஜா**

# ஹங்கேரியில் மக்லேறன் முன்னணி



உலக கார்ஓட்ட (Formula 1) சம்பியனை இனங்காண்பதற்காக உலகின் பல பாகங்களிலும் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. இந்த சம்பியன் இனங்காணும் போட்டிகளில் 11-வது போட்டி 15.08.99 ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்டில் நடைபெற்றது. தற்போதைய நிலையில் ஃபறாறி, மக்லேறன் தயாரிப்புகளுக்கிடையே கடும் போட்டி நிலவிவருகிறது. முடிவுற்ற 11 போட்டிகளில் ஃபறாறி 5 தடவையும் மக்லேறன் 5 தடவையும் வெற்றிகளை தமதாக்கிக்கொண்டனர். இப்படியான சூழ்நிலையில் கங்கேரி போட்டியும் அதனையே முடிவாக்கியது. இக் கங்கேரிபோட்டியில் தற்போதைய சம்பியன் ஹக்கினன் தனது மக்லேறனை ஓட்டி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார். மற்றொரு மக்லேறன் ஓட்டுனரான குல்தாட் இரண்டாம் இடத்தையும் ஃபறாறிக்காக கடந்த இருபோட்டிகளிலும் வெற்றியைத் தேடிக் கொடுத்த ஈர்வின் இம்முறை மூன்றாம் இடத்தையே பெற முடிந்தது. ஹக்கினன் வெற்றி பெற்றிருந்தாலும் ஓட்டுநர் மதிப்பீட்டளவில் 2 புள்ளிகளால் ஈர்வின்னுக்கு அடுத்த படியாகவே இருக்கிறார். உலக சம்பியனை தேர்ந்தெடுக்க இன்னமும் 5 போட்டிகளே மீதமாக உள்ளபோது அடுத்த போட்டி 29.08.99 பெல்ஜியத்தில் நடைபெறவுள்ளது.

கங்கேரி போட்டியைத் தொடர்ந்து ஓட்டுநர், கார் தர நிலமைகள் பின்வருமாறு:

| ஓட்டுனர் | புள்ளிகள் |
|---|---|
| 1. ஈர்வின் (ஃபறாறி) | 56 |
| 2. ஹக்கிளன் (மக்லேறன்) | 54 |
| 3. குல்தாட் (மக்லேறன்) | 36 |
| 4. ஃபிறன்சன் (போர்டன்) | 36 |
| 5. சூமாக்கர் (ஃபறாறி) | 32 |

| கார் | புள்ளிகள் |
|---|---|
| 1. ஃபறாறி | 94 |
| 2. மக்லேறன் | 90 |
| 3. யோர்டன் | 42 |
| 4. வில்லியம்ஸ் | 22 |
| 5. பெனற்றன் | 16 |

# சிக்காக்கோவில் 'ரைகர்' வெற்றி

செல்வந்தரின் விளையாட்டான கோல்வ் விளையாட்டில் புலி என வர்ணிக்கப்படும் ரைகர் வூட்ஸ் (Tiger Woods) தனது இரண்டாவது பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறார். சிக்காக்கோ நகரில் நடைபெற்ற 81-வது `US PGA Championship' கோல்வ் போட்டியில் 23 வயதான அமெரிக்காவின் சுப்பர் ஸ்ரார் ரைக்கர் வூட்ஸ் 19 வயதான ஸ்பானியாவின் புதிய வீரன் ஷேர்கியோ ஹர்சியா



(Sergio Garcia)-வை விட முன்னணியிலிருந்து வெற்றி பெற்றதையடுத்து சொந்த நாட்டில் கோல்வின் புலி என்பதை 1997-ம் ஆண்டு அமெரிக்க சம்பியன் போட்டிகளுக்குப் பின் மீண்டும் நிரூபித்துள்ளார்.

பொன். தாமோதரம்

# உலகக்கிண்ணத்துக்குப் பின் ஒருநாள் போட்டிகள்

7-வது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் சூடாறியமர்ந்த பின் முதல்தடவையாக ஒருநாள் போட்டிகள் சிறீலங்காவில் ஆரம்பிக்கின்றன. புதிய உலக சம்பியன் அவுஸ்திரேலியா, கடந்தமுறை உலகசம்பியன் சிறீலங்கா, முன்னாள் உலக சம்பியன் இந்தியா ஆகிய மூன்று நாடுகள் தங்களுக்கிடையில் முத்தரப்பு போட்டிகளை சந்திக்கவிருக்கின்றன. இவ் ஒருநாள் தொடர் ஜெயசூரியா தலைமை சிறீலங்கா அணிக்கும் தலைமை மாற்றம் கண்ட இந்தியாவுக்கும் முக்கிய தொடராக கணிக்கப்படுகிறது. போட்டிகள் நடைபெறும் நாட்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒகஸ்ட் 22 | சிறீலங்கா | எதிர் | அவுஸ்திரேலியா | - காலி |
| ஒகஸ்ட் 23 | இந்தியா | எதிர் | அவுஸ்திரேலியா | - காலி |
| ஒகஸ்ட் 25 | சிறீலங்கா | எதிர் | இந்தியா | - கொழும்பு |
| ஒகஸ்ட் 26 | சிறீலங்கா | எதிர் | அவுஸ்திரேலியா | - கொழும்பு |
| ஒகஸ்ட் 28 | இந்தியா | எதிர் | அவுஸ்திரேலியா | - கொழும்பு |
| ஒகஸ்ட் 29 | இந்தியா | எதிர் | சிறீலங்கா | - கொழும்பு |
| ஒக்ஸ்ட் 31 | இறுதி (முதல் இரு இடங்களையும் பெறும் அணிகள்) | | | |


## வன்னி விளையாட்டு கழகம்-பிரான்ஸ்
## Vanni Sports Club-France

**பிரான்ஸ் வாழ் வன்னி மக்கள் அனைவருக்கும் ஓர் அன்பான வேண்டுகோள்!**

வன்னி இளைஞர்களாகிய நாம் **வன்னி விளையாட்டு கழகம்** என்னும் ஓர் விளையாட்டு கழகத்தை ஆரம்பித்துள்ளோம். ஆகவே அனைத்து பிரான்ஸ் வாழ் வன்னி மக்களையும் விளையாட்டு வீரர்களையும் ஏனைய பிரதேச மக்களையும் விளையாட்டு வீரர்களையும் இணைத்து எமது விளையாட்டு கழகத்தை வளர்ச்சியடையவைக்கவுள்ளோம். எனவே சகல தரப்பினரும் எம்மை ஊக்குவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

இங்கனம்
விளையாட்டு வீரர்கள்

தொடர்புகளுக்கு:
01 44 75 04 19 ஆனந்தன்
06 85 65 21 07 கண்ணன்
01 43 70 73 39 பிலிப்


# டெனிஸ் போட்டிகளிலிருந்து ஸ்ரெபி கிறாப் ஓய்வு

கடந்த 15 வருடங்களாக டெனிஸ் உலகை ஆக்கிரமித்து பல சாதனைகள் படைத்த யேர்மன் தேசத்து வெற்றி நாயகி ஸ்ரெபி கிறாஃப் டெனிஸ் போட்டிகளிலிருந்து தனது ஓய்வை 13.08.99 வெள்ளிக்கிழமை மதியமன்று உத்தியோக பூர்வமாக அறிவித்திருக்கிறார்.

13-ம் திகதியை கண்டால் ஐரோப்பியர்களுக்குப் பீதி, அதிலும் அது ஒரு வெள்ளிக்கிழமையாகிவிட்டால் சொல்லவே தேவையில்லை அப்படிப்பட்ட அந்த வெள்ளிக்கிழமை தனது சொந்த நகரான கைடில்பேர்க்கில் உள்ள பிரபலமான `Marritott' விடுதியின் நியோர்க் மண்டபத்தில் நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள் படப்பிடிப்பாளர்கள் முன்னிலையில் ஸ்ரெபி கிறாப் தனது ஓய்வினை பகிரங்கப்படுத்தியுள்ளார்.

14.06.69 யேர்மன் கைடில்பேர்க்கில் பிறந்த ஸ்ரெபி கிறாப் எண்பதுகளின் முற்பகுதியில் தனது டெனிஸ் பிரவேசத்தை ஆரம்பித்து கிடுகிடுவென வளர்ச்சியை எட்டி விரைவிலேயே முன்னணிக்கு வந்துவிட்டார். தனது 18-வது வயதில் உலகின் முதல்தர டெனிஸ் ராணியாக உருவெடுத்தவர். ஒருசில வாரங்கள் நீங்கலாக 1996 வரை தனிக்காட்டு ராணியாக வலம்வந்து கொண்டிருந்தார். மொத்தம் 377 வாரங்கள் முதன்மை ஸ்தானத்தை வைத்திருந்த ஸ்ரெபி கிறாபின் உலகசாதனையை இதுவரை யாருமே மிஞ்சவில்லை. ஆண்களில்கூட இவ்வளவு தொகையை எட்டக்கூடிய யாரும் தென்படவில்லை.


ஸ்ரெபி கிறாப் கடந்துவந்த டெனிஸ் பாதையில் 22 பிரபலமான பெரிய வெற்றிகளும் (Grand Slam) 107 சிறியளவிலான வெற்றிகளும் அடங்குகின்றன. 22 பெரிய வெற்றிகள் என்றால் 7 தடவை விம்பிள்டன், 6 தடவை பிரான்ஸ் ஒப்பன், 5 தடவை



அமெரிக்கன் ஓப்பன், 4 தடவை அவுஸ்திரேலியன் ஓப்பன் ஆகும். சிறிய வெற்றிகள் 107 இருந்தாலும் அதில் 1987, 1992 ஆண்டுகளில் அடைந்த `FED CUP' வெற்றிகளும் 1988 ஒலிம்பிக் தங்கப்பதக்க வெற்றியும் அடங்குகிறது. இவரின் திறமைக்கு மகுடம் சூட்டுவதுபோல் 1988-ம் ஆண்டு பெறப்பட்ட `Golden Slam' விருது அமைகிறது. 1988-இல் விம்பிள்டன், பிரான்ஸ், அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நான்கு முக்கிய வெற்றிகளுடன் சோல்நகரின் ஒலிம்பிக் வெற்றியும் ஸ்ரெபி கிறாஃபின் திறமைக்கு கிடைத்தன.

பல வெற்றிகளுக்குச் சொந்தக்காரியான இவருக்கு கிட்டத்தட்ட 22 மில்லியன் டொலர்கள் பரிசுத்தொகையாக குவிந்திருக்கிறது.

1996-ம் ஆண்டிலிருந்து உடல்நிலை அவ்வளவாக ஒத்துப்போகாததால் வீழ்ச்சியைச் சந்தித்த ஸ்ரெபி கிறாஃப் திரும்பவும் கடுமையாக முயற்சித்து ஒருசில குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றதோடு ஓய்வுக்கு முன் மூன்றாம் இடத்திலும் இருந்தார் என்பது கவனிக்கப்படவேண்டும். ஸ்ரெபி கிறாஃப்பின் ஓய்வு ரசிகர்களுக்கு சோகமான செய்தியானாலும் இனிவரும் காலங்களில் புதிய ஸ்ரெபி கிறாஃப்கள் உருவாக ஒரு களம் அமைத்திருக்கிறார் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.



நியூசிலாந்து அணிக்கும் 'எசெக்ஸ்' அணிக்குமிடையிலான போட்டியில் 'எசெக்ஸ்' அணியிடம் நியூசிலாந்து அணி தோல்வி கண்டுள்ளதோடு அணியின் முக்கியமான இரு பந்துவீச்சாளர்கள் காயத்துக்குள்ளாகியிருக்கும் நிலையிலேயே இங்கிலாந்துடனான 3வது டெஸ்ட் தொடரை சந்திக்கவுள்ளது.

# இலண்டனில் உள்ள விடுதலைப்புலிகளிடம் நான் அனுமதி கோரவில்லை

## கொத்தலாவல மறுப்பு

(16.08.99)

சிறீலங்கா வர்த்தக சம்மேளனத்திற்கு தலைவரான லலித் கொத்தலாவல தான் வன்னிக்கு செல்வதற்கான அனுமதியை கோரி இலண்டனில் உள்ள விடுதலைப்புலிகளிடம் இதுவரை விண்ணப்பிக்கவில்லை எனவும், அவ்வாறு வெளிவந்த செய்திகள் தவறானவை எனவும் தெரிவித்துள்ளார். வன்னிக்கு வெறும் கையுடன் போவதற்கு தான் விரும்பவில்லை எனவும், நாட்டின் இரு பிரதான கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையே தீர்க்கமான முடிவொன்றினை எட்டிய பின்னரே தான் விடுதலைப்புலிகளை சந்திப்பதற்கு விரும்புவதாக கொத்தலாவல குறிப்பிட்டுள்ளார்.

வெறும் கையுடன் புலிகளை சந்திப்பதில் என்ன பலன் இருக்கின்றது. சமாதானம் உருவாகவேண்டும் என்பது முக்கிய விடயம் எனினும் இரு பிரதான கட்சிகளின் நிலைப்பாடு இதுதான் என்பதை புலிகளிடம் உறுதியாக தெரிவிக்க வேண்டும். அவ்வாறான ஒரு நிலையினை எட்டப்பட வேண்டுமானால் இரு கட்சிகளும் முதலில் உடன்பாடொன்றினை காணவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கழுதைகளைக் கொல்லும் விமானப்படை

புத்தளம் கற்பிட்டிப் பகுதியில் குண்டுவீச்சுப் பயிற்சியில் ஈடுபட்டுவரும் சிறீலங்கா விமானப் படையினர் தமது இலக்குகளாக அப்பகுதியில் திரியும் கட்டாக்காலி கழுதைக்கூட்டங்களைத் தெரிவுசெய்யும் கொடுமையும் நிலவிவருகிறது. விமானப் படையினரின் தாக்குதல் காரணமாக ஏராளமான கழுதைகள் கொல்லப்பட்டும், பல காயப்பட்டும் உள்ளன. தற்பொழுது விமான இரைச்சலைக் கேட்டாலே கழுதைகள் பீதி கொண்டு ஓடும் நிலைதான் எழுந்துள்ளது. அத்துடன் விமானப்படையினரின் தாக்குதல் பயிற்சியினால் அப்பகுதியில் உள்ள தென்னந்தோட்டங்களும் சேதமடைந்துள்ளன. விமானப் படையினரின் இந்த அடாவடித்தனமான செயல் குறித்து புத்தளம் மாவட்ட ஐக்கியதேசியப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.அஸ்வர் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு கடிதமொன்றினை எழுதியுள்ளார். மக்கள் குடியிருப்புகளிற்கு அண்மையாக விமானப் படையினர் அபாயகரமான பயிற்சிகளில் ஈடுபடுவது குறித்தும் அவர் தனது கண்டனத்தை அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 5-ம் திகதி புத்தளப் பகுதியில் நடந்த விமானப் படைக்குண்டுவீச்சுப் பயிற்சியின்போது இரு சிறார்கள் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க நிறுவனத்திடம் 700 மில்லியன்களை இலங்கை வங்கி இழந்தது

இலங்கையில் கனிமத்தொழிற் துறையில் நிறுவனமொன்றினை அமைப்பதற்காக அமெரிக்க நிறுவனமொன்று முன்வந்திருந்தது. பல மில்லியன்ரூபா செலவில் அதற்கான திட்டமும் வகுக்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகின. இலங்கையின் பெரிய வங்கியான இலங்கை வங்கியில் இந்நிறுவனம் 700 மில்லியன் ரூபாய்களைக் கடனாகப் பெற்றிருந்தது. அத்துடன் ஏனைய தனியார் வங்கிகளிலும் சில மில்லியன் ரூபாய்களைக் கடனாகப் பெற்றிருந்தது. ஆனால் ஆரம்பிக்கப்பட்ட தொழில்துறையில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக அந்த நிறுவனத்தின் நிர்வாகம் நாட்டினை விட்டுச் சென்றுவிட்டது. இலங்கை வங்கியிடம் எடுக்கப்பட்ட கடன்தொகையில் சுமார் 50 மில்லியன் வரையிலேயே அந்நிறுவனம் செலவுசெய்துள்ளது. தற்பொழுது கடன்கொடுத்த இலங்கை வங்கி அக்கடனை மீண்டும் எவ்வாறு மீட்பதென்பது பற்றி ஆலோசனைகளை மேற்கொண்டுவருகிறது. அமெரிக்க நிறுவனத்தின் சொத்துக்களை விற்பதன்மூலம் வங்கிக்கு 4 மில்லியன் ரூபாய்கள் மாத்திரமே கிடைக்கலாம் என்பதால் மிகுதித்தொகைக்கு என்ன செய்வதென்ற குழப்பத்தில் இலங்கை வங்கி அதிகாரிகள் ஆழ்ந்திருக்கின்றனர். தற்பொழுது இவ்விடயம் அரசியல் ரீதியிலும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. முறையான ஏற்பாடுகள் இல்லாமல் எவ்வாறு இவ்வளவு பாரிய தொகையை வங்கி கடனாக அளித்தது என்பது பற்றியும் அரசியல்வாதிகள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### புளொட்.......

ஊடாகவே கொழும்பு திரும்பியதும், இந்தியாவில் இவர் சதி நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்ற செய்திகளையும் உறுதிப்படுத்துவதாக அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### விடுதலைப் .......

தாக சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றன. பாதுகாப்பு அதிகாரிகள் கருத்துப்படி துறைமுகப் பகுதியை விடுதலைப்புலிகள் மிகத் தீவிரமாகக் கண்காணிக்க ஆரம்பித்துள்ளதுடன், துறைமுகத்தின் சகல செயற்பாட்டினையும் அவர்கள் அவதானித்து வருகின்றனர். அண்மையில் துறைமுகப் பகுதியில் ஊடுருவி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கப்பல் மீதான தாக்குதலும் இதனை உறுதிப்படுத்துவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் ஆதாரம் காட்டியுள்ளன. திருமலைத் துறைமுகம் மீதான தாக்குதலுக்கு விடுதலைப்புலிகளின் கடல் அணியினர் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருமலைத்துறைமுகத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக நகரில் உள்ள சிறீலங்காப் படையினர் தற்பொழுது உசார் நிலையில் உள்ளனர். எப்போதுமில்லாதவாறு திருமலை நகரில் அடிக்கடி தேடுதல்களும், சுற்றிவளைப்புக்களும் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஈழத் தமிழரின்.......

பேச்சினையும் எழுத்தினையும் புரிந்துகொள்வதில் சிரமம் இருப்பதாகவும், ஈழத் தமிழர்களின் எழுத்தாக்கங்களை தான் மிக விரிவாக படிப்பதில்லை எனவும் அவர் கூறியுள்ளதுடன் தமிழர் பிரச்சினை தனக்கு அந்நியமானது எனவும் தெரிவித்துள்ளார். ஈழத் தமிழர்களின் எழுத்து தன்மீது பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை என்பதனை பேட்டியின் ஒரு கட்டத்தில் பாலகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தான் சாதித் திமிர் பிடித்தவன் என்ற கருத்து இருந்தாலும், தற்பொழுது யாழ்ப்பாணத்திற்கும் தான் செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பாலகுமாரன் சொன்ன முரண்பாடான கருத்து ஒன்றிற்காக தமிழக திரைப்பட உதவி இயக்குனர்கள் அவரது வீட்டின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடாத்தியதுடன் அவர் மீது தாக்குதல் நடாத்த முற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### படுவான்கரை.......

உள்ள மட்டக்களப்பின் நகரப் பகுதிக்கு பொதுமக்கள் எவரும் வர அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பு நகரிலிருந்து பிள்ளையாரடி வரையுள்ள திருமலை வீதியின் இரு பக்கமும் இருக்கும் வேலிகள் அனைத்தையும் உடனடியாக அகற்றிவிட வேண்டும் என்று பாதுகாப்பு படையினர் பொதுமக்களுக்கு உத்தரவிட்டுள்ளனர். மதில்கள் உள்ள வீடுகளில் மதில்களுக்கு அப்பால் நிற்பவர்கள் பார்க்க கூடியவாறு உடைததுவிடும்படியும் இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர். அத்துடன் இராணுவ வாகனத் தொடரணி செல்லும்போது வேலிகள், மதில்களுக்கு அருகிலோ உள்ளேயோ யாரும் நிற்ககூடாதெனவும் உத்தரவிட்டுள்ளனர். அண்மையில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் மட்டக்களப்பில் அதிகரித்துள்ளதை அடுத்தே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று இரவு ஒன்பது மணியளவில் மட்டக்களப்பு நகருக்கு வடக்கே 3 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள சின்ன ஊறணி இராணுவ முகாமிலிருந்து பாலமீன் மடுவை நோக்கி சென்ற இராணுவ அணியை இடைமறித்து விடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை நடாத்தினர். இத் தாக்குதலில் ஒரு சிப்பாய் படுகாயமடைந்தார்.

# பாதுகாப்பு உயரதிகாரிகள் அமைச்சர்கள் உட்பட 200 பேரின் தொலைபேசிகள் ஒட்டுக்கேட்பு

பாதுகாப்பு உயரதிகாரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், செய்தியாளர்கள் உட்பட 200 பேரின் தொலைபேசி இணைப்புக்கள் சந்திரிகாவின் உத்தரவின்பேரில் 24 மணிநேரமும் ஒட்டுக்கேட்கப்படுவதாக செய்திகள் கொழும்பில் வெளியாகியுள்ளது. சட்டவிரோதமான ரீதியில் சந்திரிகா இந்நடவடிக்கையை மேற்கொள்வது குறித்து அரசியல் வட்டாரங்களிடையே அதிர்ச்சி தோன்றியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அதே நடவடிக்கைதான் தற்போதும் மேற்கொள்ளப்படுவதாக அவ் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ் ஒட்டுக் கேட்கும் நடவடிக்கைக்காக 60 மில்லியன் ரூபா செலவில் இஸ்ரேலிடமிருந்து அதிநவீன தொலைத்தொடர்புச் சாதனம் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவ்வாறானதொரு நிலை எழுந்தபோதிலும் தொலைத்தொடர்பு அமைச்சரான மங்கள சமரவீர அதனை மறுத்திருந்தார். ஆனால் தற்பொழுது அவ்வாறான நடவடிக்கை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. தமது தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்படுவது குறித்து இராணுவ உயர் வட்டாரங்களும் சில அமைச்சர்களும் கடும் அதிருப்தி கொண்டிருப்பதால் அடுத்து அவர்கள் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப்போகின்றார்கள் என்பது பற்றி எதிர்பார்ப்பு நிலவிவருகின்றது. இதற்கிடையே சந்திரிகாவின் அமைச்சரவையில் உள்ள மூத்த அமைச்சர் ஒருவர் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு இரகசியமான முறையில் இலத்திரனியல் அஞ்சலை அனுப்பி வைத்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. நேரடியாக அமைச்சர் இதனை ரணிலுக்கு அனுப்பாது பிரித்தானிய நிறுவனமொன்றினூடாகவே அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர் தொலைபேசி நிலையம்

ALLO COM

27, Rue du Clos,
75020 Paris
Tel: 01 43 73 00 11 Fax: 01 43 73 02 64
M°: Maraîchers / Porte de Montreuil / Bus: 26

itineris SFR

Bouygues Telecom

ALLO BOX

59, Rue d'Avron,
75020 Paris
Tel: 01 43 73 76 83
Fax: 01 43 73 96 31

# ஈழமுரசு

Eelamurasu Weekly



அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64






Réseau WWA

உலகம் உங்கள் கைகளில்




King தொலைபேசி அட்டையை பாவிப்பதன் மூலம் தொலைபேசி அழைப்பில் 65% வரை சேமியுங்கள்

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் 45 நிமிடம் (N° Local) – 27 நிமிடம் (N° vert)

92, Rue de Bellville, 75020 Paris
(M° :Pyrénées)
Tel: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96


KING Telecom

33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tel:03 44 55 41 59 Fax: 03 44 55 42 51

அனைத்துத் தொடர்புகளுக்கும்: 01 43 15 17 17 - விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18


# பா.ஜ.க கூட்டணி பெரும் வெற்றிபெறும் சோனியா பிரதமருக்கு போட்டியிட தயக்கம்

## கருத்துக்கணிப்பு கூறுகிறது



(16.08.99)

இந்தியாவிலிருந்து வெளிவரும் 'இந்தியா ருடே' இதழ் எதிர்வரும் இந்திய பொதுத் தேர்தல் தொடர்பாக நடாத்திய கருத்துக் கணிப்பு ஒன்றில் பாரதிய ஜனதா கட்சிகளின் கூட்டணி 322-ல் இருந்து 336- வரையிலான ஆசனங்களை பெறும் எனவும், காங்கிரஸ் கூட்டணி 132-ல் இருந்து 136 வரையிலான ஆசனங்களை மட்டும் பெறும் எனவும் தெரிவித்துள்ளது.

கார்கில் போர் தொடர்பான பிரதமர் வாஜ்பாயின் நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் அங்கீகாரம் அளித்ததால் அரசின் செல்வாக்கு அதிகரித்துள்ளதாகவும்ஆந்திரப்பிரதேசம், ராஜஸ்தான், தமிழ்நாடு, மகராஸ்டிரா, பீகார் ஆகிய மாநிலங்களில் பா.ஜ.கவின் தேசிய ஜனநாயக முன்னணியே வெற்றி பெறும் என குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இதைப்போன்று நடாத்தபட்ட கருத்துக்கணிப்புக்கள் பா.ஜ.கட்சியின் வெற்றியினை எதிர்வுகூறுவதால் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பிரதமமந்திரிக்கான தெரிவில் இழுபறி நிலவுகின்றது.

திருமதி சோனியா காந்தி பிரதமருக்கான வேட்பாளராக நிற்பதற்கு அச்சம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# படுவான்கரை நோக்கிய படைநகர்வு புலிகளால் முறியடிப்பு

(16.08.99)

மட்டக்களப்பு பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதிகளை நோக்கி நகர்ந்த சிறீலங்கா படையினர் விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதலினால் சில மணி நேரங்களிலேயே தமது முயற்சியைக் கைவிட்டு மீண்டும் முகாமுக்கு திரும்பினர். மட்டக்களப்பு நகரிலிருந்து 5 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள வவுணதீவு இராணுவமுகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளான படுவான்கரை கிராமங்களை நோக்கி பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பமானது. கனரக ஆயுதங்கள் டாங்கிகள் சகிதம் புறப்பட்ட இராணுவத்தினருடன் ராஸிக் குழுவினரும், புளொட் குழுவினரும் சென்றனர்.

வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து 4 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள 3ம் கட்டையில் விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவலரண்களை நோக்கி நகரமுனைந்த படையினரை நோக்கி புலிகள் தாக்குதலை தொடுத்தனர். புலிகளின் நடமாட்டங்களும் எதிர்ப்புகளும் அதிகமாக இருந்ததால் படையினர் இரவு 12 மணிஅளவில் தமது முன்னேற்ற நடவடிக்கைகளை கைவிட்டு பின் வாங்கி முகாமுக்கு திரும்பினர். இதேவேளை இவ் இராணுநடவடிக்கை காரணமாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்து நேற்று இராணுவ கட்டுப்பாட்டில்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# ஈழத் தமிழரின் எழுத்தும் பேச்சும் விளங்கிக்கொள்வது சிரமமானது

**- பாலகுமாரன் -**

தமிழகத்தின் உதவி இயக்குனர்களுடன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெரும் முரண்பாட்டினையும் அதன் பின்னர் தான் செய்தவற்றிற்கு பகிரங்க மன்னிப்பினையும் கோரிய தமிழகத்தின் எழுத்தாளர் பாலகுமாரன், தற்பொழுது ஈழத் தமிழர்களின் இலக்கியத்தினை நையாண்டி செய்யும் வகையில் கொழும்பில் பேட்டி ஒன்றினை வழங்கியுள்ளார். ஈழத் தமிழரின்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# புளொட் மாணிக்கதாசனுடன் இராணுவ அதிகாரி பேச்சு

(16.08.99)

சிங்கப்பூரிலிருந்து, சிறீலங்கா திரும்பிய புளொட் மாணிக்கதாசனுடன் சிறீலுங்கா இராணுவ அதிகாரிகள் பேச்சுக்களை நடாத்தியதாக தெரியவருகிறது. முன்னதாக வெளிவந்த செய்திகளில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் மாணிக்கதாசன் தேடப்பட்டு வந்தவரென தெரிவிக்கப்பட்ட போதிலும் நாடு திரும்பியதும் அதிகாரிகள் அவருடன் பேச்சுக்களை நடாத்தியது மாணிக்கதாசனின் நடவடிக்கைகளுக்கும் சிறீலங்கா அரசின் நடவடிக்கைளுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டென்பதை சுட்டிக்காட்டுகின்றது என, கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாணிக்கதாசன் இந்தியா

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# விடுதலைப் புலிகளின் அடுத்த இலக்கு திருமலைத்துறைமுகம் ?

திருமலைத் துறைமுகப்பகுதியை இலக்காகக்கொண்டு விடுதலைப்புலிகள் பாரிய திட்டமொன்றினை வகுத்து வருவதாக கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் அச்சமடைந்துள்ளன. சிறீலங்கா அரச இராணுவ இயந்திரத்தின் பிரதான தளமாக திருமலைத் துறைமுகம் தற்பொழுது விளங்குகிறது. திருமலைத் துறைமுகத்திலிருந்துதான் வடக்கிற்கான இராணுவ விநியோகமும் துருப்புக்களின் பரிமாற்றமும் இடம்பெறுகிறது. எனவே திருமலைத் துறைமுகம் விடுதலைப் புலிகளுக்குத் தற்பொழுது ஒரு முக்கிய இலக்காக மாறியிருப்ப

(தொடர்ச்சி 31ம் பக்கம்)


## சந்திப்போம்... வாருங்கள்!

சகோதரத்துவத்தின் சங்கமமாம் தமிழர் விளையாட்டு விழா–99 இல் உங்களை வரவேற்க காத்திருக்கிறது

ஈழமுரசின்

'உங்கள் இல்லம்'

22.08.99 இல் சந்திப்போம் வாருங்கள்!

* சிறுவர் புதிர் களம் (குட்டி மாமாவின் சமூகத்தோடு)
* பெரியவர்களுக்கான 'புதிர் முரசு' போட்டிக்களம்,
* புத்தக விற்பனைப்பகுதி
* ஈழமுரசின் ஆவணக் களம் இன்னும் பல...